# Emperor Edward

A FULL ACCOUNT OF THE LIFE HISTORY

OF

## His Most Gracious Majesty Edward VII.

BY

Pandit C. THIRUCHITTAMBALAM PILLAI.

[Author of Emperor Akbar, Manickavasagar, Mrs. Besant, Sri Ramachandra—The Ideal King, in Tamil etc.]

WITH AN INTRODUCTION BY

V. VENUGOPAL CHETTY Esquire, B.A., I.C.S.,

*District and Sessions Judge, Kistna.*

PUBLISHED BY

*C. K. Supramania Mudaliar B. A.*

MADRAS:

G. A. NATESAN & CO., PRINTERS, ESPLANADE.

1903.

[*All Rights Reserved.*]

PRICE. 12 ANNAS.

# எட்வர்ட் சக்ரவர்த்தி.

இஃது

கோயமுத்தூர்

பண்டிதர் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளையால்

இயற்றப்பட்டு

திருச்சிராப்பள்ளி செஷன் ஜட்ஜ்

மஹா-ள-ள-ஸ்ரீ.

வெ. வேணுகோபால செட்டியார், B.A., I.C.S.

அவர்கள் எழுதிய

முகவுரையுடன்

சென்னை:

ஜி. அ. நடேசன் அண்டு கம்பெனி அச்சுக்கூடத்தில்

பதிக்கப்பட்டது.

1903.

காபிரைட் ரிஜிஸ்டர்ட்

விலை, அணா. 12

118902

To

C. H. MOUNSEY Esq., I.C.S., Bar-at-Law

THE POPULAR

*COLLECTOR & DISTRICT MAGISTRATE OF COIMBATORE*

(BY KIND PERMISSION)

**This Work**

IS RESPECTFULLY DEDICATED AS A SMALL TOKEN OF SINCERE ESTEEM AND REGARD

NOT ONLY ON ACCOUNT OF THE GREAT INTEREST HE EVINCED IN THE WELFARE OF THE VERNACULAR LITERATURE OF SOUTHERN INDIA BUT ALSO

AS A MARK OF HIGH APPRECIATION OF THE DEEP SENSE OF LOYALTY HE INCULCATED IN THE MINDS OF HIS PEOPLE BY HIS NOBLE EXAMPLE.

V56,147M41
N03

# அட்டவணை.


| அத்தியாயம் | | பக்கம். |
|---|---|---|
| 1. | திரு அவதாரம் ... ... ... | 1 |
| 2. | ஞானஸ்நானமும் நாமகரணமும் ... | 8 |
| 3 | வளர்ப்பு ... ... ... | 11 |
| 4. | யுவர்த்தவராஜு ... ... | 23 |
| 5. | அமெரிக்க விஜயம் ... ... | 26 |
| 6. | கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலை ... ... | 42 |
| 7. | பிதாவிடம் ... ... ... | 46 |
| 8. | புண்யதேச யாத்திரை ... ... | 53 |
| 9. | திருமணம் ... ... ... | 59 |
| 10. | ஆரம்பதாம்பத்தியம் ... ... | 68 |
| 11. | பிரஜாபாயம் ... ... ... | 74 |
| 12. | இந்தியா விஜயம் ... ... ... | 83 |
| 13. | ரஜித விவாகம் ... ... ... | 126 |
| 14. | பிற்காலதாம் பத்தியம் ... ... | 132 |
| 15. | சிம்மாசன ஆரோகணம் ... ... | 140 |
| 16. | மகுடாபிஷேகம் ... ... ... | 155 |
| 17. | குணதிசயங்கள் ... ... ... | 164 |

# INTRODUCTION.

THE learned author of this little book who has already established his reputation by his valuable contributions to Tamil Literature scarcely needs an introduction to the public and it is with some diffidence I have accepted the privilege of saying a few words in the way of introducing him to the Tamil speaking public.

To oriental peoples the life of their sovereign is generally a sealed book and the present work which traces the career of our beloved sovereign from his childhood up to the present time is a novel departure calculated to open new vistas of thought and new ideals to the masses of Southern India. The life of our Emperor is sketched here in an interesting and instructive

manner and at the end there is a faithful and appreciative delineation of his character. The keen interest evinced by him in all public movements, his varied activity, his stern devotion to duty—above all, his love of the poorest of his subjects as well of the richest are fully brought out by our author in a manner which cannot but instruct and amuse Tamil readers. The book is besides illuminated by graphic touches and fascinating anecdotes and displays a vast amount of skill in the selection of materials available to him.

Biographical works of the kind are rare in Tamil which, unlike Bengali and a few other vernaculars of modern India, has not yet emancipated itself from conventional ideals. Our author has already led the way in this field of literature and must be congratulated on the signal success achieved by him in this fresh contribution to it.

The style of this excellent book is chaste and simple, avoiding the extremes of the pedantic and the homely, and there can be no doubt that



it will be welcomed by the Tamil speaking public. I sincerely trust that the accomplished author who has the gift of the portrait painter as well as that of the scientific historian will continue to enrich Tamil Literature with similar works.

MASULIPATAM,
19—2—1903.

V. VENUGOPAL CHETTY.

# எட்வர்ட் சக்ரவர்த்தி.

## முதல் அத்தியாயம்.

### திரு அவதாரம்.

இப்போது நம்மை ஆளும் ராஜசக்கிரவர்த்தியின் அவதாரத்தை ஆவலுடன் எதிர்நோக்கி இருந்த லண்டன்மாநகரின் குடிகளுக்கு அச்சப சம்பவத்தை அறிவிக்குமாறு அண்டங்கிழிய அதிர்வெடிகள் தீர்ந்து சற்றேறக்குறைய அறுபது வருஷங்களாகின்றன. 1841-ம் வருஷம் நவம்பர் மாதம் 9-ம் தேதி லண்டன்மாநகரத்துள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் நமது சக்கிரவர்த்தியார் அவதரித்தார். அன்று அதிகாலை 7-மணிக்கே காண்டர்பரி அத்தியக்ஷர், பிரதான மந்திரியார், வெல்லிங்டன் கோமகனார் முதலிய சமஸ்தானத்தின் பிரதான உத்யோகஸ்தர்களனைவரும் பக்கிங்ஹாம் அரண்மனைவந்து வீற்றிருந்தார்கள். நம் சக்கரவர்த்தியின் பாட்டியாரிகிய

கெண்ட்கோமகளார் 9-மணிக்கு வந்து சேர்ந்தார். காலஞ்சென்ற நமது விக்டோரியா சக்ரவர்த்தினியார் அன்று காலைமுதல் அதிகவேதனைப்பட்டுக்கொண்டிருந்தார். வைத்தியர்களுடன் பிரசூதிகாகிரகத்துள் இருந்த ஆல்பர்ட் மன்னர் அதிககவலைப்பட்டார். நல்லவேளையாகப் பகவானுடைய திருவருளால் யாதொரு கெடுதியுமின்றிச் சற்றேறக்குறைய 11-மணிக்கு சுகுமாரஜனனமாயிற்று.

பிறந்தவுடன் அழுகிறது குழந்தைகளெல்லாருக்குமே வழக்கந்தான்; ஆயினும் பிறந்தவுடன் அக்குழந்தை போட்ட சத்தம் இவ்வளவவ்வளவல்லவாம். அதைக்கண்டதும் ஆல்பர்ட் மன்னர் "இவன் கூப்பாட்டளவு இவனுக்குப் பசியும் இருந்துவிட்டால் செவிலிபாடு அம்பலந்தான்" என்று கூறினாராம்.

சுகப்பிரசவமானவுடனே கைத்தாய் அக்குழந்தையை எடுத்துக்கொண்டுபோய் அடுத்த அறையில் காத்து வீற்றிருந்த சமஸ்தான உத்யோகஸ்தர்களுக்குத் தரிசிப்பித்தாள். குழந்தையுங்கையுமாக வரும் கைத்தாயைக் கண்டவுடன் "அது என்ன பையனு?" என்று வெலிங்டன் கோமகனார் வாய்தப்பிக்கேட்டுவிட அவள் வெகுண்டு பையனு! இளவரசு ஐயா, இளவரசு எனக்கூறினள். பின்னர் வெலிங்டன் கோமகனார் முதலாக அங்கிருந்த உத்யோகஸ்தர்களனைவ



ரும் அத்திவ்ய சிசுவைக் கண்குளிரக் கண்டுமகிழ்ந்து பிரிடிஷ் சிம்மாசனத்துக்கு உரிமைவாய்ந்த புதல்வரின் ஜனனத்தைப் பற்றி உறுதிமொழி எழுதிக்கைச் சாத்திட்டார்கள்.

அக்குழந்தை அவதரித்த நாற்பத்தெட்டுமணி நேரத்துள் லண்டன் பட்டணத்தின் லார்ட்மேயர், ஷெரிப்புகள், கிழக்கத்திய ஞானிகள் என்ற இவர்களெல்லாரும் அவ்விளவரசின் சமூகத்தில் வந்து அடிபணிந்து சென்றார்கள். இந்த ஜனனத்தில் ஊரெங்கும் உவகையே மலிந்திருந்தது. காவற்சாலையிலும் களிப்பிற்குக் குறைவில்லை. ஏனென்றால் சிராகடந்து கொண்ட சிறைகளனைவரும் விடுதலையடைந்தார்கள். துவாரபாலகருக்குள்ளாகத்தான் சிறிது தகரார் இருந்தது. ஒரு காவற்காரன் அன்று 10-49 வரை காவலிருந்து சென்றான். அடுத்தவன் 10-49 க்குமேல் துவாரங்காத்தலை ஒப்புக்கொண்டான். ஆதலால் வழக்கமாகக் கிடைக்கவேண்டிய கவுரவத்தை யார் பெறுவது என்று அவர்களுக்குள் தகரார் உண்டாயிற்று. ஆயினும் சக்கிரவர்த்தியார் அவதரித்த நிமிஷத்தில் காவல் காத்திருந்தவன் முன்னவனே யாதலால் அவனே அக்கவுரவத்தை யடைந்தான். இச்சனன சம்பந்தமாக செஸ்டரிடனும் ஓர் விசேஷம் நடந்தது. அஃதென்னவென்றால் நம் சக்கிரவர்த்தியார் தம் ஜனன

மானசுழுனத்திலேயே ஏர்ல் ஆப் செஸ்டர் (செஸ்டரின் அதிபதி) ஆகின்றார். ஆகலின் அந்தப்பிரதேசத்தின் மேயரானவர் தமக்கு பேரோனெட் என்ற பட்டம் கிடைக்கவேண்டுமென்று கேட்டார். நமதரசரின் அவதாரம் மேயர்த்திருநாளன் றைக்காதலால் பிரதானியாயாதி காரிகளனைவரும் அவ்வவதாரம் நிகழ்ந்த சுழுனத்திலேயே தங்களெல்லாரையும் ஒரேபடி உயர்த்த வேண்டும் என்று கேட்டார்கள். அவ்வாறே அவர்களனைவர்க்கும் உயர்பதவிகள் உவப்புடன ளிக்கப்பட்டன.

நம் சக்கிரவர்த்தி தாம் அவதரித்த அன்றே கார்ன்வாலின் கோமகனர் (Duke of Cornwall) ஆயினர். இவ்வாதிபத்யமானது மூன்றாம் எட்வர்ட் அரசரால் தமது புதல்வராகிய கறுப்பினவரசர் (Black Prince) பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. அதன் பொருட்டு அவ்வரசர் அப்போது பிறப்பித்த சாஸனத்தில் "இவ்வாதிபத்தியத்தின் உரிமையை இனி இங்கிலாந்தின் ஆட்சியைக்கைக்கொள்ளும் அரசர்களின் ஜேஷ்டபுதல்வர்களொவ்வொருவரும் கைக்கொள்வார்களாக" என்று வரைந்திருந்தார். ஆதலால் அவ்வுரிமை வம்சபாரம்பரியமாக வந்து கொண்டிருக்கின்றது. இக்கார்ன்வாலின் ஆதாரிமையைக் கைக்கொள்பவர்களுக்கே அங்கிருந்து வீட்வேரி அரசிறை முதலியவை



னால் வருஷந்தோறும் அறுபதினாயிரம் பவுன் வருமானம் வரும்.

அவ்வாறே டியூக் ஆப் ரோத்சே, (Duke of Rothesay) ஏர்ல் ஆப் காரிக், (Earl of Carrick) பாரன் ஆப் ரென்ப்ரூ (Baron of Renfrew) லார்ட் ஆப் தி ஐல்ஸ் (Lord of the Isles) கிரேட் ஸ்டூவார்ட் ஆப் ஸ்காட்லண்ட், (Great Steward of Scotland) என்றபட்டங்களுக்குங்கூட அவர் பிறந்தவுடனே உரியவர் ஆயினர். ஆனால் பிரின்ஸ் ஆப் வேல்ஸ், ஏர்ல் ஆப் செஸ்டர் என்பவை மட்டும் அவ்வாறு உடனே அகப்படவில்லை. ஒரு மாதம் கழிந்துதான் கிடைத்தன, ஏனென்றால் அவைகள் அரசரின் இஷ்டப்படி தரவும் தவிர்க்கவும் தக்கதாக இருக்கின்றனவேயன்றி மேற்காட்டியவைகளைப்போல வம்சபாரம்பரியமாக வரத்தக்கனவாக இருக்கவில்லை. ஆதலின் நமது விக்டோரியா சக்ரவர்த்தினியார் 1841 டிசம்பர் 14ல் அவற்றைத் தம்புதல்வர்க்களித்தருளினர். அவர் அது விஷயமாக அப்போதெழுதிப் பகிரங்கப்படுத்திய சாஸனத்தில் "கிரேட் பிரிட்டன் அயர்லண்டு என்பவைகளை யுட்கொண்ட ஐக்கிய ராஜ்யத்தின் இளவரசனும் டியூக் ஆப் சாக்ஸனி, டியூக் ஆப்கார்ன்வால் அண்ட் ரோத்சே, ஏர்ல் ஆப் காரிக், பாரன் ரென்ப்ரூ, லார்ட் ஆப் தி அய்ல்ஸ், கிரேட் ஸ்டூவார்ட் ஆப் ஸ்காட்லண்ட் என்ற பட்டங்

களைத் தரித்திருப்பவனும் ஆகிய நமது அன்பான புதல்வனுக்கு, ப்ரின்ஸ் ஆப் வேல்ஸ் ஆகவும் எர்ல் ஆப் செஸ்டராகவும் பட்டங்கட்டி, அவன் அந்தப் பிரதேசங்களை ஆண்டு ஆதரித்து வருவதற்காக அவன் முடியிற் கிரீடஞ்சூட்டி, அரையில் கத்தியைக் கட்டி, விரலில் பொன்மோதிரம் போட்டுக் கையிலோர் பொற்செங்கோலும் தந்திருக்கின்றோம். இதைக் கோமான்களும் குமாரர்களும் முதலாகிய நமது பிரஜைகள் அனைவரும் அறிவீர்களாக" என்று கருத்தடங்கிய வாசகங்கள் வரையப்பட்டிருந்தன.

தேக இடத்திலும் புத்திசாதுர்யாதிகளிலும் தமது புதல்வர் தமது நாயகராகிய ஆல்பர்ட் மன்னரை ஒத்திருக்கவேண்டுமென்பது நமது விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் கோரிக்கையாக இருந்தது. அவர் தமது புதல்வர் ஜனித்த ஒரு மாதத்திற்கெல்லாம் தமது மாதுலராகிய லியோபால்ட் என்னும் பெல்ஜிய வேந்தர்க்கு எழுதிய நிருபமொன்றில் "எனது சிறுவன் யாரைப்போல் ஆவானோ தெரியவில்லை, அவன் தன் உடலிலும் உள்ளத்திலும் ஆகிய எல்லாவற்றிலும் தன் தந்தையைப்போல ஆகவேண்டுமென்பதே என்னுடைய பிரார்த்தனை. மற்றவர்களுடைய பிரார்த்தனையும் அவ்வாறே இருக்குமென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை" என்று வரைந்திருக்கின்றார். ஆனால் இப்பிரார்த்தனை



யில் ஓர்பகுதிதான் நிறைவேறியது, எனென்றால் தேகஇட விஷயத்தில் நம் சக்ரவர்த்தி தம தந்தையாரையே போன்றிருக்கின்றாரென ஆதிமுதற்கொண்டே அனைவரும் கூறுகின்றனர்.

## இரண்டாம் அத்தியாயம்.

---

# ஞானஸ்நானமும் நாமகரணமும்.

---

சக்ரவர்த்தியின் ஞானஸ்நானம் அவர் அவதரித்த ஆறுவாரங்களுக்குப்பின் நடந்தது. ராஜகுடும்பத்தைச்சார்ந்த குழந்தைகளின் ஞானஸ்நானங்களெல்லாம் அரண்மனையிலேயே நடப்பதுதான் முன் எப்போதும் வழக்கம். ஆனால் தங்களருமைப் புதல்வரின் ஞானஸ்நானம் தேவாலயத்தில் நடக்கவேண்டுமென்று நமது சக்ரவர்த்தியின் பெற்றோர்கள் விரும்பினார்கள். ஆதலின் அது வின்ட்சரைச்சார்ந்த செயின்ட்ஜார்ஜ் தேவாலயத்தில் அதிவிமரிசையாக நடந்தது. பிரஷ்யவேந்தர், ஸாக்ஸ்கோபர்க் கோமகனார் முதலியோர் நமது சக்ரவர்த்தியாகிய குழந்தைக்கு ஞானத்தாய் தந்தையர்களாக ஏற்பட்டார்கள். காண்டர்பரியின் பிரதான அத்தியக்ஷர் (Archbishop of Canterbary) யோர்தான் நதியின் தீர்த்தத்தால் ஞானஸ்நானங்கொடுத்தார். சாதாரணமாக ராஜகுடும்பங்களில் நாமகரணம் செய்வதென்றால் பலபெயர்களுடைய பெயர்களை ஒன்றாய்ச்சேர்த்து மிக நீண்ட



பெயராக இடுவார்கள். ஆனால் நம் சக்ரவர்த்திக்கு அப்படி ஏற்படவில்லை, அவரது பிதாவும் மாதாமகரும் ஆகிய இருவர்பெயர்களைமட்டும் சேர்த்து ஆல்பர்ட் எட்வர்ட் என்றேபெயரிட்டார்கள். அச்சமயத்திற் பாடுதற்கென்று சர்ஜார்ஜ் எல்வே என்பவர் புதிதாக ஓர் ஞானப்பாட்டை இயற்றியிருந்தார். ஆனால் அதைப்பற்றி ஆல்பர்ட் மன்னரிடம் அறிவித்தபோது அவர் "புதுப்பாட்டு ஒன்றும் இப்போதுவேண்டாம். ஏனென்றால் புதியபாட்டைப்பாடினால் ஆலயத்தைவிட்டுத் திரும்பிச்செல்லும் வழியில் நம்முட்சிலர் அப்பாட்டைப்பற்றிக் குற்றங்குறைசொல்லிக்கொண்டு செல்ல நேரும். அன்றியும் அதனை இப்போது அனைவரும் ஒருமித்துப்பக்தியுடன் பாடவுமாட்டார்கள். ஆகலால் அனைவரும் பக்திவிசுவாசத்துடன் ஒருமித்துப்பாடத் தக்கதாகப் பழயகீதங்களுள் ஒன்றைப்பாடுதலே நலம்" என்றுரைத்துவிட்டார். ஆதலின் அன்று இறுதியில் "அல்லலூயா" என்றபல்லவியையுடைய பழய கீதத்தையே பக்தியுடன்பாடி முடித்தார்கள். அன்று அந்த செயின்ட்ஜார்ஜ் ஆலயம் கொடிகள் முதலியன நாட்டப்பெற்று அதிவிநோதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. விக்டோரியா சக்ரவர்த்தினியாரே தமது தினசரியில் "வேதிகையண்டைத் தீபம் பிரகாசிக்கப் பலவகைக்கொடிகள் வாத்தியங்கள் என்பவற்றுடன்

அந்த அழகான பழங்கோவிலில் இன்று விளங்கிய காட்சிகள் ஒவ்வொன்றையும் எடுத்து வர்ணிப்பதென்றால் அது மிகவும் அசாத்தியமானதாகவே காணுகின்றது," என்று எழுதியிருக்கின்றார். அந்த ஞானஸ்நாநோற்சவவிமரிசையில் இரண்டு லக்ஷம்பவுன் அதாவது முப்பது லக்ஷம் ரூபாய் செலவாகியிருக்கின்றதென்றால் அதன் வைபவங்களையெல்லாம் தனித்தனி எடுத்துரைக்க யாராலியலும்? சக்ரவர்த்தியின் ஞானஸ்நான விருந்துக்காகச் செய்ததோர் பலகாரத்துண்டைச் சிலவருஷங்கள்கழித்து ஏலம்போட்டபோது அதைச்சிலர் அதன் நிறைக்கு இருபதுமடங்கு நிறையுள்ள பொன்னுக்கு மதிப்பிட்டு எடுத்துக்கொண்டார்கள் என்றால் அவ்வுற்சவத்தின்போது ஜனங்களுக்கிருந்திருக்கக்கூடிய ஆவேசத்தையும் கொண்டாட்டத்தையும் இவ்வளவென்று மதிப்பிட்டுரைக்க முடியுமா?

தங்கள் குழந்தைகளின் வளர்ப்பறை வர்த்தமானங்களையும் வெளியாகாவண்ணம் விக்டோரியா சக்ரவர்த்தினியாரும் அவரது நாயகரும் ஆதியிலேயே கண்டிப்பாக ஏற்பாடு செய்துவிட்டார்களாதலால் நமது சக்ரவர்த்தியின் சைசவ சரித்திரம் உலகுக்கெட்டவில்லை.

## மூன்றாம் அத்தியாயம்.

### வளர்ப்பு.

சக்ரவர்த்திக்கு நான்குமாதமுங்கூட ஆகியும் ஆகாமலுமாக இருக்கும்போதே பாரன்ஸ்டாக்மர் என்னும் ஜெர்மானியபண்டிதர் குழந்தைகளின் பயிற்சி விஷயமாக ஓர் நீண்ட லிகிதமெழுதியனுப்பினார். அண்டையிலிருப்போரது நடையுடை பாவனைகளை நன்கு கவனித்துத் தாமும் அவ்வாறொழுகமுயல்வதே குழந்தைகளின் இயற்கையாதலின் நற்குடிப்பிறப்பும் நல்லொழுக்கமுமுடையாரையே தேர்ந்து செவிலியாக ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் அக்கடிதத்தில் அவர்காட்டியிருந்த நோக்கம். விக்டோரியா சக்ரவர்த்தினியாரும் இக்கருத்தேதான் கொண்டிருந்தார். அவர் பின்பு இதுவிஷயமாக லார்ட்மெல்போர்னுக்கு ஓர் நிருபம்வரைந்தார். அதன் சுருக்கம் வருமாறு.

விண்ட்சர் அரண்மனை,
24 மார்ச்சு, 1842.

நமது குழந்தைகளின் பராமரிப்புக்காகச் செவிலியை நியமிக்கும் விஷயமாக நாங்கள் இப்போது கவ

லைப் பட்டுக்கொண்டிருக்கின்றோம். இயல்பாகவே அது எங்களுக்கு அதிக சங்கடமாகத்தான் இருக்கின்றது. நீர் நமது அத்தியந்தப்பிரீதியுள்ள நண்பராக இருந்தலால் இது விஷயத்தில் உமது அபிப்பிராயத்தை அறிய விரும்புகின்றோம். இப்போதிருக்கும் ஏற்பாடு சரியானதல்ல, அதை மாற்றத்தான் வேண்டும். ஆனால் எவ்விதமாக ஏற்பாடுசெய்தால் அனுகூலமாக இருக்கும் என்பதைக் கண்டுபிடிப்பதுதான் கஷ்டமாக இருக்கின்றது. . . . . விவேகமுள்ள மற்ற தாய் தந்தையர்களைப் போலவே நாங்களும் எங்கள் குழந்தைகளின் மேற்பார்வையை நாங்களே வைத்துக்கொண்டு நடத்தலாமென்றால் எங்களுக்கேற்பட்டிருக்கும் வேறு வேலைகளின் மிகுதியால் இதைச் சரிவர நடத்த இயலாதவர்களாக இருக்கின்றோம். ஆதலால் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஓர் சீமாட்டியைத் தேர்ந்து இவ்வேலையில் அமர்த்தவேண்டுமென்று பரோன்ஸ்டாக்மார் என்ற நண்பர் எழுதுகின்றார். தக்க அந்தஸ்துள்ள ஓர் சீமாட்டியைச் செவிலியாக நியமித்து அவளுக்குக் கீழே ஓர் உதவிச்செவிலியையும் நியமித்துவிடுவது உத்தமமென்று அவர் சொல்லுகின்றார். அது வாஸ்தவந்தான். ஆனால் நாம் விரும்புகிற லக்ஷணங்களோடுகூடிய தக்க அந்தஸ்துள்ள சீமாட்டியை எங்கே கண்டுபிடிக்கின்றது? அப்படி ஒருத்தி அகப்பட்டாலும்



அவள் தன் இதர நண்பராதியாது கூட்டுறவை அறவேயொழித்துவிட்டுக் குழந்தைகளின் வளர்ப்புச்சாலையே கதியாக அடைபட்டிருக்க இசைவாளா? உண்மையில் குழந்தைகளின் வளர்ப்பில் ஏற்படுவதென்றால் ஏற்படுகிறசெலவில் எந்நேரமும் அவர்களோடிருந்தால்தான் அவர்களது நடை உடை பாவனைகளைச் சரியானபடி கவனித்து வரமுடியும். எனக்கும் சாரலோட்டி ராஜகுமாரி முதலியோர்க்கும் ஏற்பட்டிருந்தாற்போல வெறும் பெருக்குமட்டும் செவிலி என்று ஒருத்தியை நியமிப்பதில் உபயோகமில்லை. குறைந்த அந்தஸ்துள்ள ஒரு ஸ்திரீயை இவ்வேலையில் நியமிக்கலாமென்றால் குழந்தைகளைச் சரியானபடி பயிற்ற அவளால் முடியாது. குழந்தைகளும் அவளுக்கு அடங்கி நடக்கமாட்டார்கள். இது விஷயமாக உம்முடைய அபிப்பிராயமென்ன?"

பாரன் ஸ்டாக்மாரைப்போலவே லார்ட்மெல்போர்னும் விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் கருத்துக்கொத்த கருத்துடையவராகவே இருந்தார். ஆகவே ஏப்ரில் மாதத்தில் லேடிலிட்டில்டன் என்னும் சீமாட்டியைத்தேர்ந்து பிரதான செவிலியாக நியமித்தார்கள். கிளாட்ஸ்டன் துரைசானியின் சகோதரியாகிய அச்சீமாட்டியும் அவ்வேலையை அதிக சிரத்தையாகவும் சமர்த்தாகவும் நிர்வகித்துவந்தார். குழந்தைகளும்

அவரை அதிக அன்போடு நேசித்து வந்தார்கள். அந்த லிட்டில்டன் சீமாட்டிதான் நம் சக்கிரவர்த்தியின் ஆதியப்பியாசங்கள் சீர் பெற அமைதற்குக் காரணராக இருந்தவர். ஏழாம் வயதுவரை நம் சக்ரவர்த்தியை அச்சீமாட்டியே பரிந்தி வந்தார். பின்பு அவரது பெற்றோர்கள் பாரன் ஸ்டாக்மர் முதலிய நண்பர்களது ஆலோசனையின்படி அவர்க்குச் சரியானபடி கல்வி கற்பிக்கவேண்டி அக்காலத்தில் பல விஷயங்களிலும் சிறந்து விளங்கிய ஹென்றி பேர்ச் என்னும் பாதிரியாரை ஆசிரியராக நியமித்தார்கள். சக்ரவர்த்தியும் அவ்வாசிரியரிடம் அதிக பக்தி சிரத்தையுடையவராகக் கல்வி பயின்று வந்தார்.

1849-ம் வருஷத்திய கோடைகாலத்தின்போது நமது சக்ரவர்த்தி தமது பெற்றோர்களுடன் முதன் முதலாக அயர்லாந்து தேசத்துக்கு விஜயம் செய்தார். அத்தேசத்தவர்கள் அதிக குதூகலத்துடன் இவர்களது நல்வரவைக் கொண்டாடி இவர்களை உபசரித்தார்கள். அது காரணமாக நமது விக்டோரியா சக்ரவர்த்தினியார் தமது புதல்வராகிய நமது சக்ரவர்த்திக்கு "ஏர்ல் ஆப் டப்ளின்" என்ற பட்டந்தந்தார். நம் சக்ரவர்த்தி அதற்கு முன்பாகத் தமது ஐந்தாம் வயதிலேயே கார்ன்வால், வேல்ஸ், ஸ்காட்லண்ட் என்ற இடங்களுக்கும் தம் பெற்றோர்களுடன் விஜயஞ் செய்து



அவ்வவ்விடத்துப் பிரஜைகளால் உபசரிக்கப் பெற்றிருக்கின்றார். ஆயினும் லண்டன் மாநகரத்துப் பிரஜைகளுக்குமட்டும் 1849 அக்டோபர் 30 வரை அந்தப் பாக்கியம் சித்திக்கவில்லை. அன்று "கோல் எக்ஸ்சேஞ்ஜ்" மண்டபப்பிரதிஷ்டைக்காக விக்டோரியா சக்ரவர்த்தினியார் விஜயம் செய்யவேண்டியதாக ஏற்பட்டிருந்தது. ஆனால் அந்நாளில் அவர்க்குத் தேகாரோக்கியமில்லாமற்போனதால் அவர்க்குப் பிரதியாக நமது சக்ரவர்த்தியை அவரது தந்தையார் அழைத்துச்சென்றார். அப்போது அவர்க்கு நடந்த உபசாரங்களையெல்லாம் சக்ரவர்த்தியார் இன்னும் ஞாபகத்தில் வைத்திருக்கின்றார். காணும் விஷயங்களையெல்லாம் கருத்தாய்க்காண்பதும் கண்டவற்றையெல்லாம் மறவாது கருத்துளிருத்துவதும் நம் சக்ரவர்த்திக்கு சைசவ முதற்கொண்டே அமைந்திருந்த கோரியல்பு. இதை அவரை அவரது சைசவ நிலையில் காணும் பாக்கியம் பெற்றோர் அனைவரும் கண்டுரைத்திருக்கின்றார்கள். நம் சக்ரவர்த்தி ஐந்து வயதுக்குழந்தையாக இருந்தபோது பூதத்வசாஸ்திரத்தில் மகா நிபுணராகிய சர்சார்ள்ஸ் லியல் என்பவர் மகா ராணியாரைத் தரிசிக்குமாறு விண்ட்சர் அரண்மனைக்குச் சென்றார். அவர் செல்வதற்குச் சற்று முன்பாக அங்கே ஜாலவித்தையில் பிரசித்தி பெற்ற ஆண்டர்சன் என்பவர் சென்று

ஜாலத்தில் தமக்குத் தெரிந்த வித்தைகளை யெல்லாஞ் செய்து காட்டி மகிழ்வூட்டிச் சென்றிருந்தனர். உடனே சர்சார்லெஸ்லியல் செல்லவே சற்றுமுன் நடந்த ஜாலவித்தையைப் பற்றிப் பிரஸ்தாபம் நிகழ நேர்ந்தது. அப்போது ஐந்து வயதுக்குழந்தையாக இருந்த நம் சக்ரவர்த்தி "அந்த ஜாலவித்தைக்காரன் என் அம்மாளுடைய கைத்துண்டை வாங்கித் துண்டு துண்டாய்க் கிழித்துவிட்டு மீட்டும் அதை இழையோட்டிவெளுத்து முன்போலவே ஆக்கிவிட்டான். பின்பவன் ஓர் கைத்துப்பாக்கியை எடுத்துச் சுட்டு ஐந்தாறு கைக்கடியாரங்களை கிப்பின் (கிப் பென்பவன் மகாராணியாரின் வேலைக்காரர்களுள் ஒருவன்) தலைக்குள் செலுத்தினன். ஆனால் இவைகளை யெல்லாம் அவன் எப்படிச் செய்துகாட்டுகிறான் என்பது என் தந்தைக்குத் தெரியும். ஆனால் உண்மையான்படியே அந்தக் கடிகாரங்கள் கிப்பின் தலையுள் நுழைந்திருக்க மாட்டாதென்றெண்ணுகின்றேன். இல்லாவிட்டால் அவன் அவ்வளவு சாதாரணமாக எப்படியிருப்பான்" என்று அந்த ஜாலவித்தையைப் பற்றி விவரித்தார். அவ்வாறே பிரதான அத்தியக்ஷராகிய பென்சன் என்பவரும் நம் சக்ரவர்த்தியைக் குழந்தைப் பருவத்தில் கண்டு அவரது புத்தி சூக்ஷ்மத்தைக்குறிப்பிட்டு வியந்திருக்கின்றார். அவர் தாயன்னைக்கு 1847 செப்டெ



ம்பர் 15-ல் எழுதிய நிருபத்தில் "வேல்ஸ் இளவரசர் அழகான உருவுடைய குழந்தை. அவரது முகத்தை பார்த்தால் அவர் அதிகசாந்தமும் ஆழ்ந்தகருத்தும் உடையவராகத் தோற்றுகின்றது. அவருடைய வயதுக்கிருக்கவேண்டிய அளவுக்கதிகமாகவே அவருக்கு அறிவு விளங்குவதாகக் காணுகின்றது. நாவிக உடையுடன் எடுக்கப்பட்டிருக்கும் அவரது படம் நேர்த்தியாகத்தானிருக்கின்றது. ஆனால் அது அவரது மண்டைக்குள்ளிருக்கும் குசாக்கிரமதி நுட்பத்தைக்காட்டுகிறதில்லை." என்று வரைந்திருக்கின்றார்.

1852 ஜூனில் மிஸ்டர் ஹென்றிபேர்ச் தமது ஆசிரியத்தொழிலைப் பரித்தியாகஞ்செய்துவிட்டார். அவ்வாறு அவரைப்பிரிய நேர்ந்ததில் அவரது மாணவகராகிய சக்ரவர்த்திக்குண்டாகிய மனவருத்தம் இவ்வளவவ்வளவல்ல! பின்பு டாக்டர் கிப்ஸ்துரையை அவ்வேலைக்கு நியமித்தார்கள். அவர் 1858 வரை அவ்வேலையில் அமர்ந்திருந்தார். அந்த ஏழுவருஷ காலமும் தமது மாணவகரைவிட்டுச் சிறிது நேரமும் கூடப்பிரியாது உடனிருந்து கற்பித்துவந்தார்.

நம் சக்கிரவர்த்தி தமது 12-வது வயதில் தமதன்னையாருடன் பார்லிமெண்ட் மகாசபைக்கு முதன் முதல் விஜயஞ்செய்தார். அப்போது அங்கே கிரிமியா யுத்த விஷயம் பிரஸ்தாபிக்கப்பட்டது. அந்தப் பிரஸ்தாப

மும் அதன் பின்னர் நடந்த சனயுத்தமும் இன்னும் நம் அரசரின் உள்ளத்தைவிட்டகன்றதில்லை. அவர் இயல்பிலேயே அதிக இரக்கமும் குத்து வெட்டுச் சண்டைகளில் அதிக அருவருப்புமுடையவர். அந்தக் கிரிமியாயுத்தத்தின்போது அது சீக்கிரத்தில் முடிவெய்தவேண்டுமென்று அதிக கவலைப்பட்டுக்கொண்டிருந்தார். அந்த யுத்தத்தில் காயம்பட்டுவந்த வீரர்களைக்கண்டு ஆறுதல் சொல்லும்பொருட்டு 1855 மார்ச்சில் அவரது பெற்றோர்கள் செல்லுங்கால் அவர்களுடன் தாமும் வைத்தியசாலைக்குச் சென்றார்.

அவரது பரோபகார சிந்தைதனைக்காட்டுதற்கும் அப்போது ஓர் சம்பவம் நிகழ்ந்தது. அப்போது நிகழ்ந்ததோர் சண்டைக்கு ராஜகுடும்பத்தாரிருந்து சித்திரம் எழுதுவதிற்றேர்ந்தோர் பலரும் ஒவ்வோர்படம் எழுதியனுப்பினார்கள். நமது அரசரும் ஓர் படம் எழுதியனுப்பினார். அவைகளுள் நமதரசர் அனுப்பியபடமே சிறந்ததாக இருப்பதுகண்டு மதிப்பினர்கள் அதை 55 கினிக்கு அதாவது சற்றேறக்குறைய 866 ரூபாய்க்கு மதிப்பிட்டார்கள். நமதரசர் அத்தொகையை கிரிமியாயுத்தத்தில் காயம்பட்ட வீரர்களுக்குதவிக்கும் விஷயமாக அப்போதேற்பட்டுக்கொண்டிருந்ததோர் யுத்த நிதிக்குபகரித்துவிட்டார்.



கிரிமியா யுத்தம் முடிவெய்தியபின் 1855 ஆகஸ்டில் நம் சக்ரவர்த்தியும் அவரது தமக்கையும் தம்பெற்றோர்களுடன் பிரான்ஸ் தேசஞ்சென்றார்கள். அங்கே பிரான்ஸ் சக்ரவர்த்தி இவர்களையெல்லாம் அதிக சந்தோஷத்துடன் எதிர்கொண்டழைத்துச்சென்று மிகவும் அன்புடன் உபசரித்தார். இவர்களெல்லாரும் அங்கே எட்டுநாள்வரைத் தங்கியிருந்தார்கள். நம் சக்ரவர்த்திக்கும் அவரது தமக்கையாருக்கும் பிரான்ஸைவிட்டுச் சீக்கிரம் புறப்படப்பிரியமில்லை. ஆதலால் அவ்விருவரும் அத்தேசத்தின் சக்ரவர்த்தினியை நோக்கித் தம் பெற்றோர்கள் புறப்பட்டுப்போன பின்னரும் இன்னுஞ் சில நாள் வரைத் தாங்கள் பிரான்சில் தங்கியிருக்கத்தக்கதாக அவர்களிடமிருந்து உத்தரவு வாங்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அச்சக்ரவர்த்தினியார் தொந்தரவாயிருக்கும் பின்னர் உங்கள் பெற்றோர்கள் உங்களைப்பிரிந்திருக்கமாட்டார்கள் என்று விடைகூறினார். அதற்கு நம் சக்ரவர்த்தி "நாங்களில்லாமல் இராதா அவர்களுக்கு? அப்படி கிடையாதே. அங்கே வீட்டில் இன்னும் ஆறு குழந்தைகளிருக்கின்றார்கள். ஆதலால் அவர்களுக்கு நாங்கள் இருந்தே தீரவேண்டுமென்பதில்லை." என்றுரைத்தார். ஆயினும் "இவ்விருப்பம் நிறைவேறவில்லை என்பது சொல்லவேண்டுவதில்லை. குழந்தைகளி

ருவரும் தம் பெற்றோர்களுடன் வந்து சேர்ந்தார்கள்.

நம் சக்ரவர்த்தி தமக்குப் பதினைந்து வயதானதும் மிஸ்டர் கிப்ஸ், கர்னல் கெவன்டிஷ் என்பவர்களைத் துணைசேர்த்துக்கொண்டு ரகசியத்தில் கால்நடையாகச் சென்றே இங்கிலாந்தின் மேற்குப்பிரதேசங்களை யெல்லாம் பார்த்துவந்தார். இவ்வாறு பலவேறிடங்களுக்குப்போய் வருவதில் நம் சக்ரவர்த்திக்கு அதிக விருப்பம். "பெர்டி (பெர்ட்டி என்பது சக்ரவர்த்தியின் செல்லப் பெயர்)யின் யாத்திரைகளெல்லாம் இதுவரைச் சீராகவே நடைபெற்றுவருகின்றன. அப்படி யாத்திரைபோவதில் அவனுக்கு அதிக உற்சாகமிருப்பதாகக் காண்கின்றது," என்று ஆல்பர்ட் அரசர் பாரன் ஸ்டாக்மருக்கு எழுதியிருக்கின்றார். பின்னர் 1857 ஜூலை 26-ல் நம் சக்ரவர்த்தி ஜெர்மனிக்கும் புறப்பட்டுப்போய் அங்கே கொஞ்சகாலம் தங்கியிருந்து திரும்பினார். அவ்வாறு அவர் ஜெர்மனியிலுள்ள கோனிக்ஸ்வின்டருக்குச்சென்றது வித்யாப்யாசத்தின் பொருட்டேதான். அப்போது அவரது வித்யாபோதகர்களாக உடன்சென்ற ஜெனரல் கிரே, கர்னல் H. பன்ஸன்பை, மிஸ்டர் கிப்ஸ், ரெவரெண்ட் சார்லஸ் டார்வர், டாக்டர் ஆர்ம்ஸ்டராங், என்பவர்களையன்றிப் பின்னர்த் தோழர்களாக அங்குச்சென்ற மிஸ்டர் W. கௌட்



ஸ்டன், லார்ட் ஹாலிபாக்ஸ், லார்ட் டேர்லை என்பவர்களும் அவருடன்கூடவே அங்கே தங்கியிருந்தார்கள். 1858-ல் மிஸ்டர் கிப்ஸ் தம்வேலையைவிட்டு விட்டார். பின்னர் அவர்க்குப்பதிலாக மிஸ்டர் டார்வர் என்பவர் சக்ரவர்த்திக்கு ஆசிரியராக நியமிக்கப்பெற்றார்.

1858-ல் நம் சக்ரவர்த்தி திடப்படுத்தப்பட்டார். (திடப்படுத்தல் என்பது கிறிஸ்தவ வாலிபர்கள் உரிய வயதுவந்து பாவபுண்ணியம் சுவர்க்க நரகம் முதலியவைகளைப்பற்றிய ஞானமடைந்தபின்னர் பெரியோரை அடைந்து தாம் தமக்கு ஆதியில் ஞானஸ்நானத்தின் போது தமது ஞானத்தாய்தந்தையர்கள் அளித்திருக்கும் வாக்கின்படியே சன்மார்க்கநெறி பிறழாதிருப்பதாக உறுதிமொழி கூறும் சடங்கு) ஆல்பர்ட் அரசர் 1858 ஏப்ரில் 2-ல் பாரன் ஸ்டாக்மருக்கெழுதிய லிகிதத்தில் அச்சடங்கு நடந்த திருப்திகரமான விதத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார். அக்லிகிதத்தில் அவர் "வேல்ஸ் இளவரசனின் திடப்படுத்தலின்போது பாமர்ஸ்டன், ஜான்ரசல், டேர்லை என்ற மூன்று பிரபுக்களும் வீற்றிருந்தார்கள். அவன் அதிக பக்திசிரத்தையுடன் தன்காரியத்தை நிறைவேற்றினான். முன்னையதினத்தில் நாங்களும் பிரதான அத்தியக்ஷரும் வீற்றிருக்கையில் அவன் பரீக்ஷிக்கப்பட்டான். வெல்லஸ்லிதுரை அவனை ஒரு மணி நேரம்வரைப் பரீக்ஷித்தார். அவரு

டையவர்களுக்கெல்லாம் அவன் வெகு நேர்த்தியாக விடையளித்தான்." என்றெழுதியிருக்கின்றார். திடப்படுத்தல் நிகழ்ச்சி நடந்த தினத்தில் நம் சக்ரவர்த்தி தம் தாய்தந்தையர்களுடன் பரிசுத்த நற்கருணை யடைந்து மகிழ்ந்தார்.

## நான்காம் அத்தியாயம்.

---

## வயது வந்தவரானது.

---

1858 நவம்பர் 9-ல் சக்ரவர்த்தி வயதுவந்தவராகிச் சட்டப்படி பட்டத்துக்குப் பாத்தியஸ்தராயினார். அன்று அவரது தாயார் அவர்க்கோர் அருமையான நிருபம் எழுதியனுப்பினார். அவர் அதில் "குழந்தாய்! உன்படிப்புவிஷயத்தில் நாங்கள் இதுவரை அதிக கண்டிப்பாக இருந்தோமென்று நீ ஒருவேளை நினைக்கலாம். உன்க்ஷேமத்தை உத்தேசித்தே நாங்கள் அவ்வாறிருந்ததேயன்றி வேறல்ல. இந்தக் காலத்தே உன்னைப்பலரும் சூழ்ந்துகொண்டு முகஸ்துதி முதலியவற்றால் மயக்க முயல்வார்களென்பது சகஜமாதலால் நீ அவைகளிலெல்லாம் மதிமயங்கி மோசம்போகாது திடசித்தமுடையவனாக இருக்கவேண்டுமென்று விரும்பியே ஆதிமுதல் நாங்கள் உன்பயிற்சி விஷயத்தில் சிறிது கண்டிப்பாக இருந்தோம். இன்று முதற்கொண்டோ நீ வயது வந்தவனாகிவிட்டாய். இனி உனக்கு நீயே எஜமானன். ஆதலால் நானாவது உன்பிதாவாவது இனி முன்போல இப்படிச்

செய்யவேண்டும் அப்படிச் செய்யவேண்டும் என்று
உனக்குப் புத்திகற்பிக்கத் துணியோம். ஆயினும் எவ்
விஷயத்திலாவது எங்களுடைய ஆலோசனையைக்
கேட்டு நடக்கவேண்டுமென்று விரும்பி நீயாக எங்க
ளைக் கேட்பதாக இருந்தால் எந்த விஷயத்திலும் அன்
போடுரைக்கச் சித்தமாகக் காத்திருக்கின்றோம்."
என்ற கருத்தடங்கிய வாக்கியங்களை எழுதியிருந்தார்.
அத்திருமுகத்தைப் பிரித்துப்பார்த்ததும் நம் சக்ரவர்
த்திக்குக் கண்ணீர் ஆறுகப்பெருகியது. அத்தினத்தி
லேயே அன்னை விக்டோரியா சக்ரவர்த்தினியார் தம்
சேனையத்தில் ஓர் கர்னலாக நியமித்து அதற்குரிய
முத்திரையையும் தந்தார்.

நம் சக்ரவர்த்தி அடுத்தமாதத்தில் ஊர்விட்டுப்
புறப்பட்டு அதிக ஆடம்பரமின்றிச் சாமான்யமாக
பாரன் ரென்ப்ரூ என்ற பெயருடன் ஐரோப்பாகண்ட
யாத்திரைக்குச் சென்றார். அவர் ரோமில் சிலகாலம்
தங்கி போப்பைத் தரிசித்து மகிழ்ந்தார். இவ்வாறு
முன் எவ்வேந்தரும் போப்பைச்சென்று தரிசித்த
தில்லை. பின்பு அவர் தம் பிதாவின் கட்டளைப்படி
உடனே அதைவிட்டுப் புறப்பட்டு மேமீ 7-ம் ஜிப்ரால்
டரைச்சேர்ந்து தெற்குஸ்பெயின், லிஸ்பன், என்பவை
களைப்பார்த்துக்கொண்டு அடுத்த மாத நடுவில் தமது
ஊரடைந்து பின்னர் எடின்பர்க் கலாசாலையில் அதிக



ஊக்கத்துடன் கல்விபயிலத்தொடங்கினர். அப்போது
அவரது பயிற்சி விஷயத்தைக்கவனித்தறிந்த ஊராரெ
ல்லாரும் படிப்பு விஷயத்தில பெற்றோர்கள் அவரை
அளவுக்குமீறி உபத்ரவிப்பதாக அவர்கள்மீது குறை
கூறினர்கள். நம் சக்ரவர்த்தி எடின்பர்க் கலாசாலை
யில் கல்விபயிலத்தொடங்கியபின் மூன்றுமாதங்கழித்து*
அவரது பிதா பாரன் ஸ்டாக்மருக்குத் தம்புதல்வனின்
பயிற்சி விஷயமாக ஓர் நிருபமொன்றைத் தனுப்பி
னர். நம் சக்ரவர்த்தியின் பயிற்சியாதி விஷயங்கள்
ஒருவாறு விளங்கத்தக்கதாக அக்கடிதத்தின்கருத்தை
இங்கே சுருக்கியுரைத்தல் நலம். அதில் அவர் "எடின்
பர்க்கில் நமது வேல்ஸ் இளவரசனுக்குக் கல்வி
கற்பிக்கும் உபாத்தியார்களை யெல்லாம் ஒன்று கூட்
டிச் சந்தித்தேன். அவர்களெல்லாரும் அவனைப்
பற்றி அதிக உயர்வாகவே சொல்லு கின்றார்கள்.
அவன் கற்பதில் அதிக ஆவல்கொண்டு மிகு ஊக்
கத்துடன் கற்றுவருகிறதாகத் தோற்று கின்றது.
அவனுக்குக் கைத்தொழில் சம்பந்தமான ரசாயன
சாஸ்திர விஷயமாக டாக்டர் லியான் ப்ளேபேர்
என்பவர் உபந்நியாசம்பண்ணி வருகின்றார். அதில்
ஒவ்வொரு அம்சமும் கற்பித்தானவுடன் அவனை ஏற்ற
கைத்தொழிற்சாலைக் களைழத்துக்கொண்டுபோய் அவ்
விஷயங்களைநேரே அனுபவத்தில் அறிந்துகொள்ளு

மாது காட்டிவருகின்றார். டாக்டர் ஸ்கிமிட்ஸ் என்பவர் அவனுக்கு ரோமசரித்திரவிஷயமாக உபந்நியாசிக்கின்றார். இவற்றுடன் இத்தாலிய, ஜெர்மானிய பிரஞ்சப்பாஷைகளும் கற்பிக்கப்படுகின்றன. வாரத்துக்கு மூன்றுமுறை ராணுவப்பயிற்சியும் பயின்று வருகின்றான். இனி ஆக்ஸ்போர்டில் இவனுக்குத் துணைப்போதகராக இருக்கப்போகும் பிஷர் துரையும் இப்போது இவனுடன் இருக்கின்றார். அவர் இவனுக்குச் சட்டமும் சரித்திரமும் கற்பிக்கப் போகின்றார்," என்று எழுதியிருக்கின்றார்.

பின்பு நம் சக்ரவர்த்தியார் ஸ்காட்லண்ட் தேசஞ்சென்று தமது விடுமுறை நாட்களை அதிக குதூகலமாகக்கழித்தார். அவரது பிறந்தநாட் கொண்டாட்டம் அவ்வருஷத்தில் அதிக விமரிசையாக நடந்தது. அந்நாளைத் தாமும் தம் தம்பியாருடன் இருந்து கொண்டாடவேண்டுமென்ற ஆசையால் ப்ரடரிக் சக்ரவர்த்தினியாரும் பெர்லினிலிருந்து வந்திருந்தார். அந்நாட்களிலெல்லாம் நம் சக்ரவர்த்தியார் சர்வால்டர் ஸ்காட்டின் நாவல்களையே மிகவும் பிரீதியுடன் படித்துக் கொண்டிருந்தார். பிரெஞ்சு இங்கிலிஷ் ஜெர்மன் முதலிய எல்லா நாவல்களையுமே அவர் எப்போதும் விருப்பத்துடன் படிப்பது வழக்கம்.



பின்பவர் ஸ்காட்லண்ட் விட்டுப்புறப்பட்டு நேரே ஆக்ஸ்போர்டுக்குப்போய் க்ரைஸ்ட் சர்ச்சின் அங்கத்தினருள் ஒருவராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். ஆக்ஸ்போர்டில் அவர் தம் சகபாடிகள் எல்லாருடனும் நெருங்கிப்பழகிவந்தார். பந்தாட்டம் முதலிய எல்லா விளையாட்டுகளிலும் சேர்ந்து விளையாடுவார். வேட்டையாடவும் சிலசமயங்களில் போய்வருவார். ஆனால் புத்தகப்படிப்பைக் கைவிட்டுவிட்டார் என்பதல்ல. 1859 டிசம்பர் 9-ல் ஆல்பர்ட் அரசர் பாரன் ஸ்டாக்மருக்கெழுதிய கடிதத்தில் "வேல்ஸ் இளவரசன் ஆக்ஸ்போர்டில் அதிக சிரமப்பட்டுப் படித்துவருகின்றான்" என்றெழுதியிருக்கின்றார்.

## ஐந்தாம் அத்தியாயம்.

# அமெரிகா விஜயம்.

முன்னிகழ்ந்தகிரிமியா யுத்தத்தின்போது கானடா தேசத்தார் தங்களது தாய் பூமியாகிய இங்கிலாந்தின் சங்கடத்தில் அனுதாபங்கொண்டு அந்தக் கிரிமியா யுத்தத்தில் இங்கிலீஷ் சைனியங்களுக்குத் துணையாக நின்று போர்புரியுமாறு தங்கள் சொந்தச் சைனியாதிகளையனுப்பி யுபகரித்தார்கள். பின்னர் அச்சண்டை முடிந்ததும் விக்டோரியா மகாராணியாரைத் தங்கள் கானடா தேசத்துக்கு விஜயஞ்செய்யுமாறு அவர்கள் பிரார்த்தித்தார்கள். ஆனால் அவ்வளவு தூரப்பிரயாணஞ்செய்ய மகாராணியாரின் தேகஸ்திதி இடந்தராதென்று கருதப்பட்டது. பின்பவர்கள் "அப்படியாயின் மகாராணியாரின் புதல்வர்களுள் ஒருவரை எங்கள்தேசத்துக்கு கவர்னர் ஜெனரலாக நியமியுங்கள்" என்று பிரார்த்தித்தார்கள். மகாராணியாரின் புதல்வர்கள் அனைவருமே அப்போது அதிபால்யர்களாக இருந்தமையினால் அது கவனிப்பதற்கே தகாதவிஷயமாக இருந்தது. ஆயினும் அப்போது



மகாராணியார் தம் ஜேஷ்டபுதல்வர்க்கு வயதுவந்தவுடனே அவரைத் தமக்குப்பிரதிநிதியாகக் கானடாவுக்கு விஜயஞ்செய்யுமாறு அனுப்புவதாக வாக்களித்திருந்தார். ஆதலின் நமது சக்ரவர்த்திக்குப் பதினெட்டாவது வயதானவுடன் அவரைக் கானடாவுக்கு அனுப்பவேண்டுமென்று அவரது பெற்றோர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். மகாராணியாரும் அவர் நாயகரும் அவ்யாத்திரையில் தம் புதல்வருடன் துணையாக யாரை அனுப்பலாமென்று தீர ஆராய்ந்து கடைசியாக நியூகாசல்கோமானை ஏற்றவரெனக்கண்டு அவரையே ஏற்படுத்தினார்கள். அந்த யாத்திரை விஷயமாகச் செய்யவேண்டிய சகல ஏற்பாடுகளையும் ஆல்பர்ட் மன்னர் நியூகாசல் கோமானுடன் ஒழுங்குபடுத்தினர். மகாவிவேகியும் தம் புதல்வர்மாட்டுப் பேரன்புடையாருமாகிய ஆல்பர்ட் மன்னர் அவசியமான காரியங்கள் ஒன்றும் ஒழியாது அனைத்தையும் செய்துமுடித்தார். தம் புதல்வர் விஜயஞ்செய்யும் இடங்களில் அவ்வவ்விடங்களுக்குத் தக்கவாறு நடந்துகொள்ளத்தக்கதாக அங்கங்கேயிருக்கும் ஜனங்களின் நடையுடைபாவனைகளையெல்லாம் அவர்க்குச் சரிவரப்போதித்ததும் அன்றி அவ்வவர்களும் கொடுக்கக்கூடியவந்தனோபசார பத்திரங்களுக்கு ஏற்றவாறு விடைகூறுதற்குத் தகுமாறு சில குறிப்புகளையும் யூகித்தெழுதி நியூகாசல் கோமா

னிடம் தந்தார். அக்குறிப்புகளைத்தும் பின்னர் அதிக அருமையாகப் பயன்பட்டன என்பதைப் பார்த்தால் ஆல்பர்ட் மன்னரின் அதியற்புதமான விவேகத் தன்மை வெளிப்படுகின்றது.

இவ்வாறு மகாராணியாரின் ஜேஷ்டகுமாரர் கானடாவுக்கு விஜயம்செய்யப் போகின்றாரென்பதைக் கேள்விப்பட்டதும் அமெரிக்கா ஐக்கியமாகாணங்களின் அக்கிராசனாதிபதியாகிய புச்சனன் என்பவர் அவரைத் தங்கள் தேசத்துக்கும் அனுப்புமாறு மகாராணியார்க்குத் திருமுகம்விடுத்தார். மகாராணியாரும் அதற்கிசைந்து தம்புதல்வர் கானடாவிலிருந்து ஊர்க்குத்திரும்பும்போது ஐக்கிய மாகாணங்களுக்கும்போய் வரவேண்டுமென ஏற்பாடுசெய்தார்.

அவ்வாறே நம் சக்ரவர்த்தி ஹீரோ என்றபோர்க்கப்பலிலேறி அமெரிக்காகண்டஞ்சென்று 1860 ஜூலை 24-ல் செய்ண்ட் ஜான் என்ற இடத்தில் கரை இறங்கினார். இங்கிலாந்தின் குடியேற்றநாடுகளுள் மிகப்புராதனமானதாகிய நியூபௌண்ட்லண்டுக்குத் தலைநகராகிய அந்த செய்ண்ட ஜானிலுள்ள பிரஜைகளனைவரும் நம் அரச சக்ரவர்த்தியை அதிக குதூகலத்துடன் எதிரேற்றுபசரித்தார்கள். கானடாதேசத்தில் நம்மரசர் விஜயம்செய்தபோதிருந்ததைப்போன்ற கொண்டாட்டம் முன்னொருபோதும் இருந்ததில்லை. அக்கால



த்து செய்ண்ட் ஜானில் பிரதான அத்தியக்ஷகராயிருந்தவரின் மனைவியார் அப்போது இங்கிலாந்திலிருந்த தம் சுற்றத்தார் ஒருவர்க்கெழுதிய நிருபத்தைப்பார்த்தால் நம் அரசர்விஷயமாகக் கானடாவில் இருந்தவர்கள் கொண்டிருந்த ஆவேசம் ஒருவாறு விளங்கும். அக்கடிதத்தில் அவர் "ராஜகுமாரர்மீது நியூபௌண்ட்லண்டுபோலவே மற்ற குடியேற்ற நாடுகளும் அன்புகொள்ளுவதாக இருந்தால் அவரை இவ்வாறு யாத்திரைக்கு அனுப்புவது மகாவிசேஷமானகாரியமென்றே உறுதியிட்டுரைப்பேன். அவருடைய தோற்றமும் நடையுடைபாவனைகளும் பார்ப்போருடைய உள்ளத்தைப் பரவசப்படுத்துகின்றன. அவருடைய பிரஸ்தாபம் எடுத்தால் உடனே ஆண்பெண் அடங்கலும் ஆனந்தக்கண்ணீர் விடுகின்றனர். நாகரிகமற்ற செம்படவர்களுங்கூட அவர்மீது அதிக அபிமானங்கொண்டிருக்கிறார்கள். அவரைப்பற்றி ஆச்சரியப்படாதார் அவர்கள் கூட்டத்தில் ஒருவருமில்லை. அவர்களனைவரும் அடிக்கடி "அவர் அழகானமுகத்தைத் தேவன் ஆசீர்வதித்து அவர்க்கோர் அழகான மனைவியைத் தந்தருள்வாராக" என்றே சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள், என்றெழுதியிருக்கின்றார். அவ்வாறாவேசங்கொண்டது அத்தேசத்தில் குடியேறிய பிரிட்டிஷார் மாத்திரமல்ல. அத்தேசத்தின் சுதேசகுடிகளும் அதிகமாகத்

குதூகலித்தார்கள். ஸிப்வா இந்தியர்கள் புடை சூழ்ந்து வர அவர்களின் தலைவன் நம் சக்ரவர்த்திக்கு முன் பாகவந்து நின்றுகொண்டு "சகோதரரே! மகா சகோதரரே! ஆகாயம் அழகாக இருக்கின்றது. நாம் இந்த இடத்தில் சந்திக்கவேண்டுமென்பது ஈசுரசங்கற்பமாக இருந்தது. மகாராணியார் தமது இந்தியகுடிகளைப்பார்த்து வருமாறு தமது ஜேஷ்ட குமாரனை அனுப்பியது பற்றி யெனக்கு அதிக சந்தோஷம். இப்போதுபோலவே ஆகாயம் எப்போதும் அழகாக இருந்து வெள்ளைக்காரருக்கும் இந்தியருக்கும் இன்பளிக்கவேண்டுமென்று கோருகின்றேன். மகாசகோதரரே! இப்படிப்பட்ட இந்தியர்கள் வசிக்கின்றார்களென நீர் உமது குழந்தைப் பிராயத்தில் உம்பெற்றோர்களால் கேள்விப்பட்டிருப்பீர். இப்போதோ நீரே இங்கு வந்திருப்பதால் அவர்களை நேரே காண்கின்றீர். நான் இங்கே உம் நல்வரவை ஏற்பதற்காக வந்துகூடியிருக்கும் ஸிப்வா இந்தியர்களின் தலைவர்களுள் ஒருவன். அவர்களையெல்லாம் நீர் காண்கின்றீர். பின்னொரு காலத்தில் நீர் மகுடந்தரித்து அரசாள்வீரென்று அவர்கள் கேள்விப்பட்டிருக்கின்றார்கள். நீர் எப்போதும் அவர்களை ஞாபகத்தில் வைக்கவேண்டுமென்று அவர்கள் ஆவலுடன் பிரார்த்திக்கின்றார்கள்." என்று மளமளவெனக்கூறினான். அதற்குச்



சக்ரவர்த்தி ஆகாயம் அழகாக இருக்கவேண்டுமென்றே தாமும் விரும்புவதாகவும் தாம் அரசாளுங்காலத்தில் தம்முடைய ஸிப்வா இந்தியசகோதரர்களை மறப்பதில்லை என்றும் விடை கூறினார்.

நம் சக்ரவர்த்தியின் நல்வரவு கொண்டாடுதற்காக மாண்ட்ரியலில் எழுபத்தையாயிரம் ரூபாய் செலவிட்டு ஓர் நடனசாலைகட்டி அதில் ஏககாலத்தில் ஆயிரத்து முந்நூறு பேர்கள் ஒருங்கே நடனம் புரிந்தார்கள். செய்ண்ட் லாரன்ஸின்மேல் கட்டப்பட்டிருக்கும் விக்டோரியா என்னும் பெரிய பாலத்தின் கடைசிக் கல்லை அவர் அமைத்தபோது ஜனங்களெல்லாரும் ஆவேசங்கொண்டார்த்த சத்தம் இவ்வளவு அவ்வளவென்றுரைப்பரிதாம்.

ஆனால் ஐக்கிய மாகாணங்களில் அவர்க்கு நடந்த உபசாரங்கள் மிக விசேஷமானவை. அவ்வாறு முன்னெங்கும் அவர் கண்டதில்லை. செப்டம்பர் 20-ல் அவர் லார்ட் ரென்ப்ரூ என்ற பெயருடன் ஐக்கிய மாகாணங்களின் எல்லையை அடைந்தார். அவர் கானடா தேசத்தில் கரை இறங்கினதுமுதல் ஐக்கிய மாகாணத்தார்களோர் லார்ட் ரென்ப்ரூ எப்போது வருவார் எப்போது வருவார் என்று அவரது வருகையை அதிக ஆவலுடன் எதிர்பார்த்துத் துள்ளித்துடித்துக் கொண்டிருந்தார்கள். அந்த சமாசாரத்துக்காகப் பத்

திராதிபர்கள் காசைக்கணக்கு வழக்குப்பாராமல் அப்போது வாரி இறைத்தாற்போல எப்போதும் வாரி இறைத்திரார்கள். ப்ளாண்டின் என்பவன் நயாகரா நீர்வீழ்ச்சியைக் கயிற்றின் மேலேறிக் கடந்து போவதைக் காணும்பொருட்டு நமது சக்ரவர்த்தி அருவியண்டைச் சென்றபோது அது சம்பந்தமான சம்பவங்களை யெல்லாம் நியூயார்க்கிலுள்ள ஓர் பத்திராதிபர் தாமே முதலில் பிரசுரிக்கவேண்டுமென்று கருதி அவ்விஷயங்களை உடனுக்குடனே தமக்குத் தந்திமூலமாக அறிவிக்கும்படி தம் காரியஸ்தர் ஒருவரை நியூயார்க்கிலிருந்து அனுப்பியிருந்தார். அக்காரியஸ்தர்கள் அருவியண்டை வந்திருந்துகொண்டு தந்தியாபீசில் ஏதேனும் ஒழிவிருந்தால் மற்ற பத்திரிகைகளின் காரியஸ்தர்களும் தத்தம் பத்திராதிபர்களுக்குத் தந்தியடித்து விடுவார்கள் என்ற அச்சத்தால் டாலர் டாலராகச் செலவழித்து உபயோகமற்ற சமாசாரங்களையெல்லாம் ஓயாது தந்தியடித்துக் கொண்டே இருந்தார்கள். இப்படியாக இரண்டு மணி நேரம் கழிந்தது. அப்போதும் சக்ரவர்த்தி அங்கே விஜயம் செய்யாமையால் மேலும் பணத்தை விரயம் செய்ய அக்காரியஸ்தர்கள் பின் வாங்கி மற்றவர்களுக்கிடங் கொடாதிருக்குமாறு தாங்கள் என்ன செய்வதென்று நியூயார்க்கிலுள்ள தங்கள் தலைவர்களைக் கேட்டார்கள். அதற்கவர்கள் பைபி



லில் ஆதியாகமத்தை ஆதி தொடங்கித் தந்தியடித்துக் கொண்டிருங்கள் என்று கட்டளையனுப்பினார்கள். இவர்களும் அவ்வாறே 150 பவுன் அதாவது 2,250 ரூபாய் செலவழித்து அவ்வாகமத்தையும் முழுதும் தந்தியடித்து முடித்தார்கள். அப்போதும் அரசர் அங்கு விஜயம் செய்யவில்லை. பின்பென்ன செய்வதென்று காரியஸ்தர்கள் மீட்டும் தங்கள் தலைவர்களைக் கேட்டார்கள். அதற்கவர்கள் பைபிளில் இரண்டாவதாகமத் தொடங்கி இறுதியிலுள்ள வெளிப்படுத்தின சுவிசேஷம் முடிவுவரைக்கும் தந்தியடியுங்கள் என்று உத்திரவனுப்பினார்கள். ஆனால் இவர்கள் பழைய ஏற்பாடு முடித்துப் புதிய ஏற்பாட்டைத் தொடங்கு முன் அரசர் அங்கே விஜயம் செய்துவிட்டார். அன்று தங்கள் எதிரிகளுக்கிடம் கொடாதிருப்பதற்காக அப்பத்திராதிபர்களுக்கு பதினையாயிரம் ரூபாய்வரைத் தந்தி விஷயத்தில் செலவாயிற்று.

நமது சக்ரவர்த்தி அமெரிகாவுக்குள் அடிவைத்ததும் அவரது நல்வரவைக் கொண்டாடுதற் கதிக ஆவேசத்துடன் திரண்டுவந்த ஜனங்களுக்குக் கணக்கேயில்லை. காலஞ்சென்ற ஜார்ஜ் வாஷிங்டனே உயிர் பெற்றெழுந்து வந்திருந்தாலும் இதைவிட அதிக கொண்டாட்டம் இருந்திருக்க முடியாதென்று ஒரு நக்கோர் உரைத்தார். டிட்ராயிட் என்ற இடத்தில்

சக்கிரவர்த்தியைத் தரிசிப்பதற்காக ஆவேசத்துடன் திரண்டுவந்த ஜனநெருக்கத்தால் சக்ரவர்த்தியுங்கூட ராஜபாதையில் செல்ல முடியாதிருந்தது. பின்பவர் நியூகாசல் கோமான் முதலிய அதிகாரிகளுடன் ஓர் சந்துவழியாகப் புகுந்து ஓட்டலையடைந்தார். சாமான்ய நிலையிலிருந்த சிக்காகோ பட்டணம் அப்போதுதான் பிரபலப்பட்டுக்கொண்டு வந்தது. அப்படியிருந்தும் அங்கேயுங்கூட லார்ட் ரென்பரூவைத் தரிசிக்க அன்பதினாயிரம் ஜனங்கள் திரண்டுவந்தார்கள். சக்ரவர்த்திக்கு அதிக களைப்பாக இருந்தமையால் சிக்காகோவுக்கும் செயின்ட் லூயிஸுக்கும் மத்தியிலுள்ளதோர் சாமான்ய கிராமத்தில் ஓர் தினம் தங்கியிருப்பது நலமென்று நியூகாசல் கோமான் தீர்மானித்தார். அந்த யாத்திரையிலேயே அந்த ஒரே இடத்தில்தான் மனத்துக்குச் சற்று அதிருப்திகரமானதோர் சம்பவம் நிகழ்ந்தது. அதுதான்போல ஓர் செழிப்பான புலமும் அதனுள் ஓர் அழகான சிறு வீடும் தென்பட்டது. லார்ட்ரென்பரோவாகிய நம்சக்ரவர்த்தியும் நியூகாசல் கோமான் முதலியோரும் அப்புலத்தை நோக்கிச் சென்றார்கள். அதைக்கண்டதும் பிரிட்டிஷாருகிய அக்காணியாளன் எதிர்கொண்டுவந்து நியூகாசல் கோமானைத்தவிர மற்றெல்லாரையும் தன் புலமனைக்கு வருமாறு அழைத்தான். பின்பவன் நியூகா-



சல் கோமானைநோக்கி "நியூகாசலே, உன்னை யழைக்கவில்லை. நான் முன்பு உன்னிடத்தில் வாரக்குடியானவனாக இருந்திருக்கின்றேன். அப்போது நீ என்னைப் படுத்திய உபத்ரவத்தால் உனக்கு என்னிலத்தில் அடிவைக்க ஒருபோதும் இடம் கொடுப்பதில்லை எனச் சத்தியம்செய்து கொண்டிருக்கின்றேன்" என்றிரைந்தான். தன் பழைய எஜமானன்மீது தனக்கிருந்த பழியை அவன் இவ்வாறு தீர்த்துக் கொண்டானாயினும் நம் சக்ரவர்த்தி முதலியோரைத் தன் குடிசையுள் அழைத்திருத்தி உபசரித்து மகிழும் பாக்கியத்தை இதனால் இழந்தான்.

லார்ட் ரென்பரோ என்னும் நமது சக்ரவர்த்தி அக்டோபர் 30-ல் வாஷிங்டன் பட்டணத்தையடைந்தார். ஐக்கியமாகாணங்களின் அக்கிராசனாதிபதியாகிய ஜேம்ஸ் புக்கானன் அதிக மகிழ்வோ டெதிர்கொண்டழைத்துச் சென்று உபசரித்தார். நம்சக்ரவர்த்தி அங்கே ஐந்துநாள் தங்கியிருந்தார். அப்போது அவர் அங்கேயுள்ள வாஷிங்டன் என்னும் மகாபுருஷருடைய சமாதியைச் சென்று தரிசித்து வந்தது ஓர் விசேஷ சம்பவம். அதைப்பற்றி டைம்ஸ் பத்திரிகை "இந்தச் சாமான்யமான கல்லறையண்டை யடுத்ததும் ஐக்கியமாகாணங்களின் அக்கிராசனாதிபதியாகிய ஜேம்ஸ் புக்கானன் என்பவரும் வேல்ஸ் இளவரசராகிய லார்ட்

ரென்பரோவும் நியூகாசல் கோமான் முதலினோரும் மரியாதைக் கடையாளமாகத் தங்கள் தங்கள் தொப்பிகளை எடுத்து விட்டார்கள். மூன்றாவது ஜார்ஜின் பேரனாகிய வேல்ஸ் இளவரசர் இந்த வாஷிங்டனது கல்லறையண்டை அதிக பயபக்தியோடு வெறுந்தலையுடன் நின்றது எவரும் விசேஷமாகக் கவனிக்கத்தக்கதோர் சம்பவம். அங்கே சில நிமிஷம்வரை ஒன்றும் பேசாது அனைவரும் மவுனமாக நின்றார்கள். பின்பு இளவரசர் அக்கல்லறையண்டை ஓர் கஸ்கொட்டை மரவிதையை ஊன்றினார். அவர் அவ்வாறு அங்கே அவ்விதையைப் புதைத்தது பிரிட்டிஷாருக்கும் அமெரிக்கருக்கும் இடையே கொஞ்சநஞ்சமிருந்த பிரிவினையையும் புதைத்து விட்டாற்போல காணப்பட்டது." என்று கூறிற்று.

பின்பு நம்சக்ரவர்த்தி வாஷிங்டனிலிருந்து புறப்பட்டு பிலடல்பியா நகரஞ் சேர்ந்தார். அவ்விடத்திலும் விசேஷ உபசாரங்கள் நடந்தன. பின்பங்கிருந்து புறப்பட்டு நியூயார்க் பட்டணம் சென்றார். அங்கே அப்பட்டணத்தின்மேயர் எதிர்கொண்டு வந்து உபசரித்தழைத்துச் சென்றார். ராஜா என்ற சப்தமே நியூயார்க் ஜனங்களுக்கு மிக அருவருப்பாக இருக்கும். ஆயினும் நம்சக்கரவர்த்தியைத் தரிசிக்க ஐம்பதினாயிரம் ஜனங்கள் திரண்டுவந்தார்கள். அங்கே அந்நகரின்மேயர் முதலி



னோர் நம்சக்கரவர்த்தியின் விஜய சந்தோஷத்தைக் கொண்டாடும் பொருட்டு ஒரு நடனமும் அதன் முடிவில் ஓர் விருந்தும் நடத்த ஏற்பாடு செய்தார்கள். ஆனால் ஏற்ற இடம் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. ஏனென்றால் அவ்விருந்துக்கு வந்து நம்சக்ரவர்த்தியைக்கண்டு களிக்க அனைவரும் ஆசைப்பட்டார்கள். தக்கவர்களாக உள்ளவர்களைமட்டும் தேர்ந்தெடுப்பதென்றாலும் ஆறாயிரம் ஜனங்களுக் கதிகமாகவே அழைக்கவேண்டியிருந்தது. அத்தனைபேரையும் கொள்ளத்தக்க கட்டடம் அங்கே அகப்படவில்லை. கடைசியாக ஆறாயிரம் ஜனங்கள்வரை அடங்கத்தக்கதோர் கட்டடம் அகப்பட்டது. சௌகரியத்தை உத்தேசித்து மூவாயிரம் பேரைமட்டும் அழைத்தார்கள். அவ்விருந்துக்காகப் பீங்கான் பாத்திரம் முதலிய அனைத்தும் புதிதாகச் செய்விக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பாத்திரத்தின் மீதும் நம்சக்ரவர்த்தியின் (Sch Dien ) என்னும் கட்டுரை செதுக்கப்பட்டிருந்தது. அன்று நடந்த நடனம் முதலியவை அனைத்திலும் அனைவர்க்கும் நமதரசர் ஆனந்த மூட்டினார். ஆனால் வந்து நிறைந்திருந்த ஜனங்களின் பாரத்தைத் தாங்கமாட்டாது அக்கட்டடத்தின் தளவரிசை பிளப்புற்றது. ஆயினும் ஒருவித அபாயமும் நேரவில்லை. அன்றுநடந்த அந்த விருந்தின் கொண்டாட்டங்களெல்

லாம் இன்னுங்கூட அநேகருடைய ஞாபகத்தில் இருக்கின்றனவாம். நமதரசர் அதிக மகிழ்வோடு அந்த நியூயார்க்பட்டணத்திலும் ஐந்துநாள் தங்கியிருந்தார். ஒரு சமயத்தில் அவர்பொருட்டு நடந்த வர்ணவேடிக்கையாதிகளைக்கண்டு அவரே பரவசப்பட்டு “இவை என்பொருட்டுச் செய்யப்படுகின்றன! இவை அனைத்தும் என்பொருட்டுச் செய்யப்படுகின்றன!!” என்று பெருவியப்புடன் வாய்விட்டுரைத்தாராம். அச்சமயத்தில் ஆலிவர் வெண்டல் ஹோம் என்ற கவீஸ்வரர் “நம் பிதுர்பூமி” என்றோர் கவிமாலை புனைந்தார். பின்பு நம்சக்ரவர்த்தி அதை விட்டுப்புறப்பட்டு ஆல்பனி, பாஸ்டன் என்ற பட்டணங்களுக்குச் சென்றார். அவ்விடங்களிலும் விசேஷித்த உபசாரங்கள் நடந்தன. அவர் பாஸ்டனிலிருக்கும்போது அங்கே எமர்ஸன் முதலிய பிரமுகர்கள் பலர் வந்து அவரைத் தரிசித்துச் சென்றார்கள். பின்பவர் ஹார்வர்ட் கலாசாலையைப் பார்த்துவிட்டு ஆபர்ன் குன்றுக்குப்போய் அங்கே ஒரு மணிநேரம்வரைத் தங்கியிருந்து இரண்டு மரங்களை நாட்டிவிட்டுப் பங்கர்ஸ் ஹில்லுக்குச் சவாரி போயினார். கடைசியாக போர்ட்லண்டைப் பார்த்துவிட்டு அக்டோபர் 20-ல் தமது ஊர்நோக்கிப் புறப்பட்டார். வழியில் புசல் காற்றினால் சிறிது தாமதிக்க நேர்ந்தமையால் ஆதியில் உத்தேசித்தபடி தமது பிறந்த நாட்கொ



ண்டாட்டத்துக் கூர்வந்துசேர முடியவில்லை. ஆல்பர்ட் மன்னர் தம்தினசரியில் நவம்பர் 9-ல் இட்டகுறிப்பில் “இது பெர்ட்டியின் பிறந்தநாள். தௌர்ப்பாக்கிய வசத்தால் அவனும் இன்னும் ஊர்வந்து சேரவில்லை தாமதத்திற்குக் காரணமின்னதென்று அறிந்துகொள்ளத்தக்கதாக அவனிடமிருந்து கடிதமும் வந்து சேரவில்லை.” என்றெழுதியிருக்கின்றார். பின்பு நமதரசர் நவம்பர் 15-ல் ப்ளிமத்தில் கரையிறங்கினார். அச்செய்தி கேட்டதும் அவரது பெற்றோர்கள் அதிக ஆனந்தங்கொண்டார்கள். தம்புதல்வருடன் சென்று காரியாதிகளை அதிசமர்த்தாக நிறைவேற்றிவந்த விஷயத்தில் நியூகாசல் கோமான்மீது சக்ரவர்த்தினியார் அதிக மகிழ்ச்சிகொண்டு விசேஷித்தவிதமாகச் சன்மானித்தார்.

## ஆறம் அத்தியாயம்.

## கேம்ப்ரிட்ஜ் சர்வகலாசாலை.

நமதரசர் 1861-ம் வருஷாரம்பத்தில் கேம்ப்ரிட்ஜைச் சார்ந்த டிரினிடி கலாசாலையில் ஓர் அண்டர்கிராடுயேட் அங்கத்தினராகச் சேர்ந்து கலை பயிலத்தொடங்கினார். அங்கே அவரும் மற்றமாணவர்களைப்போலவேதான் நடத்தப்பட்டார். ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் விலக்கிருந்தது. அதாவது மாணவர்களெல்லாரும் அவ்விடத்திலேயே வாசமும் பண்ணவேண்டுமென்ற ஏற்பாட்டைமீறி கேம்ப்ரிட்ஜுக்கு மூன்று மயில் தூரத்திலிருந்த மாடிங்லே என்ற கிராமத்தில் தம்வித்யா விசாரணை கர்த்தராகிய கர்னல் ராபர்ட் ப்ரூஸ் என்பவரோடு ஓர் பிரத்தியேகமான இடத்தில் வசித்துவர அனுமதிதந்திருந்தார்கள்.

ஆல்பர்ட் அரசரின் வேண்டுகோளின்படி நமது சக்ரவர்த்திக்கு சார்ள்ஸ் கிங்ஸ்லீ என்பவர் பிரத்தியேகமாகச் சில உபந்நியாசங்கள் செய்துவந்தார். அந்த வகுப்பில் 11 அண்டர் கிராடுயேட்டுகள் இருந்தார்கள். புதிய பாடங்கற்பதற்காக மற்ற மாணவர்களுடன்



கூடி இரண்டு நாளும், படித்த பாடத்தைத் திருப்பி நோக்குதற்குத் தாம் மட்டும் ஒரு நாளும், ஆக வாரத்தில் மூன்று நாள் கிங்ஸிலீயின் வீட்டுக்கு நமதரசர் சவாரிபோவார். கல்வியில் அதிக ஆசைகொண்டு ஆசிரியரிடம் பயபக்தி விசுவாசத்துடன் கற்றுவரும் தன்மையைக்கண்டு கிங்ஸ்லீதுரைக்கு இவரிடத்தில் அதிகப்ரீதி யுண்டாயிற்று. அரசர்க்கும் அவ்வாசிரியரிடத்துண்டாயவிசுவாசம் நாளுக்குநாள் அதிகரித்தது. அவர் கேம்ப்ரிட்ஜில் இருந்த காலத்தில் நிகழ்ந்ததாக அநேககதைகளை ஜனங்கள் கட்டிவிட்டிருக்கின்றார்கள். உதாரணத்துக்காக அவற்றுள் ஒன்றை எடுத்தருகின்றோம். அங்கேயிருக்கையில் தம் இஷ்டப்போல வெளியே போய்வர மற்ற மாணவர்களுக்கிருந்த சுதந்தரம் இவருக்கிருக்கவில்லையாம். துணையின்றித் தூரப்பிரயாணம் செய்ய ராபர்ட்ப்ரூஸ்துரை இடம் கொடுப்பதில்லையாம். அப்படியிருக்க ஒரு நாள் இவர் எப்படியோ தப்பித்துக்கொண்டு இரண்டாம்பேர் அறியாமல் லண்டன் மாநகரத்துக்கு ரயிலேறிப்புறப்பட்டுச் சென்றாராம். அப்படிச் சென்றும் எப்படியோ சமாசாரம் வெளிப்பட்டுப்போய் இவர் ஏறியவண்டி லண்டன் ஸ்டேஷனை அடுப்பதற்கு முன்பாகவே அந்த ஸ்டேஷன் மாஸ்டரும் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து அனுப்பப்பட்டிருந்த இரண்டு வேலைக்காரர்களும்

இவரது வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்து வண்டி லண்டன் ஸ்டேஷனை அடைந்ததும் முன்வந்து இவரை எதிர்கொண்டழைத்தார்களாம். இதையெல்லாம் கண்டதும் அவருக்கு அதிக வியப்புண்டாயிற்றாம். இது போன்ற கட்டுக்கதைகள் பல உண்டு.

நம்சக்ரவர்த்தி 1861-ல் ஏறக்குறைய மாரிக்கால முழுதும் கேம்பிரிட்ஜிலேயே இருந்தார். அடுத்த விடுமுறை நாட்களில் கர்ராக் என்ற இடத்துக்குப்போய் ராணுவப்பயிற்சி பயின்றார். அவர் அவ்வாறு அயர்லண்ட் சென்று போர்வீரராக இருப்பதைக் கண்டு களிக்குமாறு அவரது தாய்தந்தையர்களிருவரும் அயர்லண்ட் சென்று வந்தார்கள். அதன் பின்பு ஆல்பர்ட் மன்னர் தம் இஷ்டபந்துவாகிய பாரன்ஸ்டாக்மருக்கெழுதிய நிருபத்தில் "வேல்ஸ் இளவரசன் பாசறையில் அதிக திருப்திகரமாக நடந்துகொண்டான். இனி தளயாத்திரையையும் கண்டு பயிலும் பொருட்டு ரயன் நதியடுத்த மாகாணங்களுக்குச் செல்லுதற்காகச் சீக்கிரத்தில் புறப்படுவான்" என்றெழுதியிருக்கின்றார்.

## ஏழாம் அத்தியாயம்.

## பிதாரிஷ்டம்.

முன் குறித்தவாறே நம்சக்ரவர்த்தி 1861 செப்டெம்பரில் ஜெர்மனிக்குப் போய்வந்தார். அப்போது அவர் அங்குச்சென்றது முன் கூறியபடி ரய்னையடுத்த மாகாணங்களின் தளயாத்திரையை காணும் பொருட்டாக என்றிருப்பினும் அவரை அங்கனுப்பியதில் அவரது பெற்றோர்களுடைய நோக்கம் வேறு என்று ஸர்தியோடர் மார்டின் என்பவர் தாம் எழுதிய ஆல்பர்ட் அரசரின் ஜீவசரித்திரத்திற் கூறுகின்றார். டென்மார்க்கு ராஜகன்னிகையாகிய அலெக்ஸாண்டரா பிராட்டியார் அப்போது ஜெர்மனிக்கு வந்திருந்தாராதலால் தமது புதல்வரும் அக்காலத்தே அங்குச் சென்றால் அவ்விருவரும் ஒருவரையொருவர் சந்தித்துறவுகொள்ள நேரினும் நேரும் என்று கருதியே விக்டோரியா சக்ரவர்த்தினியாரும் அவரது நாயகரும் நமது சக்ரவர்த்தியை அப்போது அங்கனுப்பினார்கள். அப்படி நம்சக்ரவர்த்தியும் அலெக்ஸாண்டரா பெருமாட்டியும் ஒருவரை ஒருவர் சந்திக்கலை

கொள்ள நேரும்பக்ஷத்தில் அவ்விருவர்க்கும் விவாகம் செய்விக்கலாமென்பது ஆல்பர்ட் மன்னரின் அபிப்பிராயம். இது நமது சக்ரவர்த்திக்குங்கூடத் தெரியாத அதிரகசியமான விஷயமாக இருந்தும் எப்படியோ வெளிக்கிளம்பி ஐரோப்பிய பத்திரிகைகளெல்லாம் அது விஷயமாகக் குணகுற்றங்களை ஆராய்ந்து தத்தம் அபிப்பிராயங்களை அறிவிக்கத் தொடங்கிவிட்டன. அப்பத்திரிகைகளின் மூலமாக இங்கிலீஷ் பத்திரிகைகளுக்கும் இஃதெட்டியது. ஆனால் அப்பத்திரிகைகளெல்லாம் ஒரேவிதமாக அவ்விவாக விஷயத்தை அங்கீகரித்தே பேசின. இப்படியாக அந்த வதூவரர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கு முன்பாகவே அப்பத்திரிகைகள் பலவேறுவகைப்பட்ட தத்தம் அபிப்பிராயங்களை வெளியிடத்துணிந்ததில் தாம் உத்தேசித்த விஷயம் என்னவாக முடியுமோவென்று ஆல்பர்ட் மன்னருக்கு அதிக மனவருத்த முண்டாயிற்று. ஆனால் அவ்வதூவரர்களிருவரும் ஸ்பீயர், ஹீடல்பர்க் என்ற இடங்களில் செப்டெம்பர் 24, 25 தேதிகளிற் சந்தித்து ஒருவரிலொருவர் அன்புகொண்டார்களாதலால் அப்பத்திரிகைகளின் பிரசுரங்களால் பாதகமொன்றும் நேரவில்லை. ஆல்பர்ட் மன்னர் செப்டெம்பர் 30-ல் தம் தினசரியில் "அலெக்ஸாண்ட்ரா ராஜகுமாரியைப்பற்றி சிலாக்யமான பிரஸ்தாபங்களே கேள்விப்படுகின்றேன்.



அவளும் நம்புதல்வனும் ஒருவரிலொருவர் அதிக அன்புகொண்டிருப்பதாகக் காண்கின்றது" என்றெழுதியிருக்கின்றார். அவர் பின்னர் அடுத்தாற்போல அக்டோபர் 6-ல் பிரஷ்யாவேந்தருக் கெழுதிய கடிதத்தில் "தனயாத்திரைப் பயிற்சிக்குச் சென்றிருந்த நமது பெர்ட்டி அளவில்லாத ஆனந்தத்துடன் வந்து சேர்ந்தான். அவன் அங்கே இருந்த நாள்களில் தாங்கள் அவனையும் அவனுடன் வந்திருந்தோர்களையும் உபசரித்த விதத்தை இன்ன விதமென்றெடுத்துரைக்க இயலாதென்று கூறுகின்றான்." என்றெழுதியிருக்கின்றார். அவர் அதற்குப் பின் ஒருவாரங்கழித்து பாரன் ஸ்டாக்மருக் கெழுதிய நிருபத்தில் "வேல்ஸ் இளவரசன் நாளையதினம் கேம்ப்ரிட்ஜூக்குச் செல்லுவான். அவன் அலெக்ஸாண்ட்ரா ராஜகுமாரியை ஸ்பீயரில் சந்திக்க நேர்ந்ததில் அதிக குதூகலத்துடன் திரும்பி வந்திருக்கின்றான்......அவனது சர்வகலா சாலைப்படிப்பு அடுத்த கிறிஸ்த்மஸ் பண்டிகையோடு முடிகின்றது. அதன் பின்பு ஜெருசலத்துக்கு யாத்திரைபோய் வரவேண்டுமென்று ஆசைகொண்டிருக்கின்றான். அது தக்ககாரியமே என்று கருதி நாங்களும் அநுமதி தந்திருக்கின்றோம்" என்றெழுதியிருக்கின்றார். அவர் அதற்குப்பின் சில நாட்கழித்து லண்டன் பட்டணம் சென்று இனித்தம்புதல்வர்க்கு வாசக்கிரமாக இருக்

கப்போகும் மாரல் பர்ரோ அரண்மனையைச் நோக்கி விட்டுத்திரும்பினார். நவம்பர் 9-ல் விக்டோரியா சக்ரவர்த்தினியார் "இன்று நமது பெர்ட்டியின் இருபதாவது பிறந்த நாள். அவனை சர்வத்ராளாலும் பூஜிக்கப்படத்தக்கவனாக ஆக்குமாறு நாங்கள் செய்துவரும் முயற்சிகளுக்குப் பகவான் துணை புரிவாராக . . . அகத்தும் புறத்துமுள்ள நமது ஜனங்களனைவரும் விருந்துக்கு வந்திருந்தார்கள். ஆல்பர்ட்டின் இஷ்டப்படி பெர்ட்டி முன்வந்து என்னை உள்ளே அழைத்துக் கொண்டுபோனான். நான் அவனுக்கும் ஆல்பர்ட்டுக்கும் நடுவில் உட்கார்ந்தேன்" என்று தமது தினசரியில் எழுதியிருக்கின்றார்.

நவம்பர் 28-ல் ஆல்பர்ட் கோமான் தமது புதல்வரைப் பார்த்து வருதற்காக கேம்ப்ரிட்ஜுக்குப் போய் வந்தார். அப்போது காற்றும் குளிரும் மிகுதியாக இருந்தது. ஆதலால் அவர் ஜலதோஷத்துடன் ஊர் வந்து சேர்ந்தார். வந்து சிலநாள்வரைக்கும் சுரத்தால் வருந்திக்கொண்டிருந்தார். அப்போது ராஜ்ய காரியங்களில் சில குழப்பங்கள் இருந்துக் கொண்டிருந்தன. ஆதலால் ஆல்பர்ட் கோமான் தாம் ரோகத்தால் வருந்திக்கொண்டிருக்கும் அச்சமயத்தில் வீட்டில் இருந்து தம் நோய்க்குச் சிகிச்சை செய்துகொள்வதை விட்டு அதிசிரமம் எடுத்துக்கொண்டு ராஜ்யகாரியங்களைப்பார்த்



யான சில விஷயங்களை லார்ட் ரஸலுக்காக எழுதினார். அதனால் சுரம் நாளுக்குநாள் அதிகரிக்கத் தொடங்கியது. ஆயினும் அபாயமேதேனும் சம்பவிக்குமென்று யாரும் நினைக்கவில்லை. நம்சக்ரவர்த்தியை கேம்ப்ரிட்ஜிலிருந்து வரவழைப்பது நலமென்று சிலர் சொன்னார்கள். ஆனால் அதற்கு அவர் தாயார் சம்மதிக்கவில்லை. கடைசியாக அவரது சகோதரியாராகிய ஆலிஸ் ராஜகுமாரியார் இனித்தம்சகோதரரை வரவழையாதிருப்பது சரியல்லவென்றெண்ணித்தம் சொந்தப்பொறுப்பின்மேல் அவருக்குச்சொல்லியனுப்பினார். சக்ரவர்த்தியும் உடனே ஊர்வந்து சேர்ந்தார். அவர் வந்து சேர்ந்தும் டிசம்பர் 14-ல் அவருடைய பிதா பரலோகப்ராப்தி யாயினார். தம்பிதாவின் அந்திய காலத்தில் வந்து சேருமாறு செய்த தம்சகோதரியாரின் உபகாரத்தை நம்சக்ரவர்த்தி ஒருபோதும் மறக்கவில்லை. ஆலிஸ் ராஜகுமாரியாரும் அதிக துக்காக்கிராந்தராக இருந்தாலும் அரண்மனையில் நடக்கவேண்டிய காரியங்களுக் கெல்லாம் அனைவரும் அவரிடத்துத்தான் சென்றார்கள். ஏனென்றால் விக்டோரியா சக்ரவர்த்தினியார் துக்கசாகரத்தில் மூழ்கித் திகைத்திருந்தமையின் அவரிடத்தேதாவும் பிரஸ்தாபிக்க கூடியதாக இருக்கவில்லை. அவரை அவ்விடம்விட்டு ஆஸ்பர்ன் அரண்மனைக்குப் போகச்செய்தல் நலமென்ற

அநேகர் அபிப்பிராயப் பட்டார்கள். அதற்கவர் சா மான்யத்தில் இசைவதாகக் காணவில்லை. ஆதலால் நம் சக்ரவர்த்தி, ஆலிஸ் ராஜகுமாரி, ஹெலினா ராஜகுமாரி என்ற மூவரும் கட்டாயப் படுத்தித் தம் தாயாரை யழைத்துக்கொண்டு ஆஸ்பார்ன் அரண்மனை சென்றார்கள். அவ்வாறு நம்சக்ரவர்த்தி தம் தாயாரை ஆஸ்பார்ன் அரண்மனையில் கொண்டுபோய் விட்டுவிட்டுத் தம்பிதாவின் அபரக்கிரியைகளுக்கு வேண்டிய காரியங்களை ஒழுங்குபடுத்தவும் துக்கம் விசாரிக்கவந்த சாக்ஸ் கோபர்க் அண்ட் கோதா கோமகர், ப்ரஷ்ய இளவரசர் (பிற்காலத்தே இவர் பிரடரிக் சக்ரவர்த்தி ஆயினர்) முதலியோரை எதிர் கொள்ளவுமாக மீண்டும் வின்ட்ஸருக்கே திரும்பிவிட்டார். அபரக்கிரியை டிசம்பர் 23-ல் நடந்தது. பிரேதப்பெட்டியின்பின் செல்கையில் நம்சக்ரவர்த்தி துக்கத்தால் மீதூர்ந்திருந்தார். அவரை ஆதரித்துச் சென்ற அவர் சகோதரராகிய ஆர்தர் இளவரசரும் அதி வருத்த முற்றார். அவ்விருவரும் படும் சங்கடத்தைக்கண்டு உடன் சென்றோரனைவரும் கண்ணீர்விட்டார்கள். கடைசியாகப் பிரேதப்பெட்டியைக் கல்லறைக்குள் இறக்கியதும் நம்சக்ரவர்த்தி கடைசிமுறையாகத் தம்பிதாவின் திருமுகத்தைக் கண்டுகொள்ளும்பொருட்டு முன் சென்றார். அம்முகத்தைக் குனிந்து பார்த்ததும் தமதுஇடம் குன்-



றிக்கண்ணீரை ஆறாகப்பெருக்கிக்கொண்டு அவ்விடம் விட்டுப் போகாது நின்றார். பின்பு லார்ட் சேம்பர்லேன் சென்று அவரைப் பிடித்து அப்பால் இழுத்துக்கொண்டு வந்தார்.

நம்சக்ரவர்த்திக்குத் தம் பிதாவின்மீது அதிக விசுவாசம். ஆல்பர்ட் கோமகனின் நல்லொழுக்கமும் குழந்தைகளிடத்தில் அவர்க்கிருந்த அன்பும், உயர்விஷயங்களில் அவர் கொள்ளும் ஊக்கமும், சுய நல மே பெரிதாகக் கருதா வாழ்க்கையுங்கண்டு அறிந்தோர் யாருமே அவரிடத்து விசுவாசங்கொண்டார்கள். நமது எட்வர்ட் சக்ரவர்த்தி சிநேகர்களிடத்தில் அதிக விசுவாசமுடையவர். ஆனால் அவர்க்குத் தம்பிதாவினும் பார்க்க உள்ளன்புடைய நண்பர் உலகத்தொருவருமே இல்லை. நம்சக்ரவர்த்தி இப்போது வகித்து நிற்கும் பதவியைக் கைக்கொண்டு நடத்துதற்கு ஏற்ற திறத்தை அந்தப்பிதாதான் கொடுத்தவர். நம்சக்ரவர்த்தியின் நற்குண நற்செயல்களை உலகமே வியந்துரைக்கின்றது. நற்குண நற்செயல்களையுடைய அப்பிதாவின் முயற்சியால் தான் இவர்க்கு இக்குணஞ்செயல்கள் ஏற்பட்டன. ஆதலின் அந்த டிசம்பர் 14-ம் தேதி இரவில் அப்பிதாவின் ஆவி பிரிந்தது இவர்க்குத் தம்மாவியிலேயே பாதி அகன்றொழிந்தாற் போலாயிற்று. பின்பு அவர் தம்பிதாவின் கல்

லறையண்டை நிற்கையில் தமக்கு உலகத்திலிருந்த சகலபாக்கியங்களும் அன்றுடன் தொலைந்ததாகக் கருதினர். ஆதலின் அதற்குப்பின் சில நாள்வரை இவர் ஒன்றிலும் கருத்தைச் செலுத்தாது சதாகாலமும் இதே சிந்தையாகக் கவன்றுகொண்டிருந்தார். இதைச் சமஸ்தானத்தைச் சூழ்ந்திருக்கும் கனவான்கள் கண்டு இவரை இத்துயர்க்கடலினின்றும் மீட்பதற்கு ஏதாவது உபாயந்தேடவேண்டுமென்று கருதினார்கள்.

## எட்டாம் அத்தியாயம்.

## புண்யதேச யாத்திரை.

ஆல்பர்ட் கோமான் தம்புதல்வர் விரும்பியவாறே அவரைப் புண்ணிய பூமி என்னப்படுகிற பலஸ்தினாவுக்கு யாத்திரைபோய்வரும்படி அந்த 1861-ம் வருஷம் கிறிஸ்தமஸ் கழிந்ததும் அனுப்புவதாக இருந்தாரென்பது அவர் தமது அந்தியகாலத்துக்குச் சற்றுமுன்னே பாரன் ஸ்டாக்மருக்கெழுதியதாக நாம் மேலே காட்டியிருக்கும் நிருபத்தால் விளங்கும். அவர் அவ்வாறு அநுமதி தந்ததுமட்டுமன்று, அப்படிப் போகும்போது இன்னாரைத்தான் உடன் அழைத்துக்கொண்டுபோகவேண்டும் என்பதும் முடிவு செய்திருந்தார். டீன் ஸ்டேன்லி என்பவர் முன்னும் ஒருமுறை எருசலேமுக்குப் போய்வந்தவராக இருப்பதுடன் நல்ல சீலமும் உடையவராக இருந்தமையின் அவரைத்தான் தம்புதல்வரோடு துணையாக அனுப்பவேண்டுமென்று தம்மனைவியாரிடம் அறிவித்திருந்தார். ஆதலின் சக்ரவர்த்தினியை அவர் தந்தையாரின் அபிப்பிராயப்படி பலஸ்தினா யாத்திரைக்குப் புறப்படும்படி

தூண்டிவருதான் அவரைத்துயர்க்கடலினின்றும் மீட்பதற்கு ஏற்ற உபாயமென்று சமஸ்தானத்தைச் சார்ந்த உத்தியோகஸ்தர் முதலியோர் கண்டு தூண்டினர்கள். சக்ரவர்த்தியும் அதற்கிசைந்தார். இதனைத் தம் நாயகரின் வாக்கியத்தை வேதவாக்கியமாக விசுவாசிக்கும் தன்மையுடைய விக்டோரியா சக்ரவர்த்தினியார் அறிந்தும் தம்கணவரின் அபிப்பிராயப்படி டீன் ஸ்டேன்லியையே துணைசேர்த்தனுப்பவேண்டுமென்று விரும்பி அவரைத் தம் அரண்மனைக்குவருமாறு அழைப்பித்தார். அப்படியே அவர்வந்ததும் தம் அபிப்பிராயத்தை அவரிடம் வெளியிட்டார். அதிவிருத்தாப்பிய தசையிலிருக்கும் தமதன்பான தாயைப்பிரிந்து தூரதேசப்பிரயாணம்போவதில் அவர்க்கிஷ்டமில்லாமையால் முதலில் சிறிது ஆலோசித்தார். ஆயினும் பின்னர்ச் சக்ரவர்த்தினியாரின் கருத்துக்கிணங்கினார்.

நமது சக்ரவர்த்தி தம்மோடு டீன் ஸ்டேன்லீ, ஜனரல்புருஸ் முதலியோரைத் துணையாக அழைத்துக்கொண்டு 1862 பெப்ருவரி 28-ல் பலஸ்தீனு நோக்கிப் புறப்பட்டுக் கய்ரோபட்டணம் சேர்ந்தார். அங்கேயுள்ள கீர்த்திபெற்ற கோபுராதி விநோதங்களைப் பார்த்துவிட்டு மீண்டும் புறப்பட்டுப் போய்க்கொண்டிருந்தார். அவ்வாறு போய்க்கொண்டிருக்கையில் ஊரில்



டீன் ஸ்டேன்லியின் தாயார் பரலோகப்ராப்தியாயினர் என்றசெய்தி மார்ச்சு 23-ல் எட்டியது. சக்ரவர்த்தி அவ்விஷயமாக டீன் ஸ்டேன்லீயோடு மிகவும் அநுதாபப்பட்டார். டீன் ஸ்டேன்லீ உடனே அவசரமாக ஊர்க்குத்திரும்பவேண்டு கருதாமல் தொடங்கிய பிரயாணத்தை முடித்தே திரும்பலாமெனக் கூறினர். இவ்வாறு அவர் அபிப்பிராயப்பட்டதில் நம் சக்ரவர்த்திக்கு அவர் மீது முன்னினும் அதிகவிசுவாசமுண்டாயிற்று. அவர்க்கும் நம் சக்ரவர்த்திமீது அதிக அபிமானம். அவர் இந்த யாத்திரையைப்பற்றி எழுத நேர்ந்தபோது "வேல்ஸ் இளவரசரை அபிமானிக்காதிருப்பதசாத்தியம். அவருடன் கூடியிருந்தால் ஊர்களையும் பேர்களையும்பற்றி அவர்க்கிருக்கும் அபாரஞாபகசக்தியைக் கண்டுகொள்ளலாம். நெருங்கிப்பழகப் பழக அவரது தங்கமான குணாதிசயங்கள் வெளிப்பட்டு எனக்கு அவர்மீது அதிக விசுவாசமே உண்டாகிவருகின்றது. ஞாயிறாகிய இன்று அவர் வேட்டையாடவில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில் வேட்டையாடுவதில்லை என்று அவர் தாமே ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றார்" என்றெழுதியிருக்கின்றார். பின்பு சிலநாட்கழித்து நம் சக்ரவர்த்தி பலஸ்தீனுவிலுள்ள ஜாப்வா துறைமுகத்தில் மார்ச்சு 31-ல் தம் பரிவாரங்களுடன் கரையிறங்கி எருசலேம் நகரடைந்து அந்த

கரையும் அடுத்துள்ள விசேஷித்த இடங்களையும் பார்த்துவிட்டுப் பெத்தானியில் சிலகாலம் தங்கினார்.

அந்தப்பிரதேசத்திலுள்ள மாக்பேலா குகாலயத்தையும் அதி பத்ரமாகக் காக்கப்பட்டுவரும் ஹெப்ரோன் மசூதியையுங்கூட நம்சக்ரவர்த்தியும் டீன்ஸ்டேன்லீயும் தரிசித்து மகிழ்ந்தார்கள். டீன்ஸ்டேன்லீ முன்முறையில் எருசலேம் யாத்திரை வந்திருந்தபோது இவ்விரண்டிடங்களையும் தரிசிக்கவில்லை. அந்த ஹெப்ரோன் மசூதியை அதற்கு முன் எழுநூறு வருஷங்களாக எந்த ராஜாதி ராஜர்களும் தரிசிக்க இடம் பெற்றதில்லையாம். தரிசிக்க அனுமதி கொடுக்கக்கூடுமோ என்று அதன் விசாரணை கர்த்தராயிருந்த துருக்கியகனவானை நம்சக்ரவர்த்தி கேட்டபோது அவர் "மகாராணியாரின் புதல்வராகிய உமக்கேயன்றி வேறியார்க்கும் நான் இந்த வாசலைத்திறந்துவிடேன். வேறெந்த மன்னனாவது இதனுட் பிரவேசிக்க முயன்றிருந்தால் உண்மையாகவே அவன் தன்னுயிரை உடனே இழந்திருப்பான்" என்றுரைத்தார். ஆனால் நமது சக்ரவர்த்தி தம்மோடு டீன்ஸ்டேனிலீயையும் உடன் செல்ல அனுமதிதருவதாக இருந்தால் மட்டும் தமக்கு அம்மசூதியைத்தரிசிக்க இஷ்டமேயன்றித் தனியாகத் தமக்கு மட்டும் அனுமதி கொடுப்பதாக இருந்தால் தரிசிக்க இஷ்டமில்லை என்றார். பின்பு அத்துருக்கியகனவான்



நம்சக்ரவர்த்தியின் அபிப்பிராயப்படியே டீன்ஸ்டேன்லீக்கும் அனுமதி தந்தார். அதைத்தரிசித்து மீண்டபின் டீன்ஸ்டேன்லீ நம்சக்ரவர்த்தியை நோக்கி "உம்முடைய தயவில்லாதிருந்தால் இம்மகா மகிமையுள்ள ஸ்தானத்தைத் தரிசிக்கும்பாக்கியம் கிடைத்திராது. அதற்காக மிக்க நன்றியுடையேனாக இருக்கின்றேன்" என்றார். அதற்கவர் "ஐயா கடைசியாகப் பார்க்கப்போனால் உயர்ந்த பதவியில் விசேஷித்த பிரயோஜனமே இருக்கின்றதென ஏற்படுகின்றது பார்த்தீரா?" என்றார். அதற்கு டீன்ஸ்டேன்லீ "அது வாஸ்தவந்தான் ஐயா, ஆயின் தாங்கள் எப்பொழுதும் தங்கள் பதவியின் செல்வாக்கைப் பரோபகாரார்த்தமாகவே உபயோகிப்பீர்கள் என்று நம்புகின்றேன்" என்றார்.

நம்சக்ரவர்த்தி பின்னும் அப்பக்கங்களில் பார்க்கத் தக்கனவாயுள்ள முக்கியமான இடங்களையெல்லாம் பார்த்துவிட்டு மே. 13-ல் ஊர்நோக்கிப் புறப்பட்டு, வரும் வழியில் கன்ஸ்டாண்டிநோபிள், எதன்ஸ், மால்டாமுதலிய இடங்களையும் பார்த்துவிட்டு ஊர்வந்து சேர்ந்தார். தம் சுற்றத்தார்களுக்கும் சிநேகிதர்களுக்கும் பிரீதியான காரியங்களைத் தம் சொந்தச் சிரமம் பாராது செய்து மகிழ்வது நம் சக்ரவர்த்தியின் சுபாவம். அவர் இந்த யாத்திரையில் சென்றிருந்த பற்பல இடங்களிலும் விசேஷித்த புஷ்பவகைகள் என்ன

இருக்கின்றன என்று தேடிக்கண்டுபிடித்து அவற்றைத் தாமாகவே பறித்துலர்த்திப் புஷ்பங்களில் அதிக பிரீதியுள்ள தம்தமக்கையாருக்கு அனுப்பினார். நம்சக்ரவர்த்தி விடுவந்து சேர்ந்ததும் அவரது அன்பான தங்கையாராகிய ஆலிஸ் ராஜகுமாரியாருக்கு அதிவிமரிசையாக விவாகம் நடந்தது.

## ஒன்பதாம் அத்தியாயம்.

## திருமணம்.

நமது எட்வர்ட் சக்ரவர்த்தியின் திருமணமானது அவருடைய பிதா உயிரோடிருக்கும் காலத்திலேயே உத்தேசிக்க பட்டிருந்தது. நம்சக்ரவர்த்தியும் டேனிஷ்ராஜ கன்னிகையாராகிய அலெக்ஸாண்டரா பிராட்டியாரும் இருவரை யொருவர் சந்தித்துக்காதல் கொள்ளுவார்களாயின் அவ்விருவர்க்கும் விவாகம் செய்விக்கலாம் என்ற நோக்கத்துடனேயே ஆல்பர்ட் கோமான் தமது அந்திய காலத்துக்குச்சற்று முன்னே தம்புதல்வராகிய சக்ரவர்த்தியைத் தேசயாத்திரைப் பயிற்சி என்ற வியாஜத்தின்மேல் ஜெர்மனிக்கனுப்பினார் என்பதும் அங்கே அவ்விருவரும் சந்தித்தொருவரை யொருவர் மிகவும் காதலித்ததை அறிந்து மிகமகிழ்ச்சி யடைந்திருந்தார் என்பதும் நாம் முன்னரே கூறி யிருக்கின்றோமல்லவா? இவ்வாறு இவ்விவாகம் முன்னரே உத்தேசிக்கப் பட்டிருந்தாலும் ஆசாரப்படி நடக்கவேண்டிய விவாக உடன்படிக்கை 1862 செப்டெம்பர் 9-ல் தான் நடந்தது. ஆயின் அவ்

வருஷம் நவம்பர் 9-க்குமேல் லண்டன் கெஜட்டில் கிரமப்படி பிரசுரிக்கப் படுகிறதற்குமுன் அன்னியர்கள் யாருக்கும் தெரியாது. அப்புறம் அவ்விஷயம் பிரிட்டிஷ் ராஜ்யம் முழுவதிலுமே பரவியது. பிரஜைகள் அனைவரும் அறிந்து பேரானந்தம் கொண்டார்கள்.

நம்சக்ரவர்த்திக்கு அவரது விவாகத்துக்குப் பிந்திய கிரகஸ்திய செலவுக்காக ராஜ்யத்திலிருந்து வருஷவாரி 40,000 பவுன் அதாவது ஆறு லக்ஷம் ரூபாய் கொடுத்து வரவேண்டுமென்று பாமர்ஸ்டன் பிரபு பிரேரேபித்தார். அதைப் பார்லிமெண்டார் அனைவரும் பூர்ணமனதோடு அங்கீகாரம் பண்ணியதுமன்றி நம் அலெக்ஸாண்ட்ரா பிராட்டியார்க்கும் பிரத்தியேகமாக வருஷவாரி 10,000 பவுன் அதாவது மாதம் பன்னீராயிரத் தைந்நூறு ரூபாய் வீதம் கொடுத்துவரவேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். முன்னமேயே நம்சக்ரவர்த்திக்குத் தம் சொந்த நிலபுலங்களிலிருந்து மாதம் அறுபத்திராயிரத் தைந்நூறு ரூபாய் வருவாய் உண்டு. ஆகவே நம் சக்ரவர்த்தியும் அலெக்ஸாண்ட்ரா சக்ரவர்த்தினியும் மாதம் லக்ஷத்தி தொண்பத்தேழாயிரத் தைந்நூறு ரூபாய் வருவாயோடு தங்கள் கிரகஸ்தியம் தொடங்கினார்கள் என்றேற்படுகின்றது.

விவாக மஹோத்சவம் 1863 மார்ச்சு மீ 10 தேதியென்று நிச்சயிக்கப்பட்டது. இடையில் நம்சக்ர-



வர்த்தி தம்விவாக மஹோத்சவத்தின்போது விஜயம் செய்யும் மகா புருஷர்களுக்கு விடுதியமைப்பித்தல், மாளபரோ அரண்மனையில் தம்பிதா தொடங்கி விட்டிருந்த கட்டிட வேலைகளைச் செய்து முடிப்பித்தல் முதலிய பலவற்றையும் செய்து முடித்தார். விவாகத்துக்குச் சற்றுமுன்னே பெப்ருவரி 5-ல் அவர் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் பிரபுக்கள் சபையில் ஒருவராக ஏற்கப்பட்டார்.

டென்மார்க்கில் இவ்விவாக விஷயம் தெரிந்ததும் அத்தேசத்து ஜனங்கள் அதிக மகிழ்ச்சியடைந்து நம் அலெக்ஸாண்ட்ரா பிராட்டியாருக்கு "ஜனங்களின் சீதனம்" என்று வைரம் முதலான ஆபரணங்களைச் சமர்ப்பித்தார்கள். இதையன்றி அக்கடல் சூழ்ந்த ராஜ்யத்திலுள்ள பிரஜாகோடிகள் தத்தம் சக்திக்கியைந்தனவாகச் சமர்ப்பித்த சீதனப்பொருள்களனேகமிருந்தன. நம் அலெக்ஸாண்ட்ரா சக்ரவர்த்தினியின் வேண்டுகோளின்படியே அவருடைய பிதா அத்தேசத்து ஏழைக்குடும்பங்களைச் சார்ந்த கன்னிகைகள் ஆறு பேருடைய விவாகங்களுக்கென்று பெருந்திரவியம் உதவினார். இச்செய்தியொன்றே தெரிந்ததும் நம் சக்ரவர்த்தினியின் கீர்த்தி முன்னிலும் பதின்மடங்கதிகமாகப் பரவியது.

நம் அலெக்ஸாண்டிரா பிராட்டியார் தம்பிரதான தாசுகர், சிநேகித சிநேகிதிகள் முதலிய வர்களுடன் அதிக ஆடம்பரத்தோடு கோபன்ஹேகன்விட்டு பெப்ருவரி 26-ல் புறப்பட்டு மார்ச்சு 7ம் தேதி காலை 11½-மணிக்கு க்ரேவ்ஸெண்ட் வந்துசேர்ந்தார். அடுத்த நிமிஷத்திலேயே நமது எட்வர்ட் சக்ரவர்த்தியும் பரிவாரங்கள் புடை சூழப்புறப்பட்டு அங்கே சென்றடைந்தார். அவர் அக்கரையில் அடிவைத்ததும் சக்ரவர்த்தினியாம் இருந்த காவலறையைத் திறந்துகொண்டு அவரைச் சந்திக்க முன்வந்தார். உடனே அவருடைய கரத்தை நம் சக்ரவர்த்தி பற்றி அவரை அன்போடு முத்தமிட்டார். அதுகண்டதும் கப்பலிலும் கரையிலும் கூடியிருந்த ஜனங்களனைவரும் சந்தோஷம் செய்து மகிழ்ந்தார்கள். பின்பு நம்சக்ரவர்த்தி அவளையும் அழைத்துக்கொண்டு பிராட்டியுடன் வண்டியேறி லண்டன் மாநகரத்து வழியாகப் பவனிசென்றார். அவர்கள் வரும் மார்க்கத்தில் அநேகர் பலவகைப் புஷ்பங்களை வாரியிறைத்தார்கள். அப்பவனி லண்டன் நகரத்தின் பாலத்தண்டை நம் முன்பிராட்டியார் அமைத்திருந்த மண்டபத்தினுள் நுழைந்து சென்ற அற்புத காட்சி ஒருபோதும் மறக்கற்பாலதல்லவென்று பார்த்தோர் அனைவரும் பகர்ந்தனர். அப்பவனி அம்மண்டபத் தண்டையடைந்ததும் அம்முன்பிராட்டியார்



எதிர்வந்து கல்யாணக்கொண்டாட்ட வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தார்கள். அலெக்ஸாண்டிரா பிராட்டி அன்று அம்மண்டபத்தின் வழியாக லண்டனுட் பிரவேசித்ததற்கு அறிகுறியாகச் செதுக்கப்பட்ட பதக்கம் லைபரன் என்பவரின் குந்தனவேலைத்திறத்தின் மேன்மைக்கடையாளமாக இன்றும் விளங்குகின்றது. அதில் அலெக்ஸாண்டிரா பிராட்டியை நம்சக்ரவர்த்தி அம்மண்டபத்தின் வழியாய் அழைத்து வருகையில் லண்டன் மாநகரத்தார் அங்கள் பிராட்டிக்கு விவாக சம்பாவனை செய்வதற்காக ஓர் வைரகண்டியும் காருடபாணமும் ஏந்தி எதிர்கொண்டுவருகிற பாவனையாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது.

அன்று லண்டன் நகரில் குடிகளுடைய ஒன்று கூடப் பாக்கியின்றி எல்லா இடங்களிலும் திவ்வியமாக அலங்கரித்திருந்தார்கள். பற்பல இடங்களிலும் அமைத்திருந்த மண்டபங்களின் அழகோ சொல்லி முடியாது. அன்று அந்த கல்யாண கொண்டாட்டத்திற்காக நாற்பத்தெட்டு லக்ஷம் ரூபாய் செலவிட்டிருக்கின்றார்களென்றால் அன்று அங்கிருந்திருக்கக் கூடிய சம்பிரமங்களை இன்னின்னவென்று எடுத்துரைக்க முடியுமா? பவனி செல்லும் வழியில் மற்ற கூட்டத்தாரும் அங்கங்கே எதிர்வந்துபசரித்து வந்தனோபசாரபத்திரம் படித்தார்கள். பார்ப்பதற்காக வந்து கூடிய ஜனங்

கள் பத்து வருஷத்திற்குமேலிருக்குமாம். அன்று சாயங்காலம் நாலு மணிக்குமேல் அலெக்ஸாண்டிரா சக்ரவர்த்தினி மற்றவர்களுடன் பாடிங்டனிலிருந்து புகைவண்டியேறி விண்ட்ஸர் அரண்மனைக்குப் புறப்பட்டார். அவ்விடத்தில் நடந்த உபசாரமும் லண்டன்மா நகரின் உபசாரத்திற்குக் குறைந்து போகவில்லை. இவர்கள் அங்கே சென்றதும் ஈடன் கலாசாலை மாணவர்கள் எதிர் வந்து தாங்கள் என்றுமறுபெயரும் கையெழுத்திட்ட வந்தனோபசார பத்திரிகையைச் சமர்ப்பித்தார்கள். அலெக்ஸாண்டிரா பிராட்டியார் விண்ட்ஸர் அரண்மனையை சமீபித்ததும் அவரைத் தம் குழந்தைகளும் கவுரவஸ்தான மகாஜனங்கள் பலரும் புடைசூழ்ந்துவர விக்டோரியா சக்ரவர்த்தினியார் எதிர்கொண்டுவந்துபசரித்தார். அடுத்த இரண்டு நாளும் அலெக்ஸாண்டிரா பிராட்டியார் ஓய்ந்திருந்து சிரமபரிகாரஞ் செய்து கொண்டார்.

மார்ச்சு மாதம் 10-ம் தேதி ஆகிய அடுத்த நாள் பகல் 12-மணிக்குத்தான் விவாக முகூர்த்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. நமது எட்வர்ட் சக்ரவர்த்தி முகூர்த்த காலத்துக்குச் சற்றுமுன்பாகவே மணக்கோலத்துடன் சென்ட் ஜார்ஜ் ஆலயத்தண்டை வந்தடைந்து வழக்கப்படியே மணமகளாரின் வருகை நோக்கிச் சித்தமாக நிற்கின்றார். அப்போது ஆகரித்து நிற்க அவரண்டை



யில் தங்கள் பிதா இல்லாதது அவர் தனித்து நிற்க நேர்ந்திருந்திருப்பதை நினைந்து அவருடைய சகோதரிமார்களனைவர்க்கும் கண்களில் நீர் பெருகியது. ஆயினும் அவர்கள் நால்வரும் அதனை அடக்கிக்கொள்ளா வண்ணம் தங்கள் கைகளிலிருந்த புஷ்பத்தாரங்களால் தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டார்கள். பின்பு மணமகளாரும் வந்துசேர்ந்து உடனே அவ்வரும் ஆலயத்துட் பிரவேசித்தார்கள். அன்று நம் அலெக்ஸாண்டிரா பிராட்டிக்கு லேடி விக்டோரியா ஸ்காட், லேடி விக்டோரியா ஹோவர்ட், லேடி அக்னிடா யார்க், லேடி பியோடோரா வெல்லஸ்லி, லேடி டயானா பியூக்ளர்க், லேடி. கோர்னிலி ஹாஸ்டிங்ஸ், லேடி. அல்மாப்ரூஸ், லேடி. ஜெனிரு ஜெமர், என்ற கோமகன்மார் எண்மரும் தோழிமார்களாக நின்றார்கள். விவாகச் சடங்குகளை காண்டர்பரி அத்தியக்ஷகர் கிரமப்படி நடத்தினார். சடங்குகள் இங்கிலாந்திலேயே முடிந்தன. விவாக சடங்குகள் முடிந்ததும் வதுவரர்களிருவரும் கைகோர்த்துக்கொண்டு சபையார்க்கு முன்பாகத் திரும்பிநின்று விக்டோரியா சக்ரவர்த்தினியாரை வணங்கினார்கள், அவரும் இவர்களை ஆசீர்வதித்தார். மணமகளார்க்கு நம் சக்ரவர்த்தியும் அவர் தாயாராகிய விக்டோரியா சக்ரவர்த்தினியாரும் அளித்த விலைமதிக்க வொண்ணாத ஆடையாபரணங்களையும், லண்டன் நகரத்து மகா

ஜுஸ்கள் சமர்ப்பித்த லக்ஷத்தம்பதினாயிரம் ரூபாய் பெறுமான வைரகண்டியையும் அன்றி இன்னும் எத்தனையோ சீதனங்கள் அளிக்கப்பட்டன.

பின்பு அங்குவந்திருந்த விருந்தினர் பலர்க்கும் அந்த செயின்ட்ஜார்ஜ்மண்டபத்தில் சம்பிரமமாக விருந்து நடந்தது. டென்மார்க்கிலும் அதே நேரத்தில் பணக்காரர்கள் ஏழைகள் என்ற பேதமின்றிப் பிரஜைகள் அனைவர்க்கும் சம்பிரமமாக விருந்தளிக்குமாறு மணமகளாரின் பிதா ஏற்பாடு செய்திருந்தார்.

வதூவரர்களிருவரும் அன்றுமாலை நான்கு மணிக்கு அவ்வாலயத்தை விட்டுப்புறப்பட்டு ஆஸ்பர்ன் அரண்மனையடைந்து சிலநாள் வரை அதிவிநோதமாக அமர்ந்திருந்துவிட்டு மீண்டும் வின்ட்ஸர் அரண்மனைவந்து சேர்ந்தார்கள். அவ்விவாக சம்பிரமங்களனைத்தையும் எடுத்து விவரிக்க ஒருவராலும் இயலாது. காலஞ்சென்ற பிஷப் வில்பர்போர்ஸ் என்பவர் அவ்விவாகத்தைப்பற்றிக் குறிக்கநேர்ந்தபோது "இவ்விவாகத்தின் காக்ஷி அதியற்புதமாக இருந்தது. இது போன்றதோர் காட்சியை நான் என்றும் கண்டதில்லை" என்றெழுதியிருக்கின்றார். டாக்டர் நார்மன் மெக்லியோட் என்பவர் இது விஷயமாகத் தம் நண்பர்க்கெழுதிய நிருபமொன்றில் "நான் மார்ச்சு 10-ம் தேதி வின்ட்ஸர்வந்து சேர்ந்து விவாக மகோத்சவம் தரிசிக்கச் சென்றிருந்தேன். நான் டிஸ்ரேலி, பார்க், ஸ்டேன்லி என்பவர்களுக்குப் பின்னே மணமக்களுக்கெதிரில் வாய்ப்பான ஓரிடத்தில் உட்கார்ந்திருந்தேன். உண்மையாகவே இவ்விவாகக் காட்சி அதியற்புதமாக இருந்தது......... இரண்டு விஷயங்கள் என்மனத்தில் பட்டன. மணமகளாரின் வருகையை எதிர்பார்த்து நின்றுகொண்டிருந்தபோது அண்டையில் தங்கள் பிதா இல்லாது தங்கள் சகோதரர் தனித்து நிற்பது கண்டு நம் வேல்ஸ் இளவரசராகிய மணமகனின் சகோதரிமார்கள் அனைவரும் நீர்ததும்பும் தங்கள் கண்களைக் கைகளிலுள்ள புஷ்பத்தொங்கல்களால் மறைத்துக்கொண்டு நின்றதொன்று, தம் நாயகருக்கு பிரியமான கீதத்தைப் பாடிய போது வானுலகில் ஈசுவர சந்நிதானத்தில் தம் நாயகரோடு ஒன்றி நிற்பார்போல விக்டோரியா சக்ரவர்த்தினியார் தம் கண்களை ஏறெடுத்து வானத்தை நோக்கிக் கொண்டு நின்றதோர் கோலம் மற்றொன்று" என்று எழுதியிருக்கின்றார்.

## பத்தாம் அத்தியாயம்.

# ஆரம்ப தாம்பத்தியம்

நமது விக்டோரியா சக்ரவர்த்தினியார் தம் நாயகரின் தேகவியோகத்துக்குப் பின் அநேக நாள் வரை வெளியிலேயே பிரவேசியாதிருந்தார்கள். ஆதலால் அவர் செய்யவேண்டிய பொதுக் காரியங்களை அனைத்தையும் நம் சக்ரவர்த்தியும் அவர் மனைவியாருந்தான் தங்கள் தாம்பத்தியத்தின் ஆரம்பத்திலேயே செய்யவேண்டியவர்களாக இருந்தார்கள். அந்த மணமக்கள் இருவருக்கும் சைனியத்தைச் சார்ந்த வாலிபர்கள் ஒரு பெரிய விருந்தளித்து உபசரித்தார்கள். அவ்விருந்து லண்டனிலுள்ள இண்டர்நாஷனல் கண்காட்சி மண்டபத்தில் நடந்தது. அன்று அம்மண்டபத்தை அதிவிசித்ரமாக அலங்கரித்திருந்தார்கள். அவ்விருந்து நடத்துதற்கென்றேற்பட்டிருந்த நிர்வாக சபையின் தலைவராகிய கேம்பிரிட்ஜ் கோமானின் முயற்சியால் அன்று நடந்த உத்தேசித்திருந்த நடனம் முதலியவை அனைத்தும் அதியற்புதமாக நடந்தன. நம் சக்ரவர்த்தியும் அவர் பத்தினி



யாரும் அன்றிரவு முழுதும் அங்கேயே இருந்து மகிழ்ந்து அவ்விருந்தில் அங்குள்ளோருக்கிருந்த திருப்தியை யுணர்த்தினார்கள்.

ராயல் அகாடெமியின் ஆண்டு விருந்தின்போது நம் சக்ரவர்த்தி அங்குச் சென்று செய்த அற்புதமான சிறு பிரசங்கத்தைக் கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் அதிக திருப்தியடைந்தார்கள். அந்த உத்சவத்தைப் பற்றிக் குறிப்பிட்டெழுதும்போது ஈஸ்ட்லேக் பெருமாட்டி "ராயல் அகாடெமியின் வருஷோத்ஸவத்தில் அனைத்தும் வெகுசீராக நடந்தன. வேல்ஸ் இளவரசரின் குணவிசேஷங்களைக் கண்டு அவரிடம் என் பக்ஷத்துக்குண்டான பிரீதிக்கெல்லையே இல்லை......இளவரசர் தம் பிரசங்கத்தில் தம் தந்தையாரைப்பற்றிப் பிரஸ்தாபிக்க நேர்ந்தபோது அவர்க்குப் பேச்சே எழவில்லை. அவர் உருகியது கண்டு அனைவரும் உருகினார்கள்" என்றெழுதியிருக்கின்றார். அன்று அங்கிருந்து பிரசங்கித்தவர்களுள் வில்லியம் மாக்பீஸ் தக்கரேயும் ஒருவர். அவ்வுத்ஸவம் நடந்த சில நாட்களுக்குள் அவர் பரலோகப்ராப்தி யாய்விட்டமையின் அதற்குப் பின் சில மாதங்கள் கழித்து நிகழ்ந்த ராஜாங்கக் கல்விநிதியின் வருஷோத்ஸவத்தின்போது நம் சக்ரவர்த்தி செய்த பிரசங்கத்தில் அந்த தக்கரே என்னும் ஆசிரியரின்

பரோபகாராதி சீலங்களை எடுத்து அதிக உருக்கத்துடன் பிரஸ்தாபித்தார்.

ஜூன் 8-ல் லார்ட்மேயரால் நம் சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தினிக்கும் கைல்ட்ஹாலில் ஒரு பெரிய விருந்தளிக்கப்பட்டது. அன்று நம் சக்ரவர்த்தி தமக்குப் பிதிரார்ஜிதமாக எய்தவேண்டிய நகர ஸ்வதந்தரத்தை வகித்தார். அதற்குப் பின் ஒருவாரங்கழித்து அவ்விருவரும் ஆக்ஸ்போர்ட்டுக்குச் சென்றார்கள். அவர்களை அங்கே அச்சர்வகலாசாலையைச் சார்ந்தோர் அனைவரும் அதிக குதூகலத்துடன் எதிரேற்றுபசரித்தார்கள்.

நம் சக்ரவர்த்தி ஆக்ஸ்போர்ட் சென்று வந்த சிலநாட்களுக் கெல்லாம் தம்பத்தினியாருடன் மார்ல்பரோ அரண்மனையில் வசிக்கத் தொடங்கினார். கோடைகாலத்தில் சிலமாதங்கள்வரை சாண்ட்ரிங்ஹாமில் முன்பிருந்த அரண்மனையில் வசித்தார்; அங்கே அநேகர் நம்சக்ரவர்த்திக்கு விருந்தினராகச்சென்று வந்தார்கள். ஆரம்பத்தில் ஈஸ்டர் ஞாயிறன்று சென்ற விருந்தினர்களுள் ஒருவராகிய டாக்டர் ஸ்டேன்லி என்பவர் "முந்திய நாள் மாலையில் வேல்ஸ் இளவரசியார் ஜபபுஸ்தகத்தை கையில் எடுத்துக்கொண்டு முன்மண்டபத்தில் என்னண்டை வந்துட்கார்ந்தார்கள். பரிசுத்தநற்கருணை முதலியசடங்குகளில் நமக்கும்



பிரடெஸ்டண்ட் சபையாருக்கும் உள்ள பேதங்களையெல்லாம் நான் எடுத்து விவரித்தேன். இளவரசியின் குணநிசயங்கள் அதியற்புதமானவை...... சாண்ட்ரிங்ஹாமுக்குச்சென்றதில் எனக்கு அதிகதிருப்தி. நான் அங்கே மூன்றுநாளிருந்தேன். ஜபநாள் முழுவதும் வினயத்துடன் பிரசங்கமும் செய்து முன்முதலாக நம் இங்கிலிஷ் முறைப்படியான பரிசுத்த நற்கருணையை அந்நாட்டார்களுக்கு அளித்துவிட்டுவந்தேன். நம் வேல்ஸ் இளவரசியைப்போன்ற சவுந்தர்யவதி இதற்குமுன் இருந்ததா என்கிறதற்கு கதைகளிலும் விவரிக்கப்பட்டதில்லை என்று உறுதியாகச்சொல்வேன். கவனித்துப்பார்த்ததில் அவ்வித சவுந்தர்யத்துக்குத்தக்க குணாலங்காரங்களிலும் அவர் சிறந்து விளங்கும் மாட்சிமை அறிந்தமகிழ்ந்தேன்" என்றெழுதி யிருக்கின்றார்.

1864 ஜனவரி 7-ல் நம் சக்ரவர்த்திக்கு ஜேஷ்டபுத்ர ஜனனம் ஆயிற்று. ஆலிஸ் ராஜகுமாரியார் ஜனவரி 9-ல் நம்விக்டோரியா சக்ரவர்த்தினிக் கெழுதிய நிருபத்தில் "புத்ர ஜனன விஷயமாக நமது பெர்டி அனுப்பிய தந்தியைக் கண்டதும் நான் திகைத்துப் போனேன்" என்றெழுதி யிருக்கின்றார். ஏனென்றால் அந்தப் பிரசவம் மார்ச்சு மாதத்தில் நடக்கும் என்றெல்லாரும் எதிர்பார்த்திருந்தார்கள். அப்படி இருக்க நம் அலெக்ஸாண்டிரா சக்ரவர்த்தினி எட்டாம்

மாதம்பிறகு ஜனவரி ஆரம்பத்திலேயே பிரசவித்து விட்டமையின் அது அனைவர்க்கும் சிறிது கவலைக்கிடமாக ஆயிற்று. ஆனால் பிராட்டியும் சேயும் சுக மடைந்தமையால் ராஜகுமாரன் ஆரோக்கியத்தில் சிறந்து வரவே அனைவர்க்கும் ஆநந்தமுண்டாயிற்று. அந்தப் பிரதமப் பிரசவத்தின்போது நம் அலெக்ஸாண்ட்ரா பிராட்டிக்கு இருபது வயதுங்கூட நிறைவுறாதிருந்தாலும் குழந்தை வளர்ப்பில் நமது விக்டோரியா சக்ரவர்த்தினியாரைப்போலவே அதிசதுரராக இருந்தார்.

1864 ஜூலையில் நம் சக்ரவர்த்தி தம் பத்தினியாருடன்சென்று லண்டன் ஆஸ்பத்திரியின் மேற்குச் சிறகின் கட்டிடத்துக்குஅஸ்திபாரம் போட்டுவைத்தார். அவ்வருஷக்கடைசியில் அவர் தம் மனைவியாரையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு டென்மார்க்கு தேசம் சென்று வந்தார். அதுதான் அவர் முதன் முதலாகத் தம்மாமனார் கிரகத்துக்குச் சென்றது. அப்போது அங்கே இவர்களுக்கு விருந்து முதலியவையெல்லாம் அதியற்புதமாக நடந்தன.

1865-ல் நம் சக்ரவர்த்தி தம் பத்தினியாருடன் அயர்லாண்டுக்கு விஜயம் செய்து மே 9-ல் டப்ளின் பட்டணத்தில் நடந்த கண்காட்சிச் சாலையைப் பிரதிஷ்டை செய்துமகிழ்ந்தார். அம்மாதக்கடைசியிலேயே அவருடைய த்விதீயபுத்ரர் ஜனித்தார்.



விக்டோரியா சக்ரவர்த்தினியார் தம் பர்த்தாவின்தேவியோகத்துக்குப்பின் அனேகநாளாக பார்லிமெண்ட் சபையை நேராகச்சென்று தொடக்கம்செய்யவில்லை. முதன்முதல் 1866 பெப்ருவரியில் தான் நேராகச்சென்றார்கள். அப்போது நம்சக்ரவர்த்தியும் தம்பத்னியார் சகிதமாகத் தம் தாயாருடன் பார்லிமெண்டுக்குச்சென்று மீண்டார்.

நம்சக்ரவர்த்தியும் அவர்பத்தினியாரும் அடுத்த ஆறு வருஷங்களும் பற்பல கட்டிடங்களுக்கு அஸ்திபாரம் போட்டும் பற்பல தேசங்களுக்கு யாத்திரை போய் வந்தும் வைப்கோமகனார், விக்டோரியா ராஜகுமாரியார் என்ற குழந்தைகளைப் பெற்றும் அதிக மகிழ்ச்சியுடன் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்

## பதினொன்றும் அத்தியாயம்.

## பிராணபாயம்.

1871 நவம்பர் 9-ல் நம் சக்ரவர்த்தி தம் பிறந்த நாளைத் தமது சான்ட்ரிங்ஹாம் அரண்மனையில் விமரிசையாகக் கொண்டாடினார். அவரது அன்பான சகோதரியாராகிய ஆலிஸ் ராஜகுமாரியும் அப்போது உடனிருந்து மகிழ்ந்தார். அக்கொண்டாட்டத்தின் போது அது நடந்த சில நாட்களுக்குள் நம்சக்ரவர்த்தி வியாதியாகப் படுப்பாரென்று ஒருவரும் உத்தேசித்ததில்லை. தம் பிறந்தநாள் கழித்துச் சில நாள்களுக்கெல்லாம் ஏதோ கார்யார்த்தமாக நம் சக்ரவர்த்தி லண்டனுக்குப் போயிருந்தார். அங்கே இருக்கையில் அவருக்குச் சிறிது தேக அசௌக்கியம் கண்டது. பின் அது நாளுக்கு நாள் அதிகரிக்கவே ஒரேபிடிவாதமாகப் புறப்பட்டு சான்ட்ரிங்ஹாம் அரண்மனை வந்து சேர்ந்தார். பார்த்தவர்கள் அது அஸ்தி ஜுரம் என்று சொன்னார்கள். வியாதி நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்து அம்மாதக் கடைசியில் மிகக்கெட்டான நிலைமைக்கு வரவே விக்டோரியா சக்ரவர்த்தினி



யார் முதலிய ராஜகுடும்பத்தார் அனைவரும் நவம்பர் 29-ல் சான்ட்ரிங்ஹாம் அரண்மனை அடைந்தார்கள். அதைக்கேட்டு உலகத்துள்ள பிரஜா கோடிகளனைவரும் உள்ளங்கலங்கினார்கள். சக்ரவர்த்திக்கு ஆரோக்கியம் அருளும்படி சர்வமதஸ்தர்களும் ஆண்டவனையடிபணிந்தார்கள். இங்கிலாந்திலுள்ளவர்களோ இரவும் பகலும் ஜெபம் பண்ணிய வண்ணமாக இருந்தார்கள். சக்ரவர்த்தியின் அப்போதப்போதுள்ள தேகஸ்திதியை அறிந்து கொள்ளும் பொருட்டு அதிக ஆவலுடன் தந்தியாபீசுகளண்டையெல்லாம் திரண்டிருப்பாரும், அப்போதப்போதுள்ள ஸ்திதியை விவரமாக அறிந்து கொள்ளுதற்காக வர்த்தமானபத்திரிகைகளில், வரவு சேர்க்கிப் பட்டணங்கள் தோறும் உள்ள தபாலாபீசுகளண்டையில் கூட்டம் கூட்டமாகக் கூடியிருப்பாருமாக ஜனங்கள் அலைந்த அலைச்சலுக்குக் கணக்கேயில்லை. கடைசியாக டிசம்பர்மாத முதலில் அவர்க்குச் சிறிது பிரக்ஞை வந்தது. பிரக்ஞைவந்ததும் தம்மண்டையில் இருப்பவர்களை நோக்கி "இது தான் இளவரசியின் ஜனன தினம்" என்றார். பின்பு விக்டோரியா சக்ரவர்த்தினியார் சான்ட்ரிங்ஹாமுக்கு வந்திருந்தார் என்று கேட்டதும் "மகாராணியார் ஸ்காட்லண்டிலிருந்து வந்து விட்டாரா நான் வியாதியாகப் படுத்திருப்பது அவருக்குத் தெரியுமா!"

என்று கேட்டார். அப்புறம் ஒன்றும் பேசவில்லை மீண்டும் மயங்கிவிட்டார். திரும்பவும் ராஜகுடும்பத்தார் அனைவரும் அவருடைய படுக்கையண்டை அடைந்தார்கள். பின்னர் டிசம்பர் 9-ல் ஜுரம் நின்றுவிட்டது. பிரக்ஞையும் உண்டாயிற்று, ஆயினும் ஆயாசம் மட்டும் அதிகமாக இருந்தது. அன்று நம் அலெக்ஸான்டிரா சக்ரவர்த்தினி ஆலயஞ் சென்று பகவானைப் பணிந்து வந்தார். அவ்வாறு அவர் ஆலயத்திற்குப் புறப்படுவதற்கு முன்பாகவே சான்டரிங்ஹாமைச் சார்ந்த ஆலயத்தின் குருவுக்கு "என் நாயகர்க்குச் சிறிது ஆரோக்கியம் எய்தி யிருக்கின்றமையின் நான் இன்று தேவாலயத்துக்கு வருகின்றேன். ஆயினும் ஆராதனை முடியும் வரையும் அங்கே யிருக்க முடியாது சீக்கிரமே அவரது சிஸ்ருஷைக்காக வீடுவந்து சேரவேண்டும். ஆதலின் இன்று ஜெபத்தின் ஆரம்பத்திலேயே என் நாயகர் விஷயமாகச் சில வார்த்தைகள் உரைப்பீராயின் நானும் உடன் சேர்ந்து ஜெபித்துவிட்டுத் திரும்புதற்கு அனுகூலமாக இருக்கும்" என்று எழுதியிருந்தார். அடுத்த நாள் டைம்ஸ் பத்திரிகை "இளவரசர் இன்னும் உயிரோடிருக்கின்றார்; ஆதலால் நாம் இன்னும் நம்பிக்கைவைக்கலாம்" என்று கூறியது. அப்படியே பின்னும் நாலைந்து நாள் அதிக கவலைக்கிடமாகவே இருந்துகொண்டிருந்தது. அப்புறம்



16-ம் தேதியில் டைம்ஸில் "ரோகஸ்தர் நன்றாகத் தூங்கினார்" என்று பிரசுரித்திருந்தது. அடுத்த நாளாகிய 17-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை சான்டரிங்ஹாமிலிருந்த ராஜகுடும்பத்தாரனைவருமே தேவாலயத்துக்குச் சென்றிருந்தார்கள். அன்று பிரத்யேகமான ஏற்பாட்டின்மேல் திருச்சபையார் அனைவரும் நமது சக்ரவர்த்திக்கும் அவரது வேலைக்காரனாகிய ப்ளெக்கி என்பவனுக்கும் இரங்குமாறு பகவானைப் பிரார்த்தித்தார்கள். நம்சக்ரவர்த்தியும் அவரது வேலைக்காரனும், லார்ட் செஸ்டர்பீல்டும் ஆகிய மூவரும் ஏககாலத்தில் அந்த ஜுரத்தால் பீடிக்கப்பட்டார்கள். அவர்களுள் லார்ட் செஸ்டர்பீல்டு அம்மாதம் 10-ம் தேதியிலும் ப்ளெக்கி என்னும் வேலைக்காரன் மேற்குறித்த பிரார்த்தனை நடந்த 17-ம் தேதியிலும் பரகதியடைந்து விட்டார்கள். நம் சக்ரவர்த்தி மட்டும் தம் திடகாத்திரதேக சுபாவத்தாலும் உலகெங்குமுள்ள பிரஜா கோடிகளனைவரும் உள்ள முருகிச்செய்த பிரார்த்தனைகட்கிரங்கிய பகவத் கிருபா விசேஷத்தாலும் உஜ்ஜீவித்தெழுந்தார்.

நமதரசர் அவ்வகோர வியாதியினின்று ஆரோக்கியமெய்தியதின் ஞாபகார்த்தமாக நம் அலெக்ஸான்டிரா பிராட்டி ஓர் பித்தளை மேஜையைத் தேவாலயத்திற் குபகரித்திருக்கின்றார். அதின் மேல் "பகவத் கிருபா

விசேஷத்துக்காக நன்றியுடன் சமர்ப்பித்த உபயம்—14 டிசம்பர் 1871—அலெக்ஸாண்ட்ரா. நான் என் சங்கட காலத்தில் பகவானைப் பிரார்த்தித்தேன். அவர் எனக் கிரங்கினார்" என்ற கருத்துடைய வசனங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

அவ்வருஷத்திய கிறிஸ்தமஸ் பண்டிகைக்கு முன்பாகவே நம்சக்ரவர்த்திக்குப் பூர்ணசுகம் எய்தியிருக்க வேண்டும். ஏனென்றால் நமது விக்டோரியா சக்ரவர்த்தினியார் "ராணியாரின் " புதல்வரான வேல்ஸ் இளவரசர் பயங்கரமான ஸ்திதியிலிருக்கையில் தம்மோடு சர்வபிரஜைகளும் அநுதாபங் காட்டியதற்காக ராணியார் மிக நன்றி பாராட்டுகின்றார். இதை அவர் ஒருபோதும் மறவார்" என்ற கருத்துள்ள கடிதத்தைத் தம் பிரஜைகளுக்கு டிசம்பர் 26 ல் எழுதினார்.

அடுத்த மாதக்கடைசியில் நமது சக்ரவர்த்தியார் தம் மனைவியாருடன் புறப்பட்டு லண்டன் நகருக்குச்சென்றார். அவர் அங்குவந்ததும் அவரண்டை டீன்ஸ்டேன்லி என்பவர் வந்து அப்பேயில் ஓர் நன்றி கூறாராதனை நடத்தவேண்டுமென்று பிரேரேபித்தார். நம் சக்ரவர்த்தியும் அதற்கிணங்கி அங்கு சென்றார். ராஜகுடும்பத்தைச் சார்ந்த சிலர் மட்டுமே அன்று அங்குக் கூடியிருந்தார்கள். வர்த்தமானப் பத்திரிகைகளுக்கு இவ்விஷயம் எட்டவில்லை. ஏனென்றால் அப்



பேயைச் சார்ந்த குருமார்களைத்தவிர ஒருவர்க்கும் அறிவிக்கப் படவில்லை. அன்று ஆராதனை அதிக சிரத்தையோடு நடந்தது. டீன்ஸ்டேன்லி செய்த பிரசங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் நம் சக்ரவர்த்தி அதிக கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்தார்.

இது நடந்து சில நாட்கழித்தும் ராஜ்யத்தின் நன்றியறிதல் ஸ்தோத்திரம் பெப்ருவரி 27-ல் செய்ண்ட்பால் தேவாலயத்தில் நடத்தப்பட்டது. அன்று கோமான்களும் பிரபுக்களும்சமஸ்தானஉத்யோகஸ்தர்களுமாகப் பதின் மூவாயிரம் ஜனங்கள்வரை அத்தேவாலயத்தில் கூடியிருந்தார்கள்.

அன்று பக்கிங் ஹாம் அரண்மனையிலிருந்து பகல் 12 மணிக்குப் பவனி புறப்பட்டது. முதலில் பார்லிமெண்டைச் சார்ந்த சாமான்ய ஜனசபையின் சபாநாயகராகிய ஸ்பீகர், பிரபுக்கள் கூட்டத்தின் சபாநாயகராகிய லார்ட் சான்ஸலர், சிரேஷ்ட சேனாதிபதி என்ற இவர்கள் தங்கள் வண்டிகளிலேறிச் சென்றார்கள். அவர்களுக்குப் பின்னே ராஜகுடும்பத்தா ரேறியிருந்த வண்டிகள் ஒன்பது சென்றுகொண்டிருந்தன. அவற்றுட் கடைசி வண்டியில் விக்டோரியா சக்ரவர்த்தினியார், எட்வர்ட்சக்ரவர்த்தியார், அலெக்ஸாண்ட்ரா சக்ரவர்த்தினியார், ஆல்பர்ட் விக்டர் இளவரசர், பிட்ரிஸ் இளவரசி என்ற இவர்கள் வீற்றிருந்தார்கள். இப்

பவனி கிரீன்பார்க்கண்டை அணுகியதும் மூப்பதினாயிரம் சிறுவர்கள் ஒருங்கே திரண்டெதிர்வந்துபசரித்து வாழ்த்தினார்கள். பின்பப் பவனி பகல் ஒரு மணிக்கு செய்ண்டபால் தேவாலயத்தை அடைந்தது. உடனே குருமார்கள் எதிர்வந் துபசரித்துள்ளே அழைத்துச்சென்றார்கள். அனைவரும் ஆலயத்துள்ளே பிரவேசித்து ஏற்ற இடங்களில் அமர்ந்ததும் காண்டர்பரி அத்தியக்ஷகர் ஆராதனை தொடங்கினார். நன்றியறிதல் ஸ்தோத்திரம் அந்நாளுக்கென்று பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் “இரக்கமுள்ள பிதாவே, அனைவர்க்கும் ஆறுதலளிக்கும் ஆண்டவரே, எங்களுடைய சங்கடகாலத்தில் நாங்கள் செய்த ஜெபத்திற்குச் செவிகொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகின்றோம். உமது அடியாராகிய ஆல்பர்ட் எட்வர்ட் என்னும் வேல்ஸ் இளவரசரை வியாதியினின்றும் குணப்படுத்தி எழுப்பியதற்காக உமது மகத்வம் பொருந்திய நாமத்தைத் துதித்து மகிமைப்படுத்துகின்றோம். நீர் யாரையும் எழுப்பவும் கூடும், விழுத்தவும் கூடும். ஆரோக்கியமும் தேகதிடமும் தம்முடைய ஈவுகளாக இருக்கின்றன. அவருக்குப் பூரணசுகந்தந்து அவரது உடலையும் உயிரையும் ஆசீர்வதிக்க வேண்டுமாக எங்கள் ஆண்டவராகிய ஏசுகிறிஸ்துவின் மூலமாகப் பிரார்த்திக்கின்றோம்” என்ற கருத்துடைய



வாக்கியங்கள் அமைந்திருந்தன. 2-மணிக்கு ஆராதனை முடிந்தது. உடனே அனைவரும் ஆலயத்தை விட்டுப் புறப்பட்டு வேறுமார்க்கமாகப் பவனிபோந்து பக்கிங்ஹாம் அரண்மனையடைந்தார்கள். வழிகளில் அங்கங்கே அநேக மண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றிலும் “தேவனுக்கு ஸ்தோத்திரம்” என்றெழுதப்பட்டிருந்தது.

இவ்வாறு அன்று ஸ்தோத்திரம் செலுத்தியது லண்டன்மாநகரத்தில் மட்டுமல்ல. இங்கிலீஷ் கொடிகள் பறக்கும் தேசங்கள் அனைத்திலுமே சர்வமதஸ்தர்களும் தங்கள் தங்கள் ஆசாரப்படி பகவத் ஸ்தோத்திரம் புரிந்தார்கள். அதற்குப்பின் இரண்டு நாட்கழித்ததும் அப்போது பிரதான மந்திரியாராக இருந்த கிளாட்ஸ்டன் துரைக்கு “பெப்ருவரி 27 செவ்வாய்க்கிழமையன்று நான் என் புதல்வன் முதலியவர்களோடு செய்ண்ட்பால் தேவாலயத்திக்குப் போனபோதும் அங்கிருந்து திரும்பிவந்தபோதும் பட்டணத்துள்ள லக்ஷக்கணக்கான மகாஜனங்களும் ஒருங்கு திரண்டு வந்து எங்களுக்குச் செய்த உபசாரத்தை நான் ஒருநாளும் மறவேன். அதனால் எங்களுக்குண்டாகியிருக்கும் சந்தோஷத்தை வார்த்தைகளால் விவரித்துரைக்க முடியாது. நமது எட்வர்டைப் பிழைப்பித்ததற்காக பகவானுக்குச் செலுத்தும் ஸ்தோத்திரத்தைப் பன்

சைகளும் பணக்காரர்களும் ஆகிய பிரஜாகோடிகளனைவருமே செலுத்தி யிருக்கின்றார்கள் என்ற விஷயத்தை நானும் என்து புதல்வனும் என்மருமகளும் ஆகிய அனைவரும் அறிந்திருக்கின்றோம்." என்ற கருத்துள்ள கடிதத்தை எழுதினார்.

## பன்னிரெண்டாம் அத்தியாயம்.

## இந்தியா விஜயம்.

இளவரசராக இருந்த நம்சக்ரவர்த்தியை இந்தியாவுக்கு விஜயம் செய்து வருமாறு அனுப்பினால் அதிக பிரயோஜனகரமாக இருக்கும் என்று மகாகீர்த்தியோடு இவ்விந்தியாவில் ஆட்சி செலுத்திய கவர்னர் ஜனரலாகிய லார்ட் கானிங் என்பவர் நம் சக்ரவர்த்தியின்பிதாவாகிய ஆல்பர்ட் மன்னரிடம் உரைத்திருந்தார். இந்தியாவுக்கு விஜயம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் நம்சக்ரவர்த்திக்கும் நெடுநாளாக இருந்துகொண்டிருந்தது. அதிபால்யம் முதலிய காரணங்களால் நெடுநாள்வரைத் தடைபட்டுக்கொண்டே இருந்தது. கடைசியாக அவர் விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் அனுமதிப்படி 1875 அக்டோபர் 11-ல் லண்டன்மா நகரத்தைவிட்டு இந்து தேசம் நோக்கிப் புறப்பட்டார். குழந்தைகளின் நிமித்தமாக நம் அலெக்ஸாண்டிரா பிராட்டி சீர்மையிலேயே இருக்கவேண்டியிருந்தமையால் தம்நாயகருடன் இங்கு விஜயம்செய்வதற்கில்லாமற் போயிற்று. ஆகலின் அப்பிராட்டியார் கல

யிஸ் வரை உடன் வந்து தம்நாயகரை வழியனுப்பினார். நம் சக்ரவர்த்தி பிரிண்டிசி அடைந்து அங்கே முன்னரேவந்து தமக்காகக் காத்துக்கொண்டிருந்த தமது பரிசனங்களோடு கூடி செராபிஸ் என்ற கப்பலேறிப் புறப்பட்டார். வழியில் ஏதன்ஸில் இறங்கிச் சில நாள் தங்கித் தம் மைத்துனராகிய கிரீக் மன்னருடன் அளவளாவியிருந்தார். பின்னர் எகிப்தில் தங்கி கெடிவினால் மிகவும் உபசரிக்கப் பெற்று அவரது ஜேஷ்ட குமாரராகிய டொபிக் என்பவருக்கு "ஸ்டார் ஆப் இந்தியா என்ற பட்டம் சூட்டினார். பின்னர் ஏடனில் தங்கி வர்த்தகக் கூட்டத்தாரால் எதிர் கொண்டு உபசரிக்கப் பெற்றார்.

நம் சக்ரவர்த்தி நவம்பர் 8-ம் தேதி பகலில் பம்பாய் வந்து சேர்ந்தார். அவரை எதிர் கொண்டழைத்தற்கு வேண்டிய சகல காரியங்களும் முன்னரே சித்தமாக இருந்தன. அப்போது இங்கே கவர்னர் ஜனரலாக இருந்த லார்ட் நார்த்ப்ரூக் என்பவர் தமபரிசனங்களோடு பகல் மூன்று மணிக்குத் துறைமுகத்திலிருந்து படவேறிச் சென்று செராபிஸ் என்ற கப்பலை யடைந்து நமது சக்ரவர்த்தியைத் தரிசித்தார். சக்கரவர்த்தியும் அவரை உரியமரியாதையுடன் ஏற்று உடனிருந்து சம்பாஷித்துக் கொண்டிருந்தார். அரைமணிநேரத்துக்குப்பின் சர்பிலிப் உட்ஹவுஸ் என்னும் பம்பாய்



கவர்னரும் தம்பரிவாரங்களுடன் செராபிஸ் என்ற கப்பலையடைந்து நம் சக்ரவர்த்தியைத் தரிசித்தார். அவரை நம் சக்ரவர்த்தி அதிக அன்புடன் ஏற்று மகிழ்ந்தார். பின் சில நிமிஷங்கட்கெல்லாம் அவர் விடைபெற்றுக் கரைக்குத் திரும்பினார். பின்பு நமது சக்ரவர்த்தி கரையிறங்கவேண்டிய முகூர்த்தம் சமீபிக்கவே அவர் கவர்னர் ஜனரலோடு ஓர் படவிலிறங்கிக் கரைவந்துசேர்ந்தார். உடனே அங்கெல்லாம் மதிக்கத்தக்கதாக வெடிகள் தீர்க்கப்பட்டன. பற்பல தேசங்களிலிருந்தும் வந்து நம் சக்ரவர்த்தியின் வரவு நோக்கி விலையுயர்ந்த ஆடையாபரணங்களை அணிந்து ஆவலுடன் காத்திருந்த அரசர்களும் பார்ஸிகளும் இந்துக்களும் மனமகிழ்ந்து கரகோஷஞ் செய்தார்கள். இன்னியங்கள் "இறைவியை ரக்ஷிக்க" என்ற கீதத்தை இசைத்தன. இவ்வோசைகளெல்லாம் சற்று நீங்கினதும் பம்பாய் நகர பரிபாலன சபையின் தலைவராகிய நாசபாய் பிராம்ஜி என்பவர் சில மகாஜனங்களுடன் முன்வந்து நம் சக்ரவர்த்தியைத் தரிசித்து வணங்கி மகாஜனங்களின் வந்தனோபசார பத்திரிகையை வாசித்தார். அதில்

"நாங்கள் இந்தியாவில் கரையிறங்கிய வுடனே இந்நகர மகா ஜனங்களுக்கும் நகரபரிபாலன சபையாருக்கும் பிரதிநிதிகளாகத் தங்கள் சந்நிதியடைந்து சமுகத்

திய நல்வரவேற்று வந்தனோபசாரங்கூற வாய்த்ததை
இந்நகரின் நகரபரிபாலன சபையின் அங்கத்தினர்களும்
அக்கிராசனாதிபதியும் ஆகிய நாங்கள் பெரும் பாக்கிய
மாகவே கருதுகின்றோம். சமுத்திர இந்துதேசயாத்
திரைக்கு ஆரம்பஸ்தானமாக இப்பம்பாயைத் தேர்ந்த
விஷயத்தில் நாங்கள் மிக மகிழ்கின்றோம். ஏனென்
றால் மேற்கத்திய நாகரிக சம்பந்தத்தால் இத்தேசத்தா
ருடைய குணநியமங்களிலும் ஒழுக்கங்களி
லும் உண்டாகக் கூடிய சீர்பாடுகளையும் இத்தேசத்
தின்ன பல வேறு ஜாதியார்களோடும் பிரிட்டிஷ் ஆட்சி
யுன் ஒத்துழைப்பித்த இசைவு, மன்னர் உழைக்கும்
தன் முயற்சிகள் பயன்படும் அளவையும் காட்டுவதற்கு
மற்றெல்லா இடங்களிலும் பார்க்க அதிகமாக இந்
நகரே ஏற்ற இடமென்று தோற்றுகின்றது.

முன் காலத்தில் இங்கிலாந்தின் இறைவராக இருந்த
இரண்டாம் சார்லஸ் மன்னருக்கு போர்த்துகீசிய
மனைவியாரின் சீதனங்களுள் ஒன்றாக இத்தீவு இங்கி
லாந்திற் களிக்கப்பட்டதாதலின் இப்பம்பாய் நகர் இராஜ
நகரென சிறப்பித்தெடுத்துரைக்கப் படுதற்குரித்தாக
விளங்குகின்றது. அவ்வாறு போர்த்துகீசிய சம்பந்தத்
தைவிட்டுக் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாகப் பிரிட்
டிஷ் ஆட்சிக்குட்பட்டிருக்க வாய்த்த பாக்கிய விஷயத்
திற்காக இப்பம்பாய் நகரானது கொண்டாடக் கட



மைப் பட்டிருக்கின்றது. ஆதியில் இப்பம்பாய் நகர்,
வளமில்லாத வெறும்பாறை நிலமாகக் கிடந்தது. தெங்
காயும் உலர்ந்த மீனும்தான் அந்நகரத்தில் இருந்த
ஐசுவரியம். குடியிருந்த ஜனத்தொகையோ பத்தாயி
ரத்துக்குமேலில்லை. அவர்களால் ராஜாங்கத்துக்குக்
கிடைத்து வந்த அரசிறையோ வருஷா வருஷம் ஆறா
யிரம் பவுனுக்குமேலில்லை. வர்த்தகவிஷயமோ அதிக
அற்பமாக இருந்துகொண்டிருந்தது. சீதோஷ்ண
ஸ்திதியோ சொல்ல வேண்டுவதில்லை. ஐரோப்பியர்
கள் வசிப்பதற்குச் சிறிதுங்கூட தகுதியுள்ளதாக இருக்
வில்லை. அவர்கள் இருவருஷகாலம் இங்கே தொடர்
ச்சியாக இருக்க நேர்ந்தால் தம் இன்னுயிர் இழக்க நேர்
தல் நிச்சயமெனக் கருதப்பட்டிருந்தது. இப்போதோ
என்றால் இந்நகர் அதிக அழகும் ஆரோக்கியமும் உள்
ளதாகவும் ஜனத்தொகைவிஷயத்தில் பிரிட்டிஷ் ராஜ்
யத்தைச் சார்ந்த நகர்களில் லண்டன்மா நகர்க்கடுத்த
அந்தஸ்தை வகிப்பதாகவும் வருஷந்தோறும் நகர பரி
பாலனசபாவரியாக மூன்று லக்ஷம் பவுன் செலுத்துவ
தாகவும் நாற்பத்தைந்துகோடி பெறுமான அயல் நாட்
டுவர்த்தகங்களையுடையதாகவும் கடற்சுங்கம் முதலி
யவை மூலமாக வருஷந்தோறும் கஜானாவுக்கு மூன்று
கோடியவுன் செலுத்துவதாகவும் ஆகியிருக்கின்றது.
இப்பாக்கியத்துக்கெல்லாம் காரணம் அவ்வவர்க்கும்

தத்தம் கொள்கைப்படி ஜாதிமதாசாரங்களை அவலம்பித்து இஷ்டமான தொழிலைச்செய்து வருமாறு இடந்தந்து அனைவர்க்கும் ஒரேவித சட்டமும் நியாயமும் ஆக ஏற்படுத்தித் தன் கீழ்வாழும் ஐரோப்பியர், போர்த்துகேயர், இந்துக்கள், மகமதியர், யூதர் என்ற குடிகள் அனைவரையும் ஒரே கண்ணாகப் பார்த்தாதரிக்கும் ஆங்கிலேய அரசாட்சியே; ஆதலால் அவ்வரசாட்சிக்கு இந்நகர் பெரிதும் கடமைப் பட்டிருக்கின்றது.

ஆதலால் பிரிட்டிஷ் ஆட்சியில் உண்டான அனுகூலங்களை உணர்ந்து விக்டோரியா மகாராணியாரின் செங்கோலில் எங்களுக்குண்டாகியிருக்கும் பக்தியை உறுதிப்படுத்த (தாங்கள் விஜயம் செய்திருக்கும்) இச்சமயத்தை மிகமகிழ்ச்சியுடன் ஏற்ற தருணமாகக் கொள்ளுகின்றோம். எங்களுடைய ராஜபக்தியையும் சக்கரவர்த்தினியார் தம் பட்டப்புதல்வராகிய தங்களை இந்திய பிரஜைகளை நேரிற்கண்டறிந்து வருமாறு அனுப்பியிருப்பதில் எங்களுக்குண்டாகியிருக்கும் அளவற்ற மகிழ்ச்சியையும் தாங்கள் இங்கிருந்து தங்கள் ஊர்போய்ச் சேர்ந்ததும் மகாராணியாரின் மகாமகத்துவம் பொருந்திய சமூகத்தில் அறிக்கையிடவேண்டுமாகப் பிரார்த்திக்கின்றோம். இங்கிலீஷ்க்காரரால் எவ்வளவோ அதிகமாக அபிமானிக்கப் பட்டிருக்கும் தங்கள் தேவியாராகிய வேல்ஸ் இளவரசியாரும் தங்க



ளோடு இங்கு விஜயம் செய்து தமது நாமத்தை இந்திய குடிகள் எவ்வளவு கௌரவத்துடன் பாராட்டுகின்றார்கள் என்பதை நேரே கண்டுணருமாறு எங்களுக்குப் பாக்கியமில்லாமற் போனது பற்றி நாங்கள் மிக வருந்துகின்றோம். தாங்கள் இப்போது இன்புடன் தொடங்கியிருக்கும் தங்களது இந்தியயாத்திரை இனிது முடிவெய்தி அதன்பயனாக இந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமுள்ள பரஸ்பர அபிமானம் அதிக விருத்தியாகுமாறு கிருபாநோக்கம் வைத்தருளிக்கும்படி சர்வேசுவரனை மனமுவந்து பிரார்த்திக்கின்றோம்" என்றக்கருத்தடங்கிய வாக்கியங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதற்கு நம் சக்கிரவர்த்தி

"இங்கிலாந்தின் ராஜகுடும்பத்துடன் நெடுநாளாகச் சம்பந்தமுடைய இந்த இடத்தை நான் என் இந்தியயாத்திரைக்கு ஆரம்பஸ்தானமாகக்கொண்ட [illegible]தில் எனக்கு அதிக மகிழ்ச்சியுண்டா[illegible] பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட இவ்வளவுகாலமும் இந்நகர் வரவர விருத்தியடைந்த உண்மையறிந்து மகிழ்கின்றேன். உங்களுடைய இயற்கைநலங்கள் எந்த உறுதியான ஆட்சியிலுமே சீரடைந்திருக்கும். ஆயினும் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்போர் அனைவரையும் ஒரேவிதமாகநோக்கி ஜாதிமதாசாரங்களைத் தத்தம் கொள்கைப்படி ஆசரித்துவருமாறு சுதந்தரந்தந்து வியாபார

க்ஷமாக ஆதரித்துவரும் ஆட்சியின் நலங்கள் உங்கள் தேசத்தவர்களில் அமைந்திருப்பதை நான் காண்கின்றேன். உங்கள் தேசத்தவர்கள் பலவேறு ஜாதிசமயத்தினர்களா இருப்பினும் ஒருவரோடொருவர் ஒற்றுமையுடையவர்களாக வாழ்ந்து மகாராணியாரின் செங்கோலில் பக்திசெலுத்துவதில் ஒரே கருத்துடையவர்களாக இருக்கும் உண்மையை அதிக திருப்தியுடன் உணர்கின்றேன். என்னை இத்தேசத்திற்கு வருமாறு அனுமதி தந்தனுப்பியதில் உங்களுக்கு அதிகமகிழ்ச்சியுண்டாகி யிருப்பதாக நீங்கள் அதிக அன்புடனும் ராஜபக்தியுடனும் சொல்லிய உபசாரமொழிகளை நான் மகாராணியாரின் சமுகத்தில் அறிவிப்பேன். என்னுடன் இங்குவர இயலாதிருப்பதுபற்றி இளவரசிக்கும் அதிக மனவருத்தமென்பதை நான் உறுதியாகச்சொல்லுகின்றேன். இளவரசிக்கு ஆதிமுதல்கொண்டே இத்தேசத்தின்மீது அதிக அபிமானம்—இன்று நீங்கள் என்னை உபசரித்த விதத்தைக் கேள்விப்படும்போது இதனால் நான் அடையும் ஆனந்தத்தைத் தானும் உடனிருந்து அனுபவிக்க வாய்க்கவில்லையே என்ற வருத்தம் இளவரசிக்கு மிக அதிகரிக்கும்"

என்ற கருத்துள்ள வாக்கியங்களால் விடை பகர்ந்தனர். அதுகேட்டனைவரும் கரகோஷம்புரிந்து மகிழ்ந்தார்கள். பின்பு நம் சக்ரவர்த்தி அங்கே ஆயத்தமாக



இருந்த அலங்காரமானதோர் வண்டியில் ஆரோகணித்து அதிக ஆடம்பரத்துடன் பவனிபோய் ராஜமாளிகை அடைந்தார். அங்கே அவர்க்குப் பம்பாய்க் கவர்னர் ஓர் அற்புதமான விருந்தளித்துபசரித்தார்.

அடுத்தநாள் (நவம்பர் 9) நம் சக்ரவர்த்தியின் பிறந்த நாள். அன்றுபகலில் அப்பெருநாள் நம் இந்தியாமுழுதினுமே விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. மற்ற இடங்களிலேயே விமரிசையாகக் கொண்டாடப்பட்டிருக்கும்போது சக்ரவர்த்தியே சாக்ஷாத்தாகவீற்றிருந்த பம்பாயில் அதிவிமரிசையாகக் கொண்டாடப்பட்டிருக்கும் என்பதில் என்ன தடை? பற்பல இடங்களினின்றும் வந்திருந்த அரசர்கள் முதலாயினோர்களுக்கு அன்று பகலில் நமது சக்ரவர்த்தி அங்குள்ள பரேல் என்னும் ராஜமாளிகையின் சபாமண்டபத்தில் வீற்றிருந்து தரிசனங் கொடுப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. திவ்யமாக அலங்கரிக்கப் பெற்றிருந்த அச்சபா மண்டபத்தின் தலைவாயிலின் இருபக்கங்களினும் இரண்டு துவார பாலகர்கள் உருவியகத்தியுடன் ஒய்யாரமாக நின்றார்கள். மண்டபத்தின் உள்ளும் அத்தகைய வீரர்கள் பலர் இங்குமங்கும் நின்றிருந்தார்கள். மண்டபத்தின் கோடியில் ஓர் பீதாம்பரத்தை விரித்து அதின்மீது ஓர் ரஜிதசிம்மாசனம் அமைக்கப்பட்டிருந்தது. அச்சிம்மாசனத்தின் இடப்புறம் இருபத்தாறும் வலப்புறம்

இருபத்துநாலும் ஆக இருமருங்கும் அழகிய நாற்காலிகள் வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன. அவைகளுக்குப்பின்புறத்தும் ஒவ்வோர்வரிசை ஆசனங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சிம்மாசனத்துக்குப் பின்புறச்சுவரில் விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் திருவுருவப்படம் அமைக்கப்பட்டிருந்தது. மண்டபத்தின் தரையில் விலைபெற்றதோர் ரத்னகம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. சிம்மாசனத்தின் பின்புறத்தே மயில்தோகை குதிரைவால் என்பவற்றைத் தாங்கிக்கொண்டு இருவரும் பெரிய விசிறியும் கையுமாக இருவரும் ஆக நால்வர் நின்றுகொண்டிருந்தார்கள்.

தரிசிக்க வருபவர்கள் இன்னின்னார் என்பதும் அவ்வவர்களது அந்தஸ்துக்குத்தக்கபடி அவ்வவர்களையும் நம் சக்ரவர்த்தி இன்னின்னவாறு எற்றுபசரிப்பார் என்பதும் ஆகிய முறைகள் அனைத்தும் முன்னரே ஏற்பாடாகியிருந்தது. உதாரணமாக அன்று முதலாவது வந்து நம் சக்ரவர்த்தியைத் தரிசிப்பதாக இருந்த கோலாப்பூர் வேந்தர் விஷயமாக ஏற்படுத்தப்பட்டிருந்த குறிப்பையொன்று சங்கிரஹமாகக் கூறுகின்றோம்.

## குறிப்பு.

"கனம்பொருந்திய வேல்ஸ் இளவரசர் 1875 நவம்பர் 9-ல் காலை 10-மணிக்குக் கோலாப்பூர் அரசர்க்குப் பேட்டிகொடுப்பார்.



கோலாப்பூர் அரசர் தமது பிரதான சர்தார்கள் ஒன்பதின்மரையும் தமது பிரதான காரியஸ்தரையும் உடனழைத்துக்கொண்டு தமது விடுதியிலிருந்து வருவார். அவ்வப்படை யொன்று அவருடனே வரும். அவரை மேஜர் சர்டேரியசும் வேல்ஸ் இளவரசரின் எயிடிகாம்புகளுள் ஒருவரும் குதிரைமேலேறிக்கொண்டு ஐநூறு கஜதூரம் எதிர்கொண்டுபோய் இளவரசரின் இருப்பிடத்திற்கழைத்துவருவார்கள்.

அவர் தமது வண்டியை விட்டிறங்கும்போது மேஜர் ஹெண்டர்சனும் மற்றொரு காரியஸ்தரும் எதிர்சென்று அவரை இறக்கி இளவரசரின் சமூகத்துக்கழைத்துச் செல்லுவார்கள்.

அவரை இளவரசர் தம் ஆசனத்தின் முன் விரிக்கப்பட்டிருக்கும் ரத்னகம்பளத்தின் கடைசிவரைச்சென்று எதிர்த்துக் கைகுலுக்கித் தமது ஆசனத்தின் வலப்புறத்திலுள்ள ஓர் ஆசனத்துக் கழைத்துச் செல்வார். கோலாப்பூர் அரசர்க்கு வலப்புறத்தில் அவரது பிரதான காரியஸ்தர் உட்காருவார். சர்தார்கள் எல்லாரும் தங்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி அந்தப் பிரதான காரியஸ்தரின் வலப்புறத்தேயுள்ள ஆசனங்களில் வரிசையாக உட்காருவார்கள்.

அங்கேயுள்ள பிரிட்டிஷ் உத்யோகஸ்தர்கள் அனைவரும் தங்கள் தங்கள் யோக்கியதைக்குத் தக்கபடி

இளவரசர்க்கிடப்புறத்தேயுள்ள ஆசனங்களில் வரிசை யாக உட்காருவார்கள்.

அரசருடன் சில நிமிஷம் சம்பாஷித்துக் கொண் டிருந்தபின் அவருடன் வந்திருக்கும் சர்தார்களை மேஜர் சர்டோரியஸ் என்பவர் இளவரசர்க்கு அறி முகப்படுத்துவார். அவர்களும் வழக்கப்படி நஜர்களைச் (காணிக்கை) செலுத்துவார்கள். அவைகளை இள வரசர் கையால் தொடுவார்.

பின்பு இளவரசர் கோலாப்பூர் வேந்தர்க்கு அத்தர் தெளித்துத் தாம்பூலம் கொடுப்பார். பின்பு பிரதான காரியஸ்தருக்கு மேஜர் ஹென்டர்சனும் மற்ற சர்தார் களுக்கு மேஜர் சர்டோரியசும் அத்தரும் தாம்பூல மும் அளிப்பார்கள். அப்புறம் அரசர் புறப்படுவார். அவரை இளவரசர் ரத்னகம்பளத்தின் கோடிவரைச் சென்று வழியனுப்புவார். மேஜர் ஹென்டர்சனும் எய்டிகாம்புகளுள் ஒருவரும் அவரது வண்டிவரையில் சென்று வண்டியில் ஏற்றி வழியனுப்புவார்கள். மேஜர் சர்டோரியசும் எய்டிகாம்புகளில் ஒருவரும் ஐநூறு கஜ தூரம்வரையில் பின் சென்று வழிவிடுவார்கள். ஒரு குதிரைப்படை அவரது விடுதிவரைப் பின்செல்லும். அவ்வரசர் ராஜமாளிகை அடைந்த உடனேயும் அங்கு விட்டுப் புறப்பட்ட உடனேயும் மரியாதைக்காகப் பத் தொன்பது குண்டுகள் போடப்படும். வாயிலோரமும்



போம்போதும் ராஜமாளிகையண்டைச் சைனிய வீரர் கள் ஆயுதபாணிகளாக நின்று அவர்க்கு மரியாதை செய்வார்கள்."

பத்துமணிக்குச் சில நிமிஷங்களுக்கு முன் வெடி கள் அதிரத் தொடங்கின. பத்தொன்பது வெடிகள் அதிர்ந்ததும் ராஜமாளிகைக்கு முன் வந்துநின்ற நான்கு குதிரைகள் கட்டிய ஓர் அழகான வண்டியி னின்றும் கோலாப்பூர் ஆளும் சத்திரபதி மகாராஜா இறங்கினர். முன்னமே ஏற்படுத்தப் பட்டிருந்த குறிப் பின்படியே காரியஸ்தர்கள் எதிர் சென்று அழைத்து வந்தார்கள். சக்ரவர்த்தியும் ரத்னகம்பளத் தின் கோடிவரைச் சென்று கைகொடுத்தழைத்து வந்து தமது சிம்மாசனத்துக் கடுத்தாற்போல வலப் புறத்துள்ள ஆசனத்தண்டை விட்டுவிட்டுத் தாம் தம் சிம்மாசனத்தில் வீற்றிருந்தார். பின்பு சத்ரபதி மகா ராஜா சிவாஜியும் அவருடன் வந்த சர்தார்களும் முறையே தத்தமக்குரிய ஆசனங்களில் உட்கார்ந்தார் கள். கொஞ்ச நேரம்வரைச் சக்ரவர்த்தியும் சிவாஜி யும் சம்பாஷித்துக் கொண்டிருந்தபின் சர்தார்கள் ஒவ் வொருவரும் முறைப்படி எழுந்து சிம்மாசனத்தண்டை யணுகித் தாழ்ந்து சலாம் செய்து சக்ரவர்த்திக்குப் பொற்மொஹரைக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார்கள். அவைகளை மகச்சக்ரவர்த்தி [illegible] கூட

டங்கீகரிக்கவும் அச்சர்தார்கள் அனைவரும் புறங்காட்டாமல் பின்னுவாகச் சென்று தங்கள் ஆசனங்களில் அமர்ந்தார்கள். பின்பு சக்ரவர்த்தி எழுந்து கல்விழைத்தெளிர்பொற்பாத்திரத்தைக் கையில் எடுத்து அதில் இருந்த அத்தரைக் கோலாப்பூர் வேந்தர்மீது தெளித்துப் பின்பு மற்றொரு பொற்பாத்திரத்தே வைத்திருந்த தங்கவேக்கால் கற்பட்டிருந்த வெற்றிலைபாக்குச் சுருளை எடுத்து அவர்க்குதந்தார். அவ்வரசரும் எழுந்து நின்று அவைகளை அன்பொடேற்று மகிழ்ந்தார். மேற்குறித்தவாறே மற்றைச் சர்தார்கட்கெல்லாம் மேஜர் டென்டர்சன் தாம்பூலாதிகள் தந்துபசரித்தார். உடனே கோலாப்பூர் வேந்தர் புறப்பட்டார். நம் சக்ரவர்த்தியும் ரத்னகம்பளத்தின் கடைசிவரையிற் சென்று கைகுலுக்கி விடையளித்தார். அவர் சென்றதில் பீரங்கிகளெல்லாம் முறைப்படியும் குண்டுகள் அதிர்ந்தன. இருபத்தொரு குண்டு போட்டு முடிந்ததும் மைசூர் மகாராஜராகிய சாமராஜேந்திர உடையார் சர்வாபரணலங்கிருதராய் வந்து நின்றார். (அவர் அப்போது தரித்திருந்த ரத்னஹாரத்திலிருந்த ஒருகல்லே ஒன்பது லக்ஷம்ரூபாய் பெறும் என்கின்றார்கள்) கோலாப்பூர் மன்னர்க்குப்போலவே இவர்க்கும் நடந்த வெகுமான உபசாரங்களெல்லாம் கிரமமாக நடந்தன. ஆனால் இவர் அவரைவிடச் சற்றுநெருங்கியே சக்ரவர்த்தி



யுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். இங்கிலீஷ் பேசுவதில் இவர்க்கிருக்கும் வாசாலகத்தைக் கண்டு சக்ரவர்த்தி மிகவும் மகிழ்ச்சி யடைந்தார். அன்றியும் வேட்டையாடுவதிலும் கிரிக்கட் என்னும் பந்தாட்டத்திலும் இவர் சமர்த்தர், என்பதையும் கேட்டுச் சக்ரவர்த்தி அதிக திருப்திபாராட்டினர். மைசூர்க்கர்த்தர் விடைபெற்றுச் சென்றதும் முறையே உதயப்பூர் மகாராணாவும் கட்சதேச வேந்தரும் வந்து தரிசித்துச் சென்றார்கள். பின்பு இருபத்தொரு குண்டதிர்ந்தன. யாரோ பெரிய அரசர் வரப்போகிறார் என்பதை யறிந்து அனைவரும் தலைவாயிலண்டை நோக்கவே பார்ப்போர் கண்ணைப்பகட்டும் கோடிசூர்யப் பிரகாசமான கற்களிழைத்த ஆபரணங்களை அணிந்துகொண்டு பரோடாவின் கைகவாராகிய மகாராஜா வந்து நின்றார். உடனே நம்சக்ரவர்த்தி எழுந்து ரத்னகம்பளத்தின் கோடிவரைச் சென்று அவரைக் கைகோர்த்தழைத்து வந்து தமது ஆசனத்துக்கடுத்த ஆசனத்தில் இருத்தினார். ராஜா. சர். டி. மாதவராயரும் வேறுசில சர்தார்களும் அவருடன் வந்திருந்தார்கள். அவர்களனைவரும் தக்கவா றுபசரிக்கப் பெற்றுச் சென்றதும் ஐதராபாத்து நவாபுக்குப் பிரதிநிதியாக வந்திருந்த அவரது பிரதான மந்திரியாராகிய சர். சலார்ஜங் வேறுமூன்று கனவான்களுடன் வந்து தரிசித்தார். அவர்களை

வரையும் நம்சக்ரவர்த்தி தக்கவாறுபசரித் தனுப்பினார். அதன் பின்னர்ச் சிற்றரசர்களும் எண்மர் வந்து தரிசித்துச் சென்றார்கள். இவ்வாறிவர்களனைவரும் தரிசித்துச் சென்றபின் கவர்னர் ஜனரல் வந்து தரிசித்துச் சக்ரவர்த்தியோடு நெடுநேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்து விடைபெற்றுச் சென்றார். பின்பு சக்ரவர்த்தி சிராபின்ஸ் என்ற தம்கப்பலுக்குப் போய் அங்கே கப்பலாட்களனைவரும் தாமளித்த விருந்துணவை மகிழ்வோ டருந்துவதைக்கண்டு மகிழ்ந்து மீண்டார். நம்சக்ரவர்த்தி தம்கப்பலுக்குச் சென்ற போதும் அங்கிருந்து திரும்பிவந்த போதும் உடன் சென்ற கொடி குடையாதி ஆடம்பரங்களை எடுத்துரைக்க முடியாது. அன்று அஸ்தமித்ததும் அப்பம்பாய் நகரில் மூலை முடுக்கு ஓரிடம் கூடப்பாக்கியின்றி எல்லாவிடங்களிலும் விளக்கேற்றி அலங்கரித்திருந்த காட்சி ஒரு போதும் மறக்கத் தக்கதல்லவென்று கண்டோர் பலரும் கூறுகின்றார்கள்.

பிறந்தநாட் கொண்டாட்டத்துக்காகப் பம்பாய்க் கவர்னர் நம்சக்ரவர்த்திக்கு ஒரு ராஜவிருந்தளித்தார். அவ்விருந்தில் பம்பாய்க் கவர்னர் நம்சக்ரவர்த்தியின் ஆரோக்கியத்தைக் கோரி அருந்துமாறு பிரேரேபித்த போது அவர்க்கு நம்சக்ரவர்த்தி நன்றி கூறுகையில் "இவ்விந்தியாவைக் காணவேண்டுமென்ற ஆவல்



எனக்கு அநேக நாளாக இருந்து கொண்டிருந்தது. அந்த ஆவல் இப்போது தீர்ந்தமையின் ஐயா, பிலிப் ஒட்ஹவுஸே இந்த எனது முப்பத்து நான்காம் பிறந்த நாளை இன்று உமது அரண்மனையில் அதிக ஆனந்தத்தோடு கொண்டாட வாய்த்தது பற்றி மிகமகிழுகின்றேன். நீரும் இங்குள்ள மற்றகனவான்களும் இன்று எனக்குச் செய்த உபசாரத்தை என் உயிருள்ள அளவும் மறக்கமாட்டேன். இவ்விடத்தில் எனக்கு நடந்த உபசாரத்தினை நோக்கும்போது மகாராணியாரின் ராஜ்யங்களுள் பிரதானமானதாக விளங்கும் இவ்விந்தியாவின் மற்ற பிரதேசங்களிலும் என்னை அன்போடேற்று நன்குபசரிப்பார்களென்றே உறுதியாக நம்புகின்றேன்" என்று கூறினார்.

அடுத்தநாள் (நவம்பர் 10) கவர்னர் ஜனரலாகிய நார்த்புருக் பிரபு சக்ரவர்த்தியிடம் விடை பெற்றுத் தம் இருப்பிடமாகிய கல்கத்தா நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். பின்பு காத்தியாவார் மன்னர் முதலிய குறுநிலமன்னர் சிலர் வந்து சக்ரவர்த்தியைத் தரிசித்துச் சென்றார்கள். அப்புறம் அவர் மாலை மூன்றுமணிக்கு பெரல் என்ற மாளிகையினின்றும் புறப்பட்டுக் கவர்னருடன் வண்டியேறிச் சென்று கவர்ன்மெண்ட் காரியதரிசியின் மண்டபத்தில் நகர மகாஜனங்களுக்குப் பேட்டிதந்தார். அது ஐந்து மணிவரை நடந்[illegible]

டிருந்தது. பின்பு அவர் பள்ளிப் பிள்ளைகட்குக் காட்சி கொடுக்கச் சென்றார். ஏழாயிரம் பிள்ளைகள் வரை ஒருங்கு திரண்டு நின்று தேசப்பாடியது முதலிய சம்பவங்கள் மகா அற்புதமாக இருந்தன. பின்பு அவர் முன்னையநாளில் தம்மை வந்து தரிசித்துச் சென்ற கோலாப்பூர் வேந்தர் முதலிய வேந்தர்களை அவ்வவர்களுடைய விடுதிகளிற்சென்று பிரதியுபசாரார்த்தமாகக் கண்டுவந்தார்.

அடுத்தநாள் (நவம்பர் 11) போஜனானந்தரம் குரங்காட்டிகள், பாம்பாட்டிகள், செப்பிடுவித்தைக் காரர்கள் முதலியோருடைய வேடிக்கைகளைக் கண்டு களித்தபின்னர் மாலையில் மைசூர் மகாராஜா முதலிய முன்னைத்தினத்திற் காணுதுவிட்ட மற்றவேந்தர்களையும் அவ்வவர்களுடைய விடுதிகளிற் சென்று கண்டுவந்தார். பின்னர் நவம்பர் 13ல் ரயிலேறிச் சென்று கர்க்கி, பூனா, கணேஷ்கண்ட் முதலிய இடங்களைப் பார்த்து மகிழ்ந்துவிட்டு 16ம்தேதி காலையில் பம்பாய் வந்து சேர்ந்தார். மீண்டும் 18ம்தேதி இரவில் பரோடாவை நோக்கிப் புறப்பட்டு 19ம்தேதி காலையில் அங்குப்போய்ச் சேர்ந்தார். கய்கவாரானவர் சர். டி. மாதவராயரையும் பலசர்தார்களையும் உடனழைத்துக்கொண்டு எதிர்சென் றுபசரித்தழைத்தார். அவருடன் கைகோர்த்துக் கொண்டு நமது சக்ரவர்த்தி ஸ்டேஷ



னுக்கு வெளியே சென்றதும் அங்கே திவ்விய வஸ்திராபரணாலங்கிருதர்களாகக் காத்துக் கொண்டிருந்த பல்லாயிரம் ஜனங்களும் ஆனந்தத்தால் ஆர்ப்பரித்தார்கள். அங்கே நம்சக்ரவர்த்திக்காக ஓர் பெரிய யானை ஓர் பர்வதம்போல நின்றுகொண்டிருந்தது. அன்று அதற்கணிந்திருந்த முகபடாம் முதலிய ஆபரணங்களையும் அதன்மேலிருந்த சுவர்ணத்தாலியன்ற அம்பாரியையும் அதன் மீதிருந்த மிருதுவான ஆசனத்தையும் வர்ணித்துரைக்க இயலாது. அந்த அம்பாரி யாதி கட்டுமட்டும் நான்குலக்ஷம் ரூபாய் பிடித்ததென்றால் அதன்மகிமை எப்படியிருக்கும் என்பதை இதைப் படிப்போரே ஊகித்துக் கொள்ளட்டும். அவ்யானையின் மாவுத்தனும் அத்தருணத்துக் கொத்தபடி விலைபெற்ற ஆடையாபரணங்களுடன் விளங்கினன். அவ்யானையின்மீது நம்சக்ரவர்த்தி ஆரோகணித்தலுக் குதவியாகச் சிலர் ஓர் வெள்ளி ஏணியைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். சக்ரவர்த்தி அவ்வேணியின் மீதேறி அம்பாரியில் உட்கார்ந்தார். உடனே கைகவார் வேந்தரும் ஏறி உடன் உட்கார்ந்தார், மாதவராயரும் ஆரோகணித்தமர்ந்தார். சக்ரவர்த்தியுடன் சென்ற காரியஸ்தர்கள் அடுத்துநின்ற இரண்டு யானைகளின்மீ தாரோகணித்தார்கள். வேறுபல யானைகள் பாதையின் ஓரத்தில் ஒழுங்காக முழந்தாளிட்டுச் சக்ரவர்த்தியைச்

சலாம் செய்துகொண்டு நின்றன. அவர் தம்மைக் கடந்து சென்றதும் அவைகளும் எழுந்து பவனியுடன் சென்றன. முன்பக்கத்தில் பிரிட்டிஷ் சைனியமும் கைகவாரின் சைனியமும் போய்க் கொண்டிருந்தன. வழியில் இடை இடையே அலங்கார மண்டபங்கள் அநேகம் அமைக்கப் பட்டிருந்தன. இவ்வாறே இப் பவனி பலவகைப்பட்ட வாத்தியகோஷம் முதலிய ஆடம்பரங்களுடன் மூன்றுமயிலுங்கடந்து ரெசிடெண்டின் மாளிகையை அடைந்தது. அங்கே பிரிட்டிஷ் சைன்ய வீரர்கள் நின்று சக்ரவர்த்திக்கு வந்தனம் செய்தார்கள். பின்பு எல்லாரும் இறங்கி அம்மாளிகையுட் புகுந்தார்கள். அப்புறம் அங்கே தர்பார் நடந்தது. கைகவார் தம்பரிசனங்களைச் சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தி தம்பரிசனங்களைக் கைகவாருக்கும் அறிமுகப்படுத்தினார்கள். பின்பு கைகவார் விடைபெற்றுப் புறப்படவே அவரைச் சக்ரவர்த்தி தலைவாயில் மட்டும் வந்து வழியனுப்பினார். பின்பு கைகவார் ஆனைமீதாரோகணித்துத் தம்பரிசனங்களுடன் தமதிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

நம் சக்ரவர்த்தி பரோடா மகாராஜாவாகிய கைகவாரைப்பார்த்துவருதற்காக அன்று மாலை மூன்றரை மணிக்கு ரெசிடெண்டின் மாளிகையினின்று புறப்பட்டார். தெருமுழுதிலும் சுதேச போலீஸ்காரர்கள்



வரிசையாக நின்றார்கள். வழியில் இடை இடையே கைகவாரின் சைனியவீரர்கள் எதிர்நின்று சக்ரவர்த்திக்கு வந்தனம் புரிந்தார்கள். இப்பவனி அரண்மனையண்டை அணுகியதும் கைகவாரானவர் சர். டி. மாதவராயர், சில சர்தார்கள் முதலியவர்களுடன் தலைவாயிலில் வந்து வந்தித்து அழைத்துக் கொண்டு மாடி மீதுள்ள ஓர் அறைக்குச் சென்றார். அநேக கிளைவிளக்குகள் முதலியன ஏற்றப்பட்டும் சுவர்களில் பற்பல விதமான சித்திரப்படங்கள் அமைக்கப்பட்டும் திவ்யாலங்காரத்தோடு விளங்கிய அவ்வறையில் அழகாக விளங்கியதோர் ஆசனத்தில் நம்சக்ரவர்த்தி வீற்றிருந்ததும் மகாராஜாவும் அண்டையில் ஓர் ஆசனத்தில அமர்ந்து சிலநேரம்வரை ஆனந்தமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். இடைக்கிடையே மாதவராயர் துவிபாஷியாக இருந்து மொழிபெயர்த்துபகரித்தார். பின்பு மகாராஜா தமது மந்திரிகள் முதலிய சமஸ்தான உத்யோகஸ்தர்களைச் சக்ரவர்த்திக்கு அறிமுகப் படுத்தினர். அவர்களும் சக்ரவர்த்தியை வணங்கித் தங்கள் தங்கள் காணிக்கைகளைச் செலுத்தினார்கள். பின்பு மகாராஜா எழுந்து சக்ரவர்த்தியின் கழுத்தில் விலைமதிக்க ஒண்ணாததோர் ஹாரத்தைச் சூட்டி அவர்க்கு அத்தரும் தாம்பூலாதிகளும் தந்துபசரித்தார். அப்பால் அவர் சக்ரவர்த்தியைப் பரோடா மகாராணியாகிய

ஜம்முபாய் வீற்றிருக்கும் அறையண்டை அழைத்துச் சென்றார். மகாராணியும் சக்ரவர்த்தியை அன்போ டேற்று உபசரித்தார். அங்கே சிலநேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்து புறப்பட்டு மகாராஜாவும் சக்ரவர்த்தி யும் அரங்கத்தை அடைந்தார்கள். அங்கே நம்சக்ரவர் த்தி வீற்றிருந்து உஸ்தாதுகளின் குஸ்திகள், ஆயுதச் சாலை, காட்டெருமைச் சண்டை முதலிய வேடிக் கைகளைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு எழுந்து மகாராஜாவிடத்தும் மாதவராயரிடத்தும் விடை பெற் றுக்கொண்டு புறப்பட்டு ரெசிடென்டு மாளிகையையடை ந்துறங்கினார்.

அவர் கைகவாரால் மிகவும் உபசரிக்கப் பெற்றுப் பின்னும் இரண்டு மூன்று நாள்வரை அங்கே தங்கி வேட்டையாடுதல் முதலியவைகளில் வினோதமாகக் காலங்கழித்துக் கொண்டிருந்தார். அப்போது கைக வார் செய்தவிருந்தில் கைகவாருக்கும் ஜம்முபாய் மகாராணிக்கும் பிரதிநிதியாக நின்று மாதவராயர் விக் டோரியா சக்ரவர்த்தினி யாருடையவும் சக்ரவர்த்தியு டையவும் ஆரோக்கியத்தைக் கருதியருந்துமாறு பிரே ரேபித்தார். நம்சக்ரவர்த்தி அதற்குப் பிரதியுபசாரம் சொல்பவர் "என்னை அன்போ டேற்றுபசரித்ததற் காக மகாராஜாவுக்கும் மகாராணியாருக்கும் அன்பார் ந்த வந்தனம் செலுத்துகின்றேன். நான் இந்தப்பிரா



டாவுக்கு வந்து அனுபவித்தவைகளை ஒருபோதும் மற வேன். மகாராஜா இப்போது அதிபாலர். ஆயினும் பிற்காலத்தில் அதிபாக்கிய சாலியாகப் பிரசித்தியுடன் வாழ்வார் என்பதிற்றடையே இல்லை. மாதவராயரு டைய பராமரிப்பில் இனிமேல் இவ்விராஜ்யம் மகிமைத் திலும் சிறப்படையப் போகின்றது—" என்று கூறி கைகவாருடையவும் ஜம்முபாய் மகாராணியுடையவும் ஆரோக்கியத்தைக் கோரி அருந்துமாறு பிரேரேபித் தார். அதற்கு மகாராஜாவுக்கும் மகாராணிக்கும் பிர திநிதியாக மாதவராயர் நின்று பிரதியுபசாரம் சொன் னார். அவர் அதில் "மகாராணியும் மகாராஜாவும் இத் தினத்தை மகாவிசேஷம் பொருந்திய தினமாகக்கருது கின்றார்கள். அவர்கள் இதுவரைத் தங்கள் திருவு ருவத்தை அடிக்கடி படத்தில் கண்டு மகிழ்ந்துவந்தார் கள். இப்போது சாக்ஷாத்தாக முன்வந்தருள்புரியவே அவர்களடைந் திருக்கும் மகிழ்ச்சிக் களவேயில்லை. இங்கிலீஷ் வீரர்களின் பராக்கிரமத்தாலும் மந்திரிக ளின் மதியூகத்தாலும் ஸ்தாபித்த இவ்விந்திய ராஜ்யத் திற்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள பிரஜாகோடிக ளெல்லாவரையும் பார்த்துப் போவதற்காகவே தாங்கள் சமுத்திரந்தாண்டி நெடுந்தூர யாத்திரை செய்து இங்கே விஜயம் செய்திருக்கின்றீர்கள். விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் புதல்வராகிய தங்களுக்குச் செல

லுமிடங்கள் தோறும் விசேஷித்த உபசாரம் நடக்கும்
என்பதில் தடையே இல்லை. தாங்கள் இத்தப்போ
டாவுக்கு விஜயம் செய்த விஷயத்தை ஒருபோதும்
மறக்கமாட்டோம். தாங்கள் எண்ணி யிருக்கிறபடியே
இந்த யாத்திரையைக் குறைவின்றி முடித்து அதன்
பயனாக இத்தேச மன்னர்களிடத்தும் பிரஜைகளிடத்
தும் அபிமானங்கொண்டு அவர்களுடைய க்ஷேமத்தில்
நோக்கம் வைக்கவேண்டு மென்றும், உங்கள் சுதேசம்
போய்ச் சேர்ந்ததும் இந்திய பிரஜைகளாகிய நாங்கள்
அனைவரும் ஜாதிமதாசாரங்களில் பலவேறு வகையி
னர்களாக இருந்தாலும் இங்கிலீஷ் ராஜாங்கத்தால்
அனுபவித்துவரும் நலங்களை யுணர்ந்து ராஜபக்தி
கொண்டொழுகுவதில் ஒருமித்த நோக்க முடையவர்
களாக இருக்கின்றோமென்ற உண்மையைத் தங்கள்
மகாமேன்மை தங்கிய மாதாவாகிய விக்டோரியா சக்ர
வர்த்தினியாரின் சமூகத்தும் அங்கிலேய மகாஜனங்க
ளிடத்தும் அறிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்
ளுகின்றோம்" என்று கூறினார்.

சக்ரவர்த்தி நவம்பர் 25ல் பம்பாய் சேர்ந்து அன்று
மாலையில் சிராபிஸ் என்றதம் கப்பலில் ஏறிக்கோவா
முதலியவைகளைப் பார்த்துக் கொண்டு டிசம்பர் முத
லில் கொழும்பு நகரை யடைந்தார். அங்குபலவாறு
பசரிக்கப் பெற்றுக் கண்டிக்குச் சென்று அடுத்த ஆ



ண்யங்களில் யானை வேட்டை யாடுதல் முதலியவைக
ளில் மகிழ்ந்திருந்து டிசம்பர் 8ல் லங்கையை விட்டுப்பு
றப்பட்டு டிசம்பர் 10ம்தேதி காலையில் தூத்துக்குடி
வந்து சேர்ந்தார்.

அங்கே அநேக கனவான்கள் வந்து நம் சக்கரவர்த்
தியை எதிர்கொண்டழைத்துக் கடற்கரை யருகில்
அமைத்திருந்த ஓர் அழகானபந்தலில் வந்தனோபசார
பத்திரம் வாசித்துபசரித்து நல்வரவு கொண்டாடினார்
கள். பின்பு நம்சக்ரவர்த்தி தம்மை வந்து தரிசித்த
எட்டயாபுரம் முதலிய சமஸ்தானங்களைச் சார்ந்த
ஜமீன்தார்களுடன் சற்றுநேரம் சல்லாபித்துக்கொண்
டிருந்துவிட்டுப் புறப்பட்டு ரெயில்வேஸ்டேஷனையடை
ந்து தம்பரிவாரத்துடன் புகைவண்டியேறிப் புறப்பட்
டார். தென்னிந்தியா ரெயில்வண்டி அன்றுதான்
முதல் முதல் தூத்துக்குடியினின்று ஓடத்தொடங்கி
யது. ஸ்டேஷனண்டை அநேக ஆயிரம் ஜனங்கள்
வந்து கூடியிருந்தார்கள். சக்ரவர்த்தி ஏறிய வண்டி
அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டதும் அங்கே கூடி
யிருந்தோ ரனைவரும் கரகோஷம்புரிந் தாரவாரித்தார்
கள். தூத்துக்குப் பதினெட்டுமயில் தூரத்திலுள்ள
மணியாச்சி ஸ்டேஷனில் பாதிரிமார்களும் உபதேசி
களும் பள்ளிப்பிள்ளைகளும் பெண்களுமாகக் கூடியிரு
ந்த ஆறுயிரம் சுதேசக் கிறிஸ்தவர்களுடன் டாக்டர்

கால்ட்வெல் பாதிரியாரும் டாக்டர் சார்ஜியண்ட் பாதிரியாரும் காத்திருந்தார்கள். வண்டி அங்கே வந்து சேர்ந்து வண்டியினின்று சக்ரவர்த்தி இறங்கியதும் ராபின்ஸன்துரை முன்வந்து டாக்டர் கால்ட்வெல் பாதிரியாரையும் டாக்டர் சார்ஜியண்ட் பாதிரியாரையும் சக்ரவர்த்திக்கு அறிமுகப்படுத்தினார். உடனே திருநெல்வேலிக் கிறிஸ்தவசபையாரின் வந்தனோபசார பத்திரிகையை டாக்டர் கால்ட்வெல் பாதிரியார் வாசித்தார். பின்பு அழகாகக் கட்டப்பட்டிருந்ததோர் தமிழ் பைபிளும் ஜெபபுஸ்தகமும் திருநெல்வேலிப் பள்ளிக்கூடங்களில் கற்கும் பெண்களுடைய கைவேலையாகிய ஜரிகை முதலியவைகளும் காணிக்கையாகச் சமர்ப்பித்துபசரித்தார்கள். அவற்றைச் சக்ரவர்த்தி அன்போடேற்று மகிழ்ந்து அவ்வந்தனோபசாரத்துக்கு ஏற்ற பிரதியுபசாரம் கூறினார். இது முடிந்ததும் அந்தருணத்திற்கென்றே புதிதாக இயற்றியிருந்த தமிழ்க்கீதங்களைப் பெண்குழந்தைகள் இனியகுரலுடன் பாடினார்கள். அது முடிந்தவுடன் நம் சக்ரவர்த்தி தம் விஜயத்தின் ஞாபகார்த்தமாகப் படிக்குமாறு மாமுதலிய மரவிதைகளைப் பல வேறு வித்தியாசாலைகளின் பிரதிநிதிகளிடத்தும் அளித்துவிட்டு வண்டியேறிப் புறப்பட்டார். அந்த வண்டி பகல் 12-மணிக்குக் கோவில்பட்டிவந்துசேர்ந்தது. தூத்துக்குடியிலேயே வந்து தம்



மைத் தரிசித்துவிடையாடித் தம்மோடேகூடவே வண்டியேறி வந்த எட்டயாபுரம் ஜமீன்தாரின் வேண்டுகோளின்படி நம் சக்ரவர்த்தி அந்த ஸ்டேஷனில் இறங்கி அதற்கருகில் அவர் அதிவிநோதமாக அமைத்திருந்த கூடாரத்துக்கு விஜயம் செய்து அவர் அளித்த அரிய விருந்தை அருந்தி அவர் தம் ஞாபகத்துக்கென்று சமர்ப்பித்த காணிக்கைப் பொருள்களையும் அன்போடேற்று மகிழ்ந்து அவரிடம் விடைபெற்று வந்து திரும்பவும் வண்டியேறிப் புறப்பட்டார். அவ்வண்டி மாலை 5 மணிக்கு மதுரைமாநகர் வந்துசேர்ந்தது. சக்ரவர்த்தியுடைய வருகை நோக்கி அதற்கு முன்பாகவே வந்து அங்கு காத்துக்கொண்டிருந்த கனவான்கள் முன்வந்து வினயமுபசரித்து அவரை அதிக ஆடம்பரத்துடன் அவரது விடுதிக்கழைத்துச் சென்றார்கள். அன்று அந்நகரின் வீதிகள் தோறும் வெள்ளையடித்துப் பெருக்கி மெழுகிக் கோலமிட்டிருந்தார்கள். பவனி செல்லும் மார்க்கங்களிலெல்லாம் நாட்டப்பட்டிருந்த கொடிகளுக்கும் தோரணங்களுக்கும் கணக்கே கிடையாது. பார்த்தவர்களைப் பிரமிக்கச் செய்யக்கூடிய திவ்யாலங்காரங்களுடன் கூடிய மண்டபங்கள் பல அங்கும் இங்கும் அமைக்கப்பட்டிருந்தன. பவனியின் கோலத்தைப் பார்த்து மகிழ்தற்காக வீதிகளில் ஆயிரம் ஆயிரமாகக் கூடியிருந்த

வர்களையன்றி வேதிகைகளின்மீதும் வீடுகளின்மீதும் விருக்ஷங்களின்மீதும் ஏறியிருந்தவர்களுக்குக் கணக்கே இல்லை. மாடியாதிகளில் மாதர்களும் நிறைந்திருந்தார்கள். சக்ரவர்த்தி தம் விடுதியடைந்து பரிவாரங்களுடன் மனோகரமான விருந்தருந்திமகிழ்ந்தார். அதற்கு முன்பாகவே புதுக்கோட்டை ராமசந்திர தொண்டமான்பகதூர் மகாராஜா முதலிய அதிபதிகள் பலர்வந்து தரிசித்துச் சென்றார்கள்.

மறுநாட் காலையில் நம்சக்ரவர்த்தி அவ்வூரிலுள்ள திருமலை நாயக்கர் மஹாலைப் பார்க்கும் பொருட்டுத் தம் பரிவாரங்களுடன் போயினார். கோவில் விசாரணை கர்த்தர்கள், ஜமீன்தார்கள் முதலிய அநேகர் அந்த மகாலின் தலைவாயிலில் நின்று அவரை எதிர்கொண்டழைத்தார்கள். உள்மண்டபத்தில் அவர்க்காக ஓர் வெள்ளி நாற்காலி போடப்பட்டிருந்தது. அவர் அதனண்டை சென்றதும் அப்போது சென்னை ஐகோர்ட் வக்கீலாக இருந்த கனம் S. சுப்ரமண்ய ஐயர் அவர்கள் ஓர் வந்தனோபசாரபத்திரம் வாசித்தார்கள். அதற்கு நம்சக்ரவர்த்தியார் பிரதியுபசாரம் கூறிமுடித்ததும் மதுரை மகாஜனங்கள் தமக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்த பொருள்களைக் கண்காணித்தார். பின்பவர் அம்மகலின் ஓர் பக்கத்துச் சென்று சிவகங்கை ஜமீன்தாரணியார்க்குப் பேட்டிதந்தபின் மீனாக்ஷிசுந்தரேசுர ஆலயத்



தைப்பார்க்கச் சென்றார். ஸ்ரீ ஞான சம்பந்த பண்டார சந்நிதிகள் தமது திருக்கூட்டத்துடன் அவ்வாலயத்தின் கோபுரவாயிலில் நின்று நம்சக்ரவர்த்தியை உபசரித்துச் சகல ஆடம்பரத்துடனும் அழைத்துச் சென்று அவ்வாலயத்துள் பார்க்கத்தக்கவை அனைத்தையும் காட்டி அவர்க்குப் பீதாம்பரமும் புஷ்பஹாரமும் சூட்டிக்கோபுரவாயில்வரை வந்து வழியனுப்பினார். நம்சக்ரவர்த்தி அவ்வாலயத்தைப் பார்த்து மகிழ்ந்து வெளியே வந்ததும் அங்குநின்றவர்களிடம் விடைபெற்று வண்டியேறி நேரே ரெயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றார். அத்தருணத்துச் சென்று அங்கே அமைத்திருந்த அலங்கார மண்டபத்தில் வேறுபல கனவான்களுடன் அமுதருந்தி மதுரையைவிட்டுப் புறப்பட்டார். மதுரையில் அவர்க்குப் புதுக்கோட்டை மகாராஜா யானைத்தந்தம் முதலியவைகளைக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். சிவகங்கை ஜமீன்தாரணி தற்பிரதிமைகள், தந்தத்தாலியன்ற பிரதிமைகள், பாக்கு வெட்டிகள், ஒட்டியாணம் போல் அரையில் தரித்துக்கொள்ளக் கூடிய அவ்வளவு நயமான தோர்கத்தி முதலியவைகளைக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். (அந்தக்கத்தி ஒரு காலத்தில் இங்கிலீஷ்காரரை முற்றிலும் தோற்கடித்த பாஞ்சாலங்குறிச்சி ஜமீன்தாராகிய கட்டபொம்ம நாயக்கனுடையதென்றுச் சொல்லப்படுகின்றது) நம்சக்ரவர்த்தி ஏறிய

வண்டி மதுரையை விட்டுப் புறப்பட்டதும் வழக்கப்படியே ஜனங்கள் கரகோஷம் புரிந்தார்கள். வழியில் நம்சக்ரவர்த்தி திண்டுக்கல்லில் இறங்கிச் சற்றுநேரம் தாமதித்து அங்கே தம்பொருட்டுச் செய்திருந்த அலங்காரங்களைக்கண்டு மகிழ்ந்து மீண்டும் வண்டியேறிப்புறப்பட்டு மாலை 2½ மணிக்குத் திருச்சிறுப்பள்ளிவந்து சேர்ந்தார். அநேக கனவான்கள் வந்தெதிர் கொண்டழைக்கச் சென்று வெப்ஸ்டர் துரையுடைய வீட்டை அடைந்து அங்குப் பதினாயிரம் ரூபாவுக்குமேல் செலவிட்டு அதியற்புதமாக அமைக்கப் பட்டிருந்த பந்தலில் அமர்ந்து விருந்தருந்தினார்; பின்பு தம்பரிவாரங்களுடன் புறப்பட்டுச் சிரங்கநாதரது ஆலயத்தைப் பார்த்து வரும்பொருட்டுச் சீரங்கம் சென்றார். அவரை அங்கே ரங்கநாதரது ஆலயத்தின் தலைவாயிலில் ஆலயத்தின் விசாரணை கர்த்தர் முதலியவர்கள் காத்திருந்து எதிர்கொண்டழைத்துப் போய்க் காணத்தக்கவைகளையெல்லாம் காட்டி உபசரித்தார்கள். அவர் அவற்றையெல்லாம் கண்டு களித்து மகிழ்ந்து அங்கிருந்தோரிடம் விடைபெற்றுப் புறப்பட்டுத் திருச்சிறுப்பள்ளி வந்து சேர்ந்ததும் சுதேசிகளுடைய வந்தனோபசாரபத்ரம் வாசிக்கப்பட்டது. பின்பு தஞ்சாவூரினின்றும் அவ்வூர் மகாஜனங்களுக்குப் பிரதிநிதிகளாக வந்திருந்த கனவான்கள் சக்ரவர்த்தியின் முன்வந்து



தரிசித்து வந்தனோபசாரபத்ரம் வாசித்தார்கள். பின்பு அவர் அஸ்தமித்ததும் தாயுமானசுவாமி மலைக்குத் தீபங்கள் ஏற்றித் தெப்பக்குளத்தைச் சுற்றிலும் பலவகைப்பாணங்களையும் மத்தாப்புகளையும் பொருத்திச் செய்த மகா அற்புதக்காட்சியைக் கண்டுகளித்தார். நம் சக்ரவர்த்தி அவ்வற்புதகாட்சியை அதிக ஆனந்தத்துடன் அனுபவித்துக் கொண்டிருந்ததும் அன்றித் தம் அண்டையில் நின்றுக் கொண்டிருந்த பட்டாபிராமபிள்ளையிடம் தம் வியப்பை வாய்விட்டும் கூறினார். அடுத்தநாள் மாலை 4-மணிக்கு அவர் அதிக ஆடம்பரத்துடன் திருச்சிறுப்பள்ளிவிட்டுப் புறப்பட்டு வழியில் கரூரில்வந்து தம்மைத் தரிசித்த கனவான்களிடம் சிறிதளவளாவிவிட்டு, அஸ்தமித்ததும் ஈரோடு வந்து சேர்ந்தார். அங்கே அவர் கோயமுத்தூரிலிருந்து சென்று காத்திருந்த ஜில்லா கலெக்டர் வெட்டர்பர்ன் துரை முதலியவர்கள் எதிர்கொண்டழைத்துபசரித்தளித்த விருந்தை அன்போடருந்திப் பத்துமணிக்குச் சென்னை நோக்கிப் புறப்பட்டார். அந்தவண்டி அடுத்தநாட் காலை எட்டுமணிக்குச் சென்னை சென்று சேர்ந்தது. அப்போது அங்கே கவர்னராக இருந்த பக்கிங்ஹாம் கோமகனார் திருவாங்கூர் மகாராஜா, கொச்சிமகாராஜா, விஜயநகரம் மகாராஜா, ஆர்க்காடு நவாபு முதலியவர்களோடு தம்பரிவாரம் புடைசூழ

எதிர்வந்து சக்ரவர்த்தியை உபசரித்தழைத்தார். வழக்கப்படி நடக்கும் வந்தனப் பிரதி வந்தனங்களும் கவர்னர் தம்முடன் வந்திருப்பவர்களைச் சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தி தம் பரிவாரங்களைக் கவர்னர் முதலியோர்க்கும் அறிமுகப்படுத்துதலும் முடிந்தவுடன் முன் பம்பாயில் நிகழ்ந்ததுபோலவே சர்வாடம்பரங்களுடனும் ராயபுரம் ஸ்டேஷனிலிருந்து பவனி புறப்பட்டது. ஆனால் பம்பாயில் இருந்ததைவிட இங்கே ஏற்பாடு அதிகமாக இருந்தது. அதாவது சக்ரவர்த்தியின் திருமுடிக்குமேல் ஒரு பெரிய பொற்குடையைப் பிடித்து வருமாறு பக்கிங்ஹாம் கோமகனார் ஏற்பாடு செய்திருந்தார். பம்பாயில் இவ்வித ஏற்பாடு இருந்திராமையால் ஒருங்கு செல்லும் கூட்டத்துள் இன்னார்தான் சக்ரவர்த்தி என்பதை அறியாது அநேகர் மயங்கினார்கள்.

அப்பவனி செல்லுகையில் எல்லா இடங்களிலுமே அதிவிநோதமாக இருந்ததாயினும் வாலாஜா வாராவதியண்டையிருந்த காட்சி அதியற்புதமானது. அங்கே நூற்றிருபத்தாறு வித்யாசாலைகளையும் சார்ந்த வித்யார்த்திகளும் வித்தியா போதகர்களும் ஆகிய பதின் மூவாயிரம் ஸ்திரீகளும் புருஷர்களும் அடங்கிய பிரஜைகள் தத்தம் வித்யாசாலைகளைக் குறிக்கும் பல வேறுவகைக்



கொடிகளைத் தாங்கிக்கொண்டு இருமருங்கிலும் வரிசையாக நின்று பாடிக்கொண்டிருந்தார்கள். வலப்புறத்தில் ஹாரிஸ் ஸ்கூல், ரோமன்காதலிக் ஸ்கூல்கள், டவ்டன் காலேஜ், ஸ்ராடிக்த அநுசபாடசாலை, லண்டன் மிஷன் ஸ்கூல்கள் முதலியவைகளும் இடப்புறத்தில் பிரஸிடென்ஸி காலேஜ், என்ஜினீரிங்காலேஜ், மெடிகல் காலேஜ், கவர்ன்மெண்ட் நார்மல் ஸ்கூல், கவர்ன்மெண்ட் மதிரிகா ஸ்கூல் முதலியவைகளும் நின்றன. அப்பவனி ராஜமாளிகை சேர ஒன்பது மணியாயிற்று. அங்கே சென்றதும் நம் சக்ரவர்த்தி சிறிதுணவுண்டபின் அதிபதிகளுக்குப் பேட்டிகொடுக்கத் தொடங்கினார். அவ்வேற்பாடு பம்பாயில் இருந்ததைப்போலவே இவ்விடத்தும் இருந்தது. திருவாங்கூர் மகாராஜா தமது மந்திரியாராகிய அ. சேஷய்ய சாஸ்திரியாருடன் வந்து தரிசித்துச்சென்றார். பின்பு முறையே கொச்சி மகாராஜா, ஆர்க்காடு நவாபு, விஜயநகரம் மகாராஜா என்ற இவர்கள் வந்து தரிசித்துச் சென்றார்கள். பின்பு பகல் ஒருமணிக்கு லெவிஎன்ற பொது தரிசனம் நிகழ்ந்தது. ஐரோப்பியர்களும் சுதேசிகளும் ஆக அநேக கனவான்கள் வந்து சக்ரவர்த்தியைத் தரிசித்துச் சென்றார்கள். அன்றிரவில் பக்கிங்ஹாம் கோமகனார் அன்போடளித்த ராஜ விருந்தையருந்தி நம்சக்ரவர்த்தியுறங்கினார்.

அடுத்தநாள் தம்பிதா பரகதியடைந்த தினமாக இருந்தமையின் அந்நாளைத் தனிமையாக இருந்து கழிக்கக்கருதி கிண்டித்தோட்டத்திற்கு அவர் சென்றார். அன்று அவரது பரிவார மகாஜனங்கள் சென்னையிலுள்ள வித்யாசாலைகள் சத்திரங்கள் முதலியவற்றைப் போய்ப் பார்த்து வந்தார்கள்.

அடுத்தநாள் (டிசம்பர் 15) காலையில் நம்சக்ரவர்த்தி கிண்டித் தோட்டத்தில் நடந்த குதிரைப்பந்தயம் முதலியவற்றைக் கண்டுகளித்துவிட்டுப் பகலில் சென்னை சென்றார். மாலைமூன்று மணிக்குச் சென்னையூனிவர்ஸிடியைச் சார்ந்த சான்ஸலர், வைஸ்சான்ஸலர், முதலியவர்கள் ஒருங்கு சென்று ராஜமாளிகையில் சக்ரவர்த்தியைத் தரிசித்தார்கள். யூனிவர்ஸிடியாரின் வந்தனோபசாரப் பத்திரத்தை இனிஸ்துரை படித்தார். யூனிவர்ஸிடியார் விடைபெற்றுச் சென்றபின் பிரிமேச சங்கத்தார்கள் வந்து வந்தனோபசாரபத்திரம் படித்துபசரித்தார்கள். பின்பு மைசூர் சமஸ்தானத்திலிருந்து வந்த ஸ்ரீ கோபாலையர், ஸ்ரீ ஆனந்தராவ் (இவர் ராஜா சர். டி. மாதவராயரின் புதல்வர்) முதலியோர் முன்வந்து ஓர் வந்தனோபசார பத்திரம் படித்தார்கள். அதில் சக்ரவர்த்தி மைசூர் சமஸ்தானத்துக்கு விஜயம் செய்ய முடியாமற்போனதைப் பற்றித் தங்களுக்கிருந்த வரு-



த்தத்தைக் குறிப்பிட்டிருந்தார்கள். நம்சக்ரவர்த்தி அதற்குத்தாம் சொல்கையில் மைசூருக்கு விஜயம்செய்யவேண்டுமென்று தமக்கு எவ்வளவோ இஷ்டமிருந்தும் நேர்ந்த அசந்தர்ப்பங்களால் சாத்தியப்படாமற் போனதுபற்றித் தாம் மிகவருந்துவதாக உரைத்தார். பின்பு குடகிலிருந்து வந்திருந்த மகாஜனங்கள் பேட்டிபெற்றுச் சென்றார்கள். அதன் பின்பு கலெக்டர் வெட்டர்பர்ன்துரை, தாசில்தார் வெங்கடாசலம் பிள்ளைமுதலிய கோயமுத்தூர் மகா ஜனங்கள் சென்று தரிசித்து வந்தனோபசார பத்திரம் வாசித்துபசரித்து முன்உத்தேசித்திருந்தபடி கோயமுத்தூர்க்கு விஜயம் செய்திருந்தால் நம்சக்ரவர்த்தி பார்த்திருக்கக்கூடிய இடங்களின் புகைப்படங்களடங்கியதோர் அழகிய புஸ்தகத்தையும் காணிக்கையாகத் தந்தார்கள். அவர்கட்குக்கூறிய உத்தரத்தில் சக்ரவர்த்தி தாம்ஆதியில் உத்தேசித்திருந்தபடி கோயமுத்தூர்க்குவிஜயம்செய்ய வாய்க்காமற்போனதுபற்றித் தாம் மிகவருந்துவதாகவும் தம்வரவை நோக்கிக் கோயமுத்தூர்க் குடிகள் எடுத்துக்கொண்ட சிரமத்தை அறிந்து தாம் அதிக மகிழ்ச்சியடைவதாகவும் குறிப்பிட்டார். பின்பவர் அன்று மாலையில் கொச்சி மகாராஜா, ஆர்க்காடு நவாபு, திருவாங்கூர் மகாராஜா என்ற மூவரையும் அவ்வவர்களது விடுதிகளிற் சென்று பார்த்துவந்தார். அவர்களை

வரும் தக்கவா றெதிர்கொண்டழைத்துபசரித்துப் பற்பலபொருள்களைக் காணிக்கைகளாகத் தந்தனுப்பினார்கள். பின்பு ராஜமாளிகையில் வந்து தம்மைத் தரிசித்த தஞ்சாவூர் மகாராணிக்கும் அவருடன் வந்த மாப்பிள்ளைத் துரைக்கும் பேட்டிதந் துபசரித்துவிட்டு நம்சக்ரவர்த்தி கடற்கரைக்குச் சென்று துறைமுக வேலைக்கு அஸ்திபாரம் போட்டார். அப்போது அங்கே பல்லாயிரம் ஜனங்கள் கூடியிருந்து அதை மகோத்சவமாகக் கொண்டாடினார்கள். ராஜமாளிகையில் அன்றிரவிலும் கவர்னர் நம்சக்ரவர்த்திக்கு ஓர் ராஜவிருந்தளித்தார். அதற்குத் திருவாங்கூர் மகாராஜா முதலிய சுதேச கனவான்களும் பலர் அழைக்கப்பட்டிருந்தார்கள். அடுத்தநாள் (டிசம்பர் 16) ராமநாடகத்தையும் சுதேசச் செப்பிடுவித்தைக்காரர்கள், பாம்பாட்டிகள், தொம்பர்கள் முதலியவர்கள் செய்த அற்புத வேடிக்கைகளையும் நம் சக்ரவர்த்தி கண்டுகளித்தார். அவர் அடுத்தநாளிரவில் சுதேசிகளுடைய வேண்டுகோளின்படி அவர்கள் ராயபுரம் ஸ்டேஷனண்டை அதிவிநோதமாக அமைத்திருந்த கொட்டகைக்குத் தம்பரிவாரங்களுடன் விஜயஞ்செய்தார். அவரைச் சுதேசகனவான்கள் எதிர்கொண்டழைத்துச்சென்று வந்தனோபசார பத்திரம் வாசித்துபசரித்தார்கள். சக்ரவர்த்தியும் அதற்குப் பிரதியு



சாரம் உரைத்தபின் அங்கே நிகழ்ந்த கோலாட்டம் ஞானம்பாளின் நடனம், வீணாகானம் முதலியவைகளைக் கண்டுகளித்திருந்து பின் அக்கனவான்கள் அளித்த அதியற்புதமான உணவை அன்போடயின்று புறப்பட்டு ராஜமாளிகையடைந்து இரண்டுமணிக்குமேல் உறங்கினார். அடுத்தநாள் (டிசம்பர் 18) மாலை ஐந்துமணிக்கு பக்கிங்ஹாம் கோமகனார் முதலியவர்களிடம் விடைபெற்றுத் தமது ரிநாமேன் கப்பலேறிக் கல்கத்தா நோக்கிப் புறப்பட்டு டிசம்பர் 23ல் அங்கு போய்ச் சேர்ந்தார். கவர்னர் ஜனரலாகிய நார்த்ப்ருக் பிரபு தம்பரிவாரங்களுடன் எதிர்கொண்டுவந்துபசரித்தார். அடுத்தநாள் மகாராஜாக்கள் பலர்வந்து நம்சக்ரவர்த்தியைத் தரிசித்துச் சென்றார்கள். முதலாவது பாட்டியாலா மகாராஜா தம் பரிவாரங்களுடன் வந்து தரிசித்துச் சிறிதுநேரம் சந்தோஷமாகச் சல்லாபித்துக் கொண்டிருந்து விடைபெற்றுச் சென்றார். பின்பு இந்தூர் ஹோல்கார் மகாராஜா தம்பிரதானமந்திரியாகிய ஸ்ரீ திவான்பகதூர் ரகுநாதராவ் முதலியவர்களுடன் வந்து தரிசித்து மகிழ்ந்துசென்றார். பின்பு ஜாட்பூர் மகாராஜா, ஜெயப்பூர் மகாராஜா, காஸ்மீர் மகாராஜா, குவாலியர் மகாராஜா, முதலியவர்களனைவரும் தத்தம் பரிவாரங்களுடன் வந்துதரிசித் துபசரிக்கப் பெற்றுச் சென்றார்கள். பின்பு லெவி என்ற பொதுத்தரிசனம்

நிகழ்ந்தது. அன்றிரவில் நார்த்ப்ரூக் பிரபு ஓர் அரிய ராஜவிருந்தளித்தார்.

அடுத்ததினம் கிறிஸ்துவின் ஜனனதின மாதலின் அன்று நம்சக்ரவர்த்தி நார்த்ப்ரூக் பிரபு முதலியவர்களுடன் தேவாலயத்துக்குப் போய் வந்தார். அடுத்தநாள் சந்தர நாகூரைப் போய்ப் பார்த்து விட்டுத் திரும்பினார். அங்கே ஆட்சிபுரியும் பிராஞ்சுக்காரரின் காரியஸ்தர்கள் இவரை அன்போடேற்றுபசரித்தார்கள். அடுத்தநாள் பன்னு, காசி, பர்மா முதலிய தேசங்களின் மகாராஜாக்கள் வந்து சக்ரவர்த்தியைத் தரிசித்துமகிழ்ந்து சென்றார்கள். அடுத்த இரண்டு நாள்களிலும் முன்னே தம்மைவந்து தரிசித்துச் சென்றராஜாக்களை அவ்வவர்களுடைய விடுதிகளிற் சென்றுபார்த்துவந்தார். டிசம்பர் 30ல் நார்த்ப்ரூக் பிரபு முதலியவர்களுக்கு நம்சக்ரவர்த்தி தம்கப்பலில் ஓர் அரிய விருந்தளித்தார். அடுத்தநாள் சுதேசராணுவ வீரர்களின் குதிரையேற்றம் முதலியவைகளைக் கண்டுகளித்துவிட்டுக் கல்கத்தாவிலுள்ள பிரதான வைத்தியசாலைகள் முதலியவைகளைச் சென்று நோக்கிவந்தார்.

1876 ஜனவரி முதல் தேதியில் நம்சக்ரவர்த்தி தமதன்னையாராகிய விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் ஜேஷ்டப்ரதிநிதியாக இருந்து "ஸ்டார் ஆப்இந்தியா" என்றபட்டம் அளிக்கும் கைங்கர்யத்தை நடத்தினார். அக்



கைங்கர்யம் நடத்துதற்காக மகாவிசித்திர மானதோர் மண்டபம் அமைத்திருந்தார்கள். அன்று அங்குவரும் அரசாதிபர்கள் தங்களை அழைக்குமளவுந் தங்கியிருத்தற்காக அம்மண்டபத்தைச் சூழச் சிறுசிறு கூடாரங்களும் சில அமைக்கப் பட்டிருந்தன. அன்று காலை 9-மணிக்குக் குண்டுகள் அதிர்ந்தன. உடனே பலவகைப்பட்ட வாத்திய கோஷங்களுடன் ஓர் பவனிவந்தது. அப்பவனியில் முதலில் சுதேசச் சேவகர்கள் கட்டியக்கோல் முதலியவற்றை ஏந்திக்கொண்டு இவ்விருவராக ஒன்று சேர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். அடுத்தாப்போல் பிரதான காரியஸ்தராகிய மிஸ்டர்ஹெண்டேயும் காரியதரிசியாகிய மிஸ்டர் எய்ட்சிசனும் வந்துகொண்டிருந்தார்கள். பின்பு அக்கைங்கர்யத்தின் சகாக்கள் ஐரோப்பியர் பாதியும் சுதேசிகள் பாதியும் ஜதை ஜதையாக வந்துகொண்டிருந்தார்கள். அப்பவனி அம்மண்டபத்தை அணுகியதும் சேவகர்கள் அதன் துவாரமுகத்தின் இருமருங்கிலும் நின்றுகொள்ள மற்றவர்களனைவரும் உட்பிரவேசித்தார்கள். பின்பு சற்று நேரத்திற்கெல்லாம் போபால் பேகம் (ராணி) திவ்ய வஸ்திராபரணாலங்கிருதையாகத் தம்பரிசனங்கள் புடைசூழ அதிக ஆடம்பரத்துடன் வந்து சேர்ந்தார். பின்பு ஐதராபாத்து நிஜாமின் பிரதான மந்திரியாகிய சர். ஸலார்ஜங் வந்தார். பின்பு பாட்டி

யாலா மகாராஜா வந்தனர். பின்பு லார்ட் ரோபியர் வந்தார். பின்பு திருவாங்கூர் மகாராஜா தம் மந்திரி பிரதானிகளுடன் வந்தமர்ந்தனர். பின்பு முறையே ரீவா மகாராஜா, ஜெயப்பூர் மகாராஜா, ஹோல்கார் மகாராஜா, காஸ்மீர் மகாராஜா, சிந்தியா மகாராஜா என்ற இவர்கள் தத்தம் பரிவாரங்களுடன் வந்து தங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள். பின்பு இன்னியங்கள் "இறைவியை ரக்ஷிக்க" என்ற கீதத்தை வாசிக்கத் தொடங்கியதும் நம்சக்ரவர்த்தி ராணுவ உடையுடன் விஜயம் செய்து அம்மண்டபத்தின் மேடையின் மீதமைந்திருந்த சிம்மாசனத்தின்மீ தமர்ந்தார். அவர் உட்பிரவேசித்ததுமுதல் சிம்மாசனத்திற் சென்றமரும்வரை அனைவரும் நின்றுகொண்டிருந்தார்கள். பின்பு முன்னரே "ஸ்டார் ஆப் இந்தியா" என்ற பட்டந்தரித்திருப்பவர்களின் நாமாவளியைக் கவர்னர் ஜனரலின் உத்தரவுப்படி அவைது காரியதரிசி வாசித்தார். பட்டதாரிகள் ஒவ்வொருவரும் தத்தம் பெயர்கள் வாசிக்கப்பட்டவுடன் எழுந்து சக்ரவர்த்திக்குத் தலைவணங்கி வீற்றிருந்தார்கள். பின்பு காரியதரிசி எழுந்து இன்னின்னருக்குப் பட்டம் அளிப்பதுதான் அன்றைய தினத்திய வேலையென்றும் அதைச் சக்ரவர்த்தியே தமக்குப் பிரதிநிதியாக இருந்து நடத்தவேண்டுமென்று



விக்டோரியா சக்ரவர்த்தினியார் அதிகார பத்திரம் அனுப்பியிருக்கின்றாரென்றும் கூறி அனைவரும் கேட்குமாறு அவ்வதிகாரபத்திரத்தையும் வாசித்தார். உடனே கவர்னர் ஜனரலும் மற்ற ராஜாக்களாதியரும் எழுந்து சக்ரவர்த்திக்குத் தலைவணங்கித் தங்கள் தங்கள் ஆசனங்களில் அமர்ந்தார்கள். பின்பு சக்ரவர்த்தி முன்குறித்தபடி பட்டம் அளிக்கத்தொடங்கினார்.

முதலாவது ஜாட்பூர் மகாராஜாவை அவர் அமர்ந்திருந்த கூடாரத்தினின்றும் சிலகாரியஸ்தர்கள் அதிக ஆடம்பரத்துடன் அழைத்து வந்தார்கள். இரண்டு காரியஸ்தர்கள் எதிர்கொண்டு சென்று அவ்வரசரைத் துவாரமுகத்தில் சந்தித்தழைத்தார்கள். அவர் மண்டபத்தினுட் பிரவேசித்ததும் காரியதர்சியாகிய எப்ட்சிசன்துரை சக்ரவர்த்தியின் ஆசனத்தண்டைக்கு அவரைக்கைபிடித்தழைத்துக் கொண்டுபோய்ச் சக்ரவர்த்தியைத் தலைவணங்கவும் அவர்க்குமுன் முழந்தாளிடவும் பின்பு புறங்காட்டாது அவரைப் பார்த்துக்கொண்டே பின்வாங்கிச் செல்லவும் அவ்வப்போது கற்பித்தழைத்துப்போய் அவ்வரசர்க் கேற்பட்டிருந்த ஆசனத்தில் அவரை அமர்த்தினர், பின்பு அந்த ஜாட்பூர்வேந்தருக்குப் பட்டங்கொடுக்கும்படி விக்டோரியா மகாராணியார் அனுப்பியிருந்த சாஸனத்தை வாசித்துக் காட்டி அப்பட்டத்திற்குரிய விருதுகளை யெல்லாம்

அவருக்குச் சூட்டியதும் அவர் சக்ரவர்த்தி யமர்ந்திருக்கும் மேடைக்கு முன்னால் போய் நின்று இருமுறை தலைவணங்கி முழந்தாளிட்டார். உடனே அப்பட்டத்திற்குரிய கழுத்துப்பட்டையைச் சக்ரவர்த்தி தம்திருக்கரத்தாலேயே தரிப்பித்து உரியமுறைப்படி அவரை யெச்சரித்தார். உடனே பதினேழு குண்டுகள்போடப்பட்டன. பின்பு அவ்வரசர் எழுந்து தலைவணங்கி விட்டுப் புறங்காட்டாது சென்று தமதாசனத்தில் வீற்றிருந்தார். உடனே அவரது விருதுக் கொடியை எடுத்துப் பிடித்தார்கள், வாத்தியங்கள் கோஷித்தன. அவரது பட்டத்தைக் கார்யதரிசி உரத்துக்கூறினார். அதை அனைவரும் எழுந்துநின்றுகேட்டுவிட்டுப் பின்னர்த் தத்தம் ஆசனங்களில் அமர்ந்தார்கள். இவ்வாறே வேறு சிலர்க்கும் வெவ்வேறுபட்டங்கள் அளிக்கப்பட்டன. எல்லாம் முடிந்ததும் முதலில் நம்சக்ரவர்த்தி எழுந்து தம்பரிசனங்கள் புடைசூழச் சகல ஆடம்பரத்துடன் அம்மண்டபத்தினின்றும் புறப்பட்டு ராஜமாளிகைக்கெழுந்தருளினார். அவ்வாறே மற்றவர்களும் முதலில் வந்தவர்கள் கடைசியில் என்ற முறைப்படி தத்தம் பரிசனங்களுடன் புறப்பட்டுத் தத்தம் விடுதிகளை யடைந்தார்கள்.

பின்பு நம்சக்ரவர்த்தி ஜனவரி 3-ல் கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டுக் காசி, ராம்நகர், லக்நௌ, டில்லி,



கான்பூர், ஆக்ரா, ஜெயப்பூர், அலகாபாத்து முதலியவைகளைப் பார்த்துவிட்டு மீண்டும் பம்பாய்வந்து சேர்ந்து மார்ச்சு 13-ல் அதைவிட்டுத் தம்தேசம் நோக்கிப் புறப்பட்டு மே 11-ல் அங்குப்போய்ச் சேர்ந்தார். அலெக்ஸாண்டரா சக்ரவர்த்தினியும் குழந்தைகளும் அதிக ஆவலுடன் எதிர்கொண்டுவந்து சந்தித்து மகிழ்ந்தார்கள். சக்ரவர்த்தி இந்தியாவுக்கு விஜயம் செய்து திரும்பிய சந்தோஷங்காரணமாக லண்டன்மாநகரில் பற்பல கொண்டாட்டங்கள் நிகழ்ந்தன.

## பதின்மூன்றாவது அத்தியாயம்.

## ரஜிதவிவாகம்.

1878-ம் வருஷத்திய பாரிஸ் கண்காட்சி சம்பந்தமான பிரிட்டிஷ் கமிஷனின் அக்ராசனாதிபதித்வத்தை நம்சக்ரவர்த்தி அங்கீகரித்திருந்தாராதலால் அவர் இந்தியாவிலிருந்து திரும்பிச் சென்றதும் அக்கண்காட்சி சம்பந்தமான காரியங்களில் அதிக முயற்சியாக இருந்தார். அக்காட்சி 1878-ல் அதிக விமரிசையாக நிறைவேறிற்று. பாரிஸில் அவ்வளவு ஆனந்தத்துக்கிடமாக இருந்த அவ்வருஷம் பிரிட்டிஷ் ராஜகுடும்பத்திற்கு ஓர் பெருந்துயர் தருவதாயிற்று. எனென்றால் ஹெஸ்ஸி கோமகளாராகிய ஆலிஸ் ராஜகுமாரியார் ஓர் கடுநோயாற் பிடிக்கப்பட்டுச் சடுதியில் தேகவியோகமெய்தினார். இதில் அவரது அன்பான சகோதரராகிய நம் சக்ரவர்த்திக் குண்டான துன்பம் இவ்வளவு அவ்வளவல்ல. அவர்மீது நம்சக்ரவர்த்திக்கும் அலெக்ஸாண்டரா சக்ரவர்த்தினிக்கும் எப்போதுமே அதிக விசுவாசம் உண்டு. அதிலும் நம்சக்ரவர்த்தியார் ஜ்வரத்தால் பிடிக்கப்பட்டுப் பிராணாபாயத்தில் இருந்தகாலத்தில்



இச்சகோதரியார் ஒருகணமும் அவரைவிட்டு நீங்காது எப்போதும் உடனிருந்து வேண்டிய சிசுருஷைகளையெல்லாம் விருப்புடனியற்றிப் போற்றிவந்தாராதலால் அக்காலமுதற்கொண்டு இவர்மீது அவ்விருவர்க்கும் உள்ள விசுவாசத்திற் களவே இல்லை. இவரும் இங்கிலாந்துக்கு விஜயம் செய்யும்போதெல்லாம் சான்ட்ரிங்ஹாமிலோ அல்லது மார்ல்பரோஹவுஸிலோ தம் சகோதரருடன் பலநாள் தங்கி மகிழாது செல்லார். ஆதலின் ராஜகுடும்பத்தைச் சார்ந்த மற்றெல்லாரிலும் பார்க்க நம்சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தினிக்குமான இத்துயர் சகிக்கமுடியாததாக இருந்தது. ஆதலால் அநேகநாள்வரை அவ்விருவரும் ஒரு விஷயத்திலும் பிரவர்த்தியாது ஒடுங்கியிருந்தார்கள்.

1885 ஏப்ரிலில் நம்சக்ரவர்த்தி தம்மனைவியாருடன் அயர்லண்டுக்கு விஜயம் செய்து அங்குள்ளோர் அனைவராலும் நன்குபசரிக்கப் பெற்றார். அவர் அவ்விருக்கையில் ஏப்ரில் 10-ல் தம்மனைவியாருடன் சென்று டப்ளின் நகரின் வித்யாசம்பந்தமானதோர் மண்டபத்திற்கு அஸ்திவாரம் போட்டுவிட்டு அவ்விடத்திய ராஜாங்கச் சர்வகலாசாலைக்கு விஜயம் செய்தார். அப்போது அச்சர்வகலாசாலையார் நம்சக்ரவர்த்திக்கு "டாக்டர் ஆப் லாஸ்" (சட்ட பண்டிதர்) என்ற கௌரவப்பட்டமும் நம்சக்ரவர்த்தினிக்கு "டாக்டர் ஆப்மி

யூசிக்" (கீதபண்டிதையார்) என்ற கவுரவப்பட்டமும் சமர்ப்பித்து உபசரித்தார்கள்.

1887-ம் வருஷத்தில் நடந்த விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் தங்கஜூபிலியின் ஏற்பாடுகள் பலவும் அநேகமாக நம்சக்ரவர்த்தியின் பொறுப்பிலேயே நடந்தன. விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் விருந்தினராக வந்த அன்னியதேச மன்னராதியர்களின் நல்வரவேற்றல் முதலிய உபசாரங்களனைத்தும் இவர் தான் புரிந்தனர். அப்போதுதான் விக்டோரியா சக்ரவர்த்தினியார் நம்சக்ரவர்த்தியைக் கப்பற்சைனியங்களின் கவுரவாதிபதியாக நியமித்தார்.

நம்சக்ரவர்த்தியின் விவாகத்தின் இருபத்தைந்தாம் வருஷோத்ஸவமாகிய ரஜித விவாகத்துக்கு 1888-ம் வருஷ ஆரம்பமுதற் கொண்டே பிரயத்தனங்கள் நடந்து கொண்டிருந்தன. ஆனால் அப்போது அதிவிருத்தாப்பியராக இருந்த வில்லியம் என்னும் ஜெர்மன் சக்ரவர்த்தி அதிக வியாதியாக இருந்தார். ஆதலால் அவருடைய அந்தியகாலம் எப்போது வந்து விடுமோ என்ற அச்சம் இங்கிலாந்தின் ராஜகுடும்பத்தார் அனைவர்க்கும் ஒவ்வொரு நிமிஷமும் இருந்து கொண்டிருந்தது. கடைசியாக அந்த வில்லியம் சக்ரவர்த்தி நம்சக்ரவர்த்தியின் ரஜிதவிவாக தினத்துக்கு முன்னைய நாளில் பரகதியடைந்துவிடவே ரஜிதவிவாக சம்பந்தமாக



லண்டன்மாநகரில் கொண்டாட இருந்த குதூகலங்களெல்லாம்போய் அவற்றிற் கெதிரிடையான கொண்டாட்டம் நேரலாயிற்று. ஆயினும் மார்ச்சு 10-ம் தேதியாகிய அந்த ரஜிதவிவாகதினத்தை அலக்ஷியமாக விட்டுவிட வில்லை. சமஸ்தான துக்ககொண்டாட்டத்தை அந்தத்தினத்தில் மட்டும் அகற்றிவைத்துவிட்டு விக்டோரியா சக்ரவர்த்தினியார் முதலிய ராஜகுடும்பத்தார் அனைவரும் நம்சக்ரவர்த்தியைச் சுபம்விளம்புதற்காக மாரல்பரோ அரண்மனைக்கு விஜயம்செய்தார்கள். அன்று மாரல்பரோ அரண்மனையில் ஓர் அற்புதமானவிருந்து நடந்தது. விருந்தருந்தி மகிழ்ந்தபின் விக்டோரியா சக்ரவர்த்தினியார் அன்று லண்டன்மாநகரில் அலங்காரமாக விளக்கேற்றி யிருக்கும் அற்புதகோலத்தைக் கண்டுகளிக்குமாறு லண்டன்மாநகரின் மேற்குமுனையிலுள்ள சிலதெருக்களின் வழியாகச் சவாரிபோய் வந்தார். பின்பு அவரும் அம்மகோற்சவசம்பந்தமாக அன்று தமது பக்கிங்ஹாம் அரண்மனையில் ஓர் சிறந்த சமஸ்தான விருந்தும் நடனமும் நிகழ ஏற்பாடு செய்து மகிழ்வூட்டினார். அத்தினத்தில் டேன்மார்க் வேந்தரும் ராணியும் கோபன் ஹேகனிலுள்ள தமது அமெலியன்போர்க் என்ற தமதரண்மனையில் ஓர் சிறந்த நடன விருந்தளித்து அவ்விடத்திய மகாஜனங்களுக் கெல்லாம் மகிழ்வூட்டினார்கள்.

இந்த ஜகத்திலுள்ளோர் அனைவருமே அத்தம் பதிகள்மீது அபிமான முடையவர்களாதலின் அம்மகோற்சவ தினத்தன்று வந்த சம்பாவனைகட்கும் அளவில்லாதிருந்தது. விக்டோரியா சக்ரவர்த்தினியார் மிகச்சிரேஷ்டமானதோர் வெள்ளிப்பாத்திரம் முதலிய வற்றைத் தமது மருமகளார்க்களித்தார். நம் சக்ரவர்த்தி வயிரங்களாலும் கெம்புகளாலும் இயன்றதோர் அற்புதமான சிலுவையைத் தம்பத்தினியார்க்குச் சம்பாவனைசெய்தார். ரஷ்யசக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஓர் விலையுயர்ந்த ரத்னகண்டியைச் சமர்ப்பித்தார்கள். நம் சக்ரவர்த்தியின் குழந்தைகளைவரும் வெள்ளியாலியன்றதோர் குதிரையைத் தங்களன்னைக்குச் சமர்ப்பித்தார்கள். முன் விவாகசமயத்தில் தோழிப்பெண்களாக இருந்த சீமாட்டிகள் எண்மரும் இவ்வுற்சவத்தன்று தங்கள் தங்கள் கைச்சாத்தடங்கிய அற்புதமான வேலைப்பாடுள்ளதோர் வெள்ளிபெட்டியை நம் சக்ரவர்த்தினிக்குச் சமர்ப்பித்தார்கள். பிரட்டன் தேசத்திய பிரீமேச சங்கத்தார்கள் வயிரத்தாலியன்றதோர் பட்டப்பூச்சியைச் சமர்ப்பித்தார்கள். மெய்காப்பாளர்கள் ஓர் அற்புதமான வேலைப்பாடுள்ளதோர் வெள்ளிப்பிரதிமையைச் சமர்ப்பித்தார்கள். பாரிஸ் மகா ஜனங்கள் நவரத்ன கசிதமான அற்புதவேலைப்பாடுள்ளதோர் பாத்திரத்தைச் சமர்ப்பித்தார்கள்.



குடியேற்ற நாட்டார் ஓர் அற்புதமான திருவிளக்கும் சாவியின்றி இருபத்தொருநாள் செல்லக்கூடியதோர் கடிகாரமும் சமர்ப்பித்தார்கள். இவ்விரண்டும் செய்தற்கு வெகுதிரவியம் பிடித்ததாம். அதில் சாமான்ய குடிகள் ஒன்றும் இரண்டுமாக உதவியதே முப்பதினாயிரம் ரூபாவுக்கு மேலிருக்குமாம். பெண்மார்க்கு ராஜாவும் ராணியும் விலையுயர்ந்த பாத்திரங்களைச் சமர்ப்பித்தார்கள். அத்தேசத்திலரசரும் ஓர் விலையுயர்ந்த பாத்திரத்தைச் சம்பாவனைசெய்தார். ஜர்மனி சக்ரவர்த்தினி எட்டாம் ஹென்றியின் காலத்திய கப்பலைப்போன்றதோர் வெள்ளியுருவைச் சமர்ப்பித்தார். பெல்ஜிய வேந்தர் பற்பல பிரதிமைகளைச் சமர்ப்பித்தார். ஆஸ்ட்ரியா தேசத்தரசர் நம்சக்ரவர்த்தியைத் தம் சைனியங்களுக்குத் தளவாதிபராக நியமித்திருப்பதாய் வரைந்ததோர் வெள்ளித் திருமுகத்தைத் தம தூர்யஸ்தர்மூலமாக அனுப்பிச் சமர்ப்பித்தார். பிரான்சு குடியரசின் அக்கிராசனாதிபதியும் அன்று நம்சக்ரவர்த்தியைக்கண்டு சுபம்வினவிச்சம்பாவனை செய்து வருமாறு தம்காரியஸ்தரை அனுப்பியிருந்தார்.

சம்பாவனையாக வந்த பொருள்களெல்லாம் மார்ல்பரோ அரண்மனையிலுள்ள இந்திய அறையில் ஒழுங்காக அமைக்கப்பட்டன.

## பதினான்காம் அத்தியாயம்.

# பிற்கால தாம்பத்தியம்.

நம்சக்ரவர்த்தியின் ரஜிதவிவாகம் நிகழ்ந்தது சில நாட்கழித்து அவரது ஜேஷ்ட புத்திரியாராகிய லூயிஸ் ராஜகுமாரியாரின் விவாகம் நடந்தது. அதற்குச்சற்றுமுன்பாக நமது விக்டோரியா சக்ரவர்த்தினியார் சாண்ட்ரிங்ஹாமுக்குவந்து தம்புதல்வருடன்நான்குதினந்தங்கியிருந்தார். அப்போது சாண்ட்ரிங்ஹாமிலுள்ள நம்சக்ரவர்த்தியின் குடித்தனக்காரர்கள் அனைவரும் அவர்க்கு ஓர் வந்தனோ பசாரப்பத்திரம் வாசித்து அவரது நல்வரவைக் கொண்டாடினார்கள். அப்பத்திரிகைக்கு உத்தரம் சொல்லுகையில் விக்டோரியா சக்ரவர்த்தினியார் "உங்களுடைய விசுவாசமுள்ள வந்தனோ பசாரப்பத்திரிகையை ஏற்றுக் கொள்ளுவதில் எனக்கு அதிக சந்தோஷம். இனிய மொழிகளால் உபசரித்து என்வரவை ஏற்றுக் கொண்டதற்காகவும் வேல்ஸ் இளவரசனையும் இளவரசியையும்பற்றி அன்பான வார்த்தைகளால் செய்திருக்கும் பிரஸ்தாபத்திற்காகவும் நான் உங்களுக்கு வந்தனம் புரிகின்றேன்.



இதற்குப் பதினேழு வருஷங்களுக்குமுன் நான் இங்கே வந்தபோது பலநாள் துக்கசாகரத்தில் மூழ்கியிருந்தேன். பின்பு பகவத்கிருபா விசேஷத்தால் எனக்கும் உலகுக்கும் உபகாரமாக என் புதல்வன் உஜ்ஜீவித்தெழுந்தான். ஆகவே திரும்பவும் இங்குவந்து சுபிக்ஷஸ்திதியில் இருக்கும் உங்கள் சுகிர்தமுகங்களைக்கண்டு ஒரு நல்ல காணியாளனுக்கும் அவன் கீழ்வாழும் வாரக்குடிகளுக்கும் பரஸ்பரமாக இருக்கும் விசுவாச நலத்தை அறியவே எனக் குண்டாயிருக்கும் மகிழ்ச்சிக்கெல்லையே இல்லை. பரஸ்பர க்ஷேமலாபத்திற்குக் காரணமாகிய இவ்விசுவாசம் நாளுக்குநாள் வளர்ந்தோங்க வேண்டுமென்று விரும்புகின்றேன்' என்ற கருத்தடங்கிய மொழிகளைக் கூறினார்.

நம் சக்ரவர்த்தியும் அலெக்ஸாண்ட்ரா சக்ரவர்த்தினியும் தம் புத்ரிகள் மூவரையும் அழைத்துக்கொண்டு தம் ஜேஷ்ட புத்ரியின் விவாக விஷயமாக விக்டோரியா சக்ரவர்த்தினியாரிடம் பிரஸ்தாபித் தனுமதிபெறுமாறு ஜூன் 27-ல் விண்ட்ஸர் அரண்மனைக்குச் சென்றார்கள். உடனே விக்டோரியா சக்ரவர்த்தினியார் அவ்விவாகத்துக் கிசைந்தார்கள், அச்செய்தியறிந்ததும் நம்சக்ரவர்த்தி அவ்விவாகத்தைப்பற்றி மார்ல்பரோ அரண்மனையிலுள்ள பரிசனங்களுக்கும் ராஜ்யத்தின் பிரதான மந்திரியாகிய சாலிஸ்பரி பிரபு

வுக்கும் அறிவித்தார். மணமகனாகிய எர்ல் ஆப் பைபும் அன்று மாலையிலேயே விக்டோரியா மகாராணியாரைத் தரிசித்தார். பின்பு மகாராணியார் அந்த விவாகவிஷயத்தைப் பார்லிமெண்ட் மகாசபைக்கும் முறைப்படி அறிவித்தார்.

அலெக்ஸாண்டர் வில்லியம் ஜார்ஜ் டப் என்ற இயற்பெயருடைய மணமகனார் ஜேம்ஸ் என்ற ஐந்தாவது எர்ல் ஆப் பைபுக்கு 1849 நவம்பர் 10-ல் ஜனித்த ஏக புத்திரர். அவர் ஈடன் கலாசாலையில் கல்விபயின்றவர். 1879 ஆகஸ்டு 7-ல் அவர் தம்தந்தையாரின் பட்டத்தையடைந்தார். 1885-ல் ஐக்கியராஜாங்கத்தின் ஏர்லாக ஆக்கப்பட்டார். அவர் 1874 முதல் 1879 வரையில் விஸ்கவுண்ட் மக்டப் என்ற பெயருடன் பார்லிமெண்டின் சாமான்ய ஜனசங்கத்தில் ஓர் அங்கத்தவராக இருந்தார். இவர் ஸ்காட்லண்டின் பெருத்த காணியாளர்களுள் ஒருவர். எல்ஜின், அபர்டீன் முதலிய இடங்களில் இவர்க்கு அநேக பூஸ்திதிகள் உண்டு. பின்பு பைப்கோமகன் என்றபட்டமும் பெற்றார்.

இவ்விவாகம் ஜூலை 27-ல் பக்கிங்ஹாமைச் சார்ந்த தேவாலயத்தில் அதிவிமரிசையாக நடந்தது. அப்போது விக்டோரியா சக்ரவர்த்தினியார், நம்சக்ரவர்த்தி, அலெக்ஸாண்டிரா சக்ரவர்த்தினி, அவர் குழந்தைகள், ஜெல்



லன்ஸ்வேக்கர், டென்மார்க் இளவரசர் முதலியோர் அங்குவந்திருந்தனர்.

நம்சக்ரவர்த்தியின் ஜேஷ்ட புத்ரியாகிய பைப்கோமகள் (லூயிஸ் ராஜகுமாரி) 1891 மே 17-ல் ஓர் பெண் மகவீன்றார். அக்குழந்தைக்கு ஜூன் 29-ல் செயின்ட் ஜேம்ஸ் தேவாலயத்தில் ஞானஸ்நானம் நடந்தது. விக்டோரியா சக்ரவர்த்தினியாரும் நம்சக்ரவர்த்தியும் அலெக்ஸாண்டிரா சக்ரவர்த்தினியும் அக்குழந்தைக்கு ஞானத்தாய்தந்தையர்களாக நின்றார்கள். ஞானஸ்நானச் சடங்கை காண்டர்பரியின் பிரதான அத்தியக்ஷகர் நடத்தினார். அலெக்ஸாண்டிரா சக்ரவர்த்தினி அக்குழந்தையைச் செவிலியின் கையினின்றும் வாங்கி விக்டோரியா சக்ரவர்த்தினியாரிடம் தந்தார். அவர் அதை அன்போடேற்று அதற்கு அலெக்ஸாண்டிரா விக்டோரியா ஆல்பெர்ட்டா எட்வினா லூயிஸ் என்று நாமகரணம் செய்தார்.

அவ்வருஷம் நவம்பர் 9-ல் நம்சக்ரவர்த்தி தம் ஐம்பதாம் ஜனனநாளைக் கொண்டாடினார். அடுத்த டிசம்பரில் நம்சக்ரவர்த்தியின் துவிதீய புத்ரராகிய ஜார்ஜ் ராஜகுமாரர் ஜ்வரத்தால் பீடிக்கப்பட்டிருந்தார். அவர்க்கு நோய்தீர்ந்து ஆரோக்கியம் எய்தியதும் அவரது தமயனாகிய க்ளாரன்ஸ் அண்டு அவொண்டேல் கோமகனார்க்கு விக்டோரியா மேரி ஆப் டெக் ராஜகுமா

ரியை மணம் செய்விக்கும் சுப சமாசாரம் 1892 ஜனவரி ஆரம்பத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டது. அதை அறிந்ததும் அவ்விதசம்பந்தம் ஏற்றதுதானென்று சர்வ ஜனங்களும் சம்மதித்து அகமகிழ்ந்தார்கள்.

சான்ட்ரிங் ஹாமில் தம்பெற்றோர்களுடன் வசித்துக் கிறிஸ்துமஸ் விடுமுறைநாட்களைச் சந்தோஷமாகக் கழித்துக்கொண்டிருந்த க்ளாரன்ஸ் அண்டு அவொன்டேல் கோமகனார் ஜனவரி 9 ல் இன்புளுயன்ஸா என்ற ஜ்வரத்தால் பிடிக்கப்பட்டார். ஆரம்பம் முதற்கொண்டே ஜ்வரம் அதிக அகோரமாகவே இருந்து எவ்வளவோ பிரபல வைத்தியர்கள்கூடி எவ்வளவோ சிரமப்பட்டுச் சிகிச்சைபுரிந்தும் சிறிதும் தணிவெய்தாது ஜனவரி 14-ல் அவ்விளவரசின் ஆவியை அகற்றியது. நம் சக்ரவர்த்திக்கும் சக்ரவர்த்தினிக்கும் நேர்ந்த இப்பெருந்துக்க விஷயத்தில் உலகிலுள்ளோர் அனைவரும் அநுதாபங் காட்டினர். அவர்களும் அதனையுணர்ந்து கீழ்வரும் பிரசுரத்தைப் பிரசுரித்தனர்.

விண்ட்ஸர் அரண்மனை,
20 ஜனவரி, 1892.

“வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் தங்கள் அன்பான ஜேஷ்டபுதல்வனின் தேகவியோகங்காரணமாகப் பெருந்துக்க சாகரத்தில் மூழ்கியிருக்கும் தருணத்தில் ஐக்கிய ராஜ்யத்திலும் குடியேற்ற நாடுகளிலும் இந்தி



யாவிலும் உள்ள மகாராணியாரின் பிரஜாகோடிகள் அனைவரும் அநுதாபங்கொண்டதற்காக நன்றி பாராட்டும் விஷயத்தை அறிவிக்க ஆவல்கொள்ளுகின்றார்கள். தங்கள் துக்கத்தை அனைவரும் கொண்டாடியிருக்கின்றார்கள் என்ற உணர்ச்சி அவர்களது நலியும் மனத்துக்கு நிலையான ஆறுதல் அளித்து ராஜ்யத்தின்மீது அவர்களுக்குள்ள அபிமானத்தை முன்னிலும் அதிகரிக்கச் செய்கின்றது.”

க்ளாரன்ஸ் கோமானின் பரிதாப மரணச்செய்தி எட்டுகையில் காண்டர்பரியின் பிரதான அத்தியக்ஷகர் (டாக்டர் பென்ஸன்) பிஸ்காவில் இருந்தார். இச்செய்தி கேட்டதும் அவர் நம்சக்ரவர்த்திக்கனுப்பிய அநுதாப தந்தியில் தாம் உடனே திரும்பி ஊர்வந்து விடுவதாகக் குறித்திருந்தார். அன்னியர்களுடை க்ஷேமத்தில் கருத்துடைய நம்சக்ரவர்த்தி அவ்வத்தியக்ஷரின் அநுதாப தந்திக்கு நன்றிகூறித் தாம் விடுத்த பதில் தந்தியில் அவ்வாறு அவசரப்பட்டுத் திரும்பவேண்டாமென்று குறித்துவிட்டுப்பின்னர்ச் சிலநாட்கழித்துக் கீழ்வரும் கருத்தடங்கிய திருமுகத்தை அவர்க்கனுப்பினார்.

சான்ட்ரிங்ஹாம்,
27 ஜனவரி, 1892.

என் அன்புள்ள பிரதான அத்தியக்ஷரே, எங்கள் அன்பான ஜேஷ்டபுத்ரனின் விவாக சடங்கை செய்ண்ட் ஜார்

ஞ் தேவாலயத்தில் நடத்துவிக்க இசைந்து நாங்களிரு த்த அன்பான கடிதத்தை நான்பெற்றுச் சிலநாள்களாயின. அதற்குப்பின்பு எவ்வளவோ அன்பும் அனுதாபமும் அன்மொழிகள் அடங்கிய தங்களது மற்றொரு கடிதத்தையும் பெற்றேன். அதில் தாங்கள் அவனது அபரக்கிரியைகளை நடத்துவிக்கு விசித்தம் உடனே ஊர் திரும்ப ஆசைகொள்வதாக எழுதியிருக்கின்றீர்கள்.

அவ்வாறு ஆவல் கொள்ளுதல் மாறு அன்பும் கிளைவும் உடைய தங்களுக்கியல்பே. ஆயினும் தற்காலத்தில் தங்களுடைய தேக ஆரோக்கியத்துக்கு அதிக அனுகூலமாக இருக்கும் உஷ்ணதேசவாசத்தை விட்டுவிட்டு நெடுந்தூரப் பிரயாணம்செய்து இன்னும் அக்கொடும் வியாதிக்குக் காரணமான குளிர்மிகுந்த ஸ்திதியிலிருக்கும் நம்தேசத்துக்கு வருமாறு இடந்தருதல் எனக்கழகல்ல.

இப்படிப்பட்ட பெருந்துக்கத்தில் எங்களை அழுந்த ஈஸ்வரனுக்கு இச்சையிருந்தது. இந்த சாண்டரிங்ஹாம் அரண்மனையில் தாங்கள் வந்து எங்களுடன் தங்கியிருக்கும் பாக்கியத்தை நாங்கள் பலமுறை பெற்றிருக்கின்றோம். ஆதலால் நாங்கள் அனைவரும் ஒருவரோடொருவர் எவ்வளவு நேசமாக இருக்கிறோம் என்பதை தாங்கள் நேரேகண்டறிந்திருக்கின்றீர்கள். ஆதலால் இவ்வாறு எங்களுடைய ஜேஷ்ட சுதனை எங்க



ளிடமிருந்து பறித்துக்கொண்டு போய்விட்டதில் எங்கள் மனம் எவ்வளவாகப் புண்பட்டிருக்கும் என்பதும் இனி அப்புண் ஒருவேளை ஆறினும் அதன்தழும்பு எங்கள் ஆயுள்நாள் முழுதும் மாறப்போவதில்லை என்பதும் தங்களுக்குத் தெரிந்த விஷயமே.

அவனுக்கு இப்போதுதான் இருபத்தெட்டு வயதாயிற்று. அவன் இன்றைக்கு முப்பதாம் நாள் ஓர் அழகும் அற்புத குணங்களும் அமைந்த சீமாட்டியை மணம்புரிவதாக இருந்தான். அந்த விவாகம் முடிந்து ஆனந்தாதிகளை அனுபவித்து உலகுக் குபகாரியாக ஆவானென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம். அந்தோ! அவ்வெண்ணமெல்லாம் வீண்போயிற்று! அக்கன்னிகையோ அவனை மணக்காமலே அவனுடைய விதவையாயினள்.

பகவத் செயலைக்கடக்க யாரால் முடியும்? ஆனால் அவர் எதிலும் உத்தமமானதையே செய்பவராக இருத்தலால் நாம் சிறிதும் முறுமுறுக்கக் கூடாது. எங்கள் அன்பான புதல்வன் இவ்வுலக ஏவுதல்களுக்கும் துன்பங்கட்கும் உட்பட்டிருந்தபோது இருந்திருக்கக்கூடியதைவிட இப்போது அதிக சந்தோஷ ஸ்திதியிலிருக்கின்றான். அன்றியும் எங்கள்விஷயமாக

எங்கள் சிநேகிதர்கள் மாத்திரமேயன்றிச் சர்வஜனங்களுமே அனுதாபங்கொள்ளுகின்றார்கள் என்பதும் எங்களுக்குச் சிறிது ஆறுதல் அளிக்கின்றது.

"அவனன்றி அணுவும் அசையாது." என் அன்பான அத்தியக்ஷரே, எங்களது துன்பகாலத்தில் ஆறுதலளித்த தங்கள் இனியமொழிகள் அமைந்த நிருபத்திற்காகத் தங்களை மீண்டும் வந்திக்கின்றேன்.

தங்கள் விசுவாசமுள்ள,

ஆல்பர்ட் எட்வர்ட்.

க்ளாரன்ஸ் கோமானின் மரணத்துக்குப்பின் நம் சக்ரவர்த்தியும் குடும்பத்தார்களும் துக்கசாகரத்துள் மூழ்கி அநேகமாதங்கள்வரை அரண்மனைவிட்டு வெளிவரா திருந்தார்கள். கடைசியாக 1893-ல் ஏழைகளுக்கு ஏற்ற வீடமைக்கும் விஷயமாக ஏற்பட்ட பஞ்சாயத்தில் நம்சக்ரவர்த்தியை ஓர் அங்கத்தினராக நியமிக்கவே அவர்தம் அரண்மனைவிட்டு வெளிவந்து பரோபகாரத்துக்காக உழைக்கும் உவப்பான கைங்கர்யத்தை மீண்டும் கைக்கொண்டொழுகுவாராயினர்.

சக்ரவர்த்தியின் துவிதீய புத்ரராகிய ஜார்ஜ் இளவரசர்க்கு மே ஆப் டெக் ராஜகுமாரியை மணம் செய்விப்பதாக அவ்வருஷம் மேமாதத்தில் பகிரங்கம் செய்யலாயிற்று. பின்னர் அவ்விவாகம் அதற்குச் சில நாட்கழித்து ஜூலை 6-ல் செய்ண்ட் ஜேம்ஸ்



தேவாலயத்தில் ராஜகுடும்பத்தார் அனைவரும் கூடியிருக்க அதிவிமரிசையாக நிறைவேறியது.

சக்ரவர்த்தி தமது த்விதீய புத்திரியாகிய மாட் ராஜகுமாரியை 1896-ல் பக்கிங்ஹாமைச் சார்ந்த தேவாலயத்தில் விக்டோரியா சக்ரவர்த்தினியார் முதலிய ராஜகுடும்பத்தார் அனைவரும் கூடியிருக்க டென்மார்க்கு சார்லஸ் ராஜகுமாரருக்கு மணம் செய்வித்தார்.

1897-ல் விக்டோரியா சக்ரவர்த்தினியாரின் வைர ஜூபிலி நடந்தபோது அதிசிரமம் எடுத்துக்கொண்டு அனைத்தையும் சீராக நிர்வகித்து முடித்தார். அப்போது நடந்த ஏற்பாடுகள் அனைத்தும் விக்டோரியா சக்ரவர்த்தினியாருடைய சம்மதியோடு இவர் சம்மதியும் கேட்டுத்தான் செய்யப்பட்டன. எதையும் ஒழுங்குபடுத்தி நடத்துதலில் வல்லவரான இவரது அபார சக்தியாற்றான் அப்போது நடந்தன அனைத்தும் அவ்வளவு சீராக நடந்தன.

1898. மேமாதத்தில் க்ளாட்ஸ்டன் துரை பரகதி படைந்ததில் நம்சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் அதிக மனவருத்த மடைந்தார்கள். க்ளாட்ஸ்டன் துரையின் பிரேதப்பெட்டியுடன் நம்சக்ரவர்த்தியும் தம்புதல்வர் முதலியோருடன் ஸ்மசானம்வரைப் போய்வந்தார்.

அவ்வருஷம் ஜூலை 18-ல் நம்சக்ரவர்த்தி ஓர்மாடியினின்றும் இறங்குகையில் எப்படியோ கால்நழுவி விழு

த்து முழுக்காட்சியிலிருந்து அதிக அபாயஸ்திதியில் இருந்தார். அவர் அவ்வியாதியினின்றும் ஆரோக்கியமெய்துதல் அதிக கஷ்டமென்றும் அப்படி எய்தினலும் அவருடைய கால் முன்னைய ஸ்திதியை அடையாது. நொண்டியாகத்தா னிருக்குமென்றும் கருதி அநேகர் அஞ்சினார்கள். ஆனால் பகவத் கிருபாவிசேஷத்தாலும் வைத்தியர்களது வல்லமையாலும் அலெக்ஸாண்டிரா சக்கரவர்த்தினியின் அன்பான பராமரிப்பினாலும் அவர் சீக்கிரத்திலேயே பூர்ணசுகம் அடைந்தெழுந்தார்.

தமதன்பான அன்னையார் அதிகநோயாக இருக்கின்றார் என்ற செய்தியைக் கேட்டதும் அவர் அன்னையண்டையிருந்து அவர்க்கு சிஸ்ருஷைசெய்யும்பொருட்டு தமது அலெக்ஸாண்டிரா சக்கரவர்த்தினி செப்டெம்பரில் கோபன்ஹேகனுக்குச் சென்றார். அவ்வன்னையார் அம்மாதம் 29-ல் பரகதியடைந்தார். அதில் நம்சக்கரவர்த்தி முதலியோர்க்குண்டான மனவருத்தத்துக்கு அளவேயில்லை. இந்த அபரக்கிரியையின்போது தாம் ஆரோக்கியஸ்திதியில் இராமையால் நம்சக்ரவர்த்தி தம் புதல்வரைமட்டும் கோபன்ஹேகனுக் கனுப்பினார். அந்த அபரக்கிரியை ஆதிகள் முடிந்தபின்னும் சிலநாள் கோபன்ஹேகனிலேயே தங்கியிருந்துவிட்டு நம்சக்ர



வர்த்தினியும் அவர் புதல்வரும் நவம்பர் முதலில் ஊர் வந்து சேர்ந்தார்கள்.

1900-ம் வருஷம் ஒருவிஷயத்துக்காக விசேஷமாகக் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. ஏனென்றால் நானாதேசத்து ஜனங்கள் அனைவராலும் பெரிதும் அபிமானிக்கப்பட்டு விளங்கும் நம்சக்ரவர்த்தியை அவ்வருஷத்தில் ஓர் வெறியன் சுடத்துணிந்தான். விக்டோரியா மகாராணியாரின் மிகவிசேஷித்த தென்னப்படுகின்ற அயர்லண்ட் யாத்திரை இந்த ஆபத்து நிகழ்ந்த அன்றுதான் தொடங்கியது. விக்டோரியா சக்ரவர்த்தினியார் அவ்வருஷம் ஏப்ரில் நாலாந்தேதி காலையில் கிங்ஸ்டவுன் என்ற இடத்தில் கரையிறங்கி டப்ளின்மா நகருள் அதிக ஆடம்பரத்துடன் பிரவேசித்தார். அதே நேரத்தில் நம்சக்ரவர்த்தியும் அலெக்ஸாண்டிரா சக்ரவர்த்தினியும் கோபன்ஹேகனுக்குச் செல்வதற்காக இங்கிலாந்து விட்டுப் புறப்பட்டார்கள். அவர்கள் ஏறியிருந்த வண்டி ப்ரஸெல்ஸிலுள்ள நோர்ட் என்ற ஸ்டேஷனை விட்டுப் புறப்படுகையில் ஸைபு என்ற ஓர் தடியன் நம்சக்ரவர்த்தி வீற்றிருந்த வண்டியண்டை ஓடிவந்து ஒரு கைத்துப்பாக்கியால் அவரை நோக்கி இருமுறை சுட்டுவிட்டான். ஆனால் தெய்வானுகூலமாக அவ்விருவெடிகளும் சக்ரவர்த்தியைத் தாக்கவில்லை. அதில் அவர் சிறிதும் கலவரப்படாமல்

சுவாதீன சித்தராகவே இருந்து உடனே தாம் ஆபத்தினின்று தப்பிய விஷயத்தைத் தமதன்பான அன்னையார்க்குத் தந்தியடித்துவிட்டுத் தாம் உத்தேசத்திருந்தபடியே கோபன் ஹேகனுக்குப் போய்விட்டு அந்த மாதம் 20-ம் தேதியில் லண்டன்மாநகர்வந்து சேர்ந்தார். அப்போது அவரது நல்வரவை அம்மாநகரத்து மகாஜனங்கள் அதிக சந்தோஷத்துடன் கொண்டாடினார்கள். அவரது நல்வாழ்வைக்கோரி நிருபங்களையும் அநேகர் அனுப்பினார்கள். அதற்குச் சில நாட்கழித்து நம்சக்ரவர்த்தி அம்மகாஜனங்கள் அனைவர்க்கும் ஒருங்கே ஓர் நிருபம் எழுதி பத்திரிகையில் பிரசுரிக்கச் செய்தார். அதில்

சாண்ட்ரிங்ஹாம்.

நானும் வேல்ஸ் இளவரசியும் எங்களுக்கு நேர்ந்த ஆபத்தினின்றும் பகவத்கிருபா விசேஷத்தால் தப்பிய விஷயமாகப் பலரும் எங்கள் மீது அனுதாபங்கொண்டு எங்கள் க்ஷேமத்தைக் கோரிவெளியிட்ட கடிதாதிகளைக்கண்டு நான் பெரிதும் பரவசமுறுகின்றேன்.

உலகெங்குமுள்ள மகாராணியாரின் பிரஜாகோடிகளும் அன்னியதேசத்து மகாஜனங்களும் ஆகிய உலகத்தார் அனைவருமே இவ்வாறு வெளியிட்டிருக்கின்றார்கள். நான் என் சுதேசத்துக்குத் திரும்பிவந்தபோது என் நாட்டார்கள் என்னை அதிக அன்போடு



எதிர் ஏற்று என் நல்வரவைப் பெரிதும் உவந்துகொண்டாடினார்கள்.

இப்பக்திவிசுவாசங்களை நான் மிகப்பெரிதாகமதித்து என் ஆயுள்நாள் முழுதும் ஞாபகத்தில் வைத்திருப்பேன்.

ஆல்பர்ட் எட்வர்ட்

என்ற கருத்துள்ளமொழிகள் அடங்கியிருந்தன.

## பதினைந்தாவது அத்தியாயம்.

# சிம்மாசன ஆரோகணம்.

விக்டோரியா சக்ரவர்த்தினியார் சரியான ஆரோக்கிய ஸ்திதியில் இல்லை என்ற சமாசாரம் 1901 ஜனவரி 19-ம் தேதி வெளியாயிற்று. அன்றே நம்சக்ரவர்த்தியும் அலெக்ஸாண்டரா சக்ரவர்த்தினியும் ஆஸ்பர்ன் அரண்மனை அடைந்தார்கள். பின்பு ஜெர்மன் சக்ரவர்த்தியும் தம்தேசத்தில் அப்போது கொண்டாடிக் கொண்டிருந்த பெருநாட் கொண்டாட்டங்கள் முடிந்தும் முடியாததுமாக இருந்துங்கூடத்தப்பாட்டியாரின் அபாயஸ்திதியைக் கேட்டதும் அவரைப் பார்க்க உத்தேசித்துப் புறப்பட்டுவிட்டார். அதையறிந்ததும் அவரை எதிர் கொள்ளும் பொருட்டு நம்சக்ரவர்த்தி தம்புதல்வருடன் லண்டன் மாநகரம் சென்றார்.

அப்புறம் நடந்த துக்கசம்பவங்களனைத்தும் அனைவர்க்கும் தெரிந்தவையே. விக்டோரியா சக்ரவர்த்தினியார் தம்குழந்தைகளும் அவர்கள் குழந்தைகளும் ஆகிய சுற்றத்தார் அனைவரும் அண்டையில் சூழ்க்



திருக்கச் சித்தசமாதானத்துடன் ஜனவரி 22தேதி மாலை 6 மணிக்குப் பரகதியடைந்தார்.

நம்சக்ரவர்த்தி தமதன்னையாரிடத்தில் எவ்வளவோ அன்பும் பக்தியும் விசுவாசமும் உடையவராக இருந்தும் தமதன்னையார் பரகதியடைந்து கிடக்கும் படுக்கையண்டை ஒருகணமும்கூடக் கண்ணும் கண்ணீருமாகநின்று அழுது அங்கலாய்த்துக் கொண்டிருக்க இயலவில்லை. ஏனென்றால் அன்னையார் எந்த நிமிஷத்தில் பரகதி யடைந்தாரோ அந்த நிமிஷத்திலேயே இவர் மகாபெரியதாக விளங்கும் பிரிட்டிஷ் ராஜ்யத்துக்கு அரசராகிவிட்டார். ராஜ்யபாரம் தம்மேல் ஏறியவுடனே அதை வகித்தற்காகச் செய்யவேண்டிய கைங்கர்யங்களைக் கவனிக்க வேண்டுவதவசியமாயிற்று. அடுத்தநாள் நம்சக்ரவர்த்தியின் முதல் பிரிவிகவுன்ஸில் செய்ண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் கூடிற்று. அப்போது நம்சக்ரவர்த்தி தந்த உறுதிமொழி முதலியவைகளை லண்டன் கெஜட் கீழ்வருவாறு விவரிக்கின்றது. அதில் " மகாமகத்வம் பொருந்திய மகாராஜா அவர்கள்இன்று மந்த்ராலோசனை சபையில் வீற்றிருந்து கீழ்வரும் உறுதிமொழியைத் தயைகூர்ந்து அளித்தார்கள்.

மன்னர்களே பிரபுக்களே, கனவான்களே, நான் உங்களுடன் பேசவேண்டிய சந்தர்ப்பங்களுள் இதுதான் அதிக சங்கடமான சந்தர்ப்பம்.

எனது பெருந்துக்கத்துக்கு ஆஸ்பதமான முதற் கடமை என்னவென்றால் எனது அன்பான அன்னையாராகிய மகாராணியாரின் தேகவியோகத்தை உங்களுக்கெல்லாம் அறிவித்துக் கொள்ளுவதுதான். நமக்கு நேர்ந்திருக்கும் இப்பரிகரிக்க முடியாத துக்கவிஷயத்தில் நீங்களும் இவ்விராஜ்யத்திலுள்ள மற்றெல்லாப் பிரஜாகோடிகளும் எவ்வளவதிகமாக என்மீது அனுதாபங் கொள்ளுகின்றீர்கள் என்பது எனக்குத்தெரியும். உண்மையாக நோக்குமிடத்தில் உலகடங்கலுமே அவ்வாறனுதாபங் கொள்ளுகின்றதெனக் கூறலாமென்றெண்ணுகின்றேன்.

சதாகாலமும் அவர்களைப் (அன்னையாரை) பின்பற்றி நடக்கவே முயல்வேன் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயம். அதை நான் எடுத்துரைக்க வேண்டுவதில்லை. என்மேல் விழுந்திருக்கும் இந்த ராஜ்ய பாரத்தைவகிப்பதில் ஒரு கக்ஷியிலும் சாராது சர்வ ஜனங்களுக்கும் பொதுவாகவே இருந்துவருவேன் என்றும் என்னுடலில் உயிரிருக்கும் வரையில் எனது பிரஜைகளின் க்ஷேமலாபத்திற்காகப் பாடுபடுவதில் பின்வாங்கேன் என்றும் உறுதியாக உரைக்கின்றேன்.

நான் எனக்கு முன்னுண்ட அறுவர் வகித்து வந்த எட்வர்ட் என்றபெயரை வகித்துக் கொள்ளுவதாகத் தீர்மானித்திருக்கின்றேன். இதனால் எனது மற்றொரு



பெயராகிய ஆல்பர்ட் என்பதைக் குறைவுபடுத்தி விட்டேன் என்று கருதாதீர்கள். அந்நாமம் எனக்கு, என்றும்மாறாத் துயரளித்தகன்றவரும் மகானும் ஞானியும் சர்வஜனங்களாலும் சற்புருஷர் என அழைக்கப் பெற்றவரும் ஆகிய எனது பிதாவின் மூலமாக எனக்குக் கிடைத்தது. ஆகலின் அத்திருப்பெயர் தனித்திருக்க வேண்டுமென்பதே எனது அபீஷ்டம்.

இறுதியில் உரிமைவாயிலாக என்மீது வீழ்ந்திருக்கும் கடமைகளைச் செலுத்துவதில் பார்லிமெண்டாருடையவும் மகாஜனங்களுடையவும் ஆதரவைப் பூர்ணமாக நம்பியிருக்கின்றேன் என்பதையும் அக்கடமைகளை நிறைவேற்றுவதற்காகவே என் ஆயுளுள் முழுதும் உள்ளபலம் அத்தனையும் செலுத்துவதாகத் தீர்மானித்திருக்கின்றேன் என்பதையும அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

இவ்வாறு மகாராஜா அவர்கள் திருவாய்மலர்ந்த பின்பு அங்குகூடியிருந்த பிரபுக்கள் அனைவரும் மகாராஜா அவர்கள் தங்களிடம் கிருபை கூர்ந்தருளிய உறுதிமொழியை உலகமெல்லாம் அறியும்படி பகிரங்கப்படுத்த அனுமதிதருமாறு பிரார்த்தித்தார்கள். மகாராஜாவின் மகாசமுகத்திலும் அவ்வாறே ஆஞ்ஞையாயிற்று.”

என்ற கருத்துள்ள வசனங்கள் அமைந்திருந்தன.

மகாராணியாரின் பிரேதத்தை ஆஸ்பர்ன் அரண்மனையிலிருந்து லண்டனுக்குக் கொண்டுவருதல் முதலிய அபரகிரியைகள் பெப்ருவரி முதல் தேதியிலிருந்து நாலாந்தேதிவரை நடந்தன. பிரேதரதம் செயின்ட்ஜேம்ஸ் தேவாலயத்தை நோக்கிச் செல்லுகையில் ஜெர்மன் சக்ரவர்த்தி, பெல்ஜியவேந்தர், போர்த்துகல் வேந்தர், ஹெல்லனியர் வேந்தர் என்ற புறதேசவேந்தர் நால்வரும் சாக்ஷாத்தாக உடன் சென்றார்கள். ஏனையமுடி மன்னர்கள் தங்களுக்குப் பிரதியாக அந்தரதத்துடன் செல்லுமாறு பிரதிநிதிகளை ஏற்படுத்தியிருந்தார்கள். எவ்வளவோ லக்ஷக்கணக்கான ஜனங்கள் உள்ளக்கவலையுடன் உடன் செல்ல அந்தரதம் சென்றகாட்சி கண்டோர் மனத்தைவிட்டொருபோதும் அகலாதென்று பார்த்தோர் பலரும் கூறுகின்றனர்.

கடைசியாக ப்ராக்மோரில் சமாதிகொண்டமர்ந்திருக்கும் தமது தந்தையாரண்டையிலேயே சயனித்திருக்குமாறு தமது அன்னையாரையும் பெப்ருவரி 4-ல் அடக்கம்செய்துவிட்டு, அன்றே நம்சக்ரவர்த்தி, தமது பிரஜைகளுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் திருமுகங்களை எழுதிவிடுத்தனர். அவற்றை நோக்கினல் காலஞ்சென்ற விக்டோரியா சக்ரவர்த்தி



னியாரைப்போலவே இவரும் தமது பிரஜாகோடிகளின்மீது கொண்டிருக்கும் அனுதாபாதிகள் நன்கு விளங்குகின்றன. அத்திருமுகங்களுள் நமது இந்திய அதிபதிகளுக்கும் பிரஜைகளுக்குமாக அனுப்பியதிருமுகத்தின் கருத்தை மட்டும் ஈண்டுமொழி பெயர்த்துத்தருகின்றோம்.

"அனைவரும் வியாகுல மெய்துமாறு எனது அன்பான அன்னையார் தேகவியோக மெய்தின காரணத்தால் மிகப்புராதனமானதும் வம்சபாரம்பரை வழியாக் எனக்குக் கிடைத்ததுமான சிம்மாசனத்தை நான் உரிமைவாயிலாகப் பெற்றேன். என் இந்திய ராஜ்யத்திலுள்ள சுதேச சமஸ்தானாதிபதிகளுக்கும் குடிஜனங்களுக்கும் இப்போது என்வாழ்த்துரை யனுப்பவும் அவர்களுடைய க்ஷேமலாபத்தில் எனக்குள்ள சிரத்தையை வற்புறுத்தவும் விரும்புகின்றேன். பிரிட்டிஷ் வேந்தர்களுள் எனதன்னையார்தான் இந்தேசபரிபாலனப் பொறுப்பை முதன்முதலாக நேரேவகித்து அந்நெருங்கிய சம்பந்தத்திற் கறிகுறியாகச் சக்ரவர்த்தினியார் என்ற பட்டத்தை வகித்தவர். இந்தியாவைச் சார்ந்த சகல விஷயங்களிலும் அச்சக்ரவர்த்தினியார் அதிக சிரத்தை காட்டிவந்தார்கள். அந்தேசத்துக் கோடானுகோடி பிரஜைகளும் சக்ரவர்த்தினியார்மீதும் அவரது சிம்மாசனாதிபத்யத்திலும் காட்டி

வந்த பக்திவிசுவாசங்களையும் நான் நன்றாய் அறிந்திருக்கின்றேன். சக்ரவர்த்தினியாரின் ஆட்சியின் கடைசியில் நடந்த தென்னாபிரிகா யுத்தத்தில் சுதேசசமஸ்தானாதிபதிகள் செய்த பெருந்தன்மையான உதவிகளிலும் சுதேசசாமானியர்கள் தங்கள் ஜன்மதேசத்துக்கப்பால் சென்று செய்த பராக்கிரம சேவகத்திலும் மேற்குறித்த பக்திவிசுவாசங்கள் பிரசித்தியாக விளங்குகின்றன. அச்சக்ரவர்த்தினியார் விரும்பியளித்த அனுமதியினாலேயே நான் முன்பு இந்தியாவுக்கு வந்து அவ்விசாலமான தேசத்தின் அதிபதிகளையும் பிரஜைகளையும் பட்டணங்களையும் நேரிற்கண்டு மகிழ்ந்தேன். அப்போது என்மனத்தில் ஆழ்ந்துபதிந்த விஷயங்களை நான் ஒருபோதும் மறவேன். அச்சக்ரவர்த்தினியாரைப் போலவே நானும் பலவகுப்புகளையும் சார்ந்த என் இந்திய பிரஜைகளின் அசேஷ க்ஷேமத்திற்காகப் பாடுபட்டு அவர்களுடைய இடைவிடாத பக்திவிசுவாசங்களுக்குப் பாத்திரனாகும்படி முயல்வேன்."

மகாராணியார் தேகவியோக மெய்தியவுடனேயே சக்ரவர்த்தியின் ஏகபுதல்வராகிய ஜார்ஜ்வேல்ஸ் இளவரசர் கடுநோயால் பிடிக்கப்பட்டு வருந்தினர். அவர் தம்பாட்டியாரை எவ்வளவோ பக்தியுடன் விசுவாசித்து வருபவராக இருந்தும் அவரது அபரக்கிரியையின்போது உடனிருக்க இயலாதவராயினர். பின்பு அவர் தமது



மனைவியாரின் அன்பான பராமரிப்பினால் சிலநாட்களுக்குள் ஆரோக்கிய மெய்தினர். இவ்வாறு தமதன்னையாரும் ஆவியிழந்து தமக்குள்ள அன்பான ஏகபுதல்வரும் அருநோயில் அழுந்திப் படுக்கையாகக் கிடக்கக்கண்டு தமதுள்ளம் பதைத்தாலும் அக்காலத்தும் நடக்க வேண்டிய காரியங்கள் எதையும் நம் சக்ரவர்த்தி நழுவவிடவில்லை.

பெப்ருவரி 14ல் நம் சக்ரவர்த்தி தமது தேவியாருடன் நேரே விஜயம்செய்து பார்லிமெண்ட் மகாசபையைத் தொடக்கம் செய்வித்தார். அப்போது அவர் தம்முடைய பிரசங்கத்தைப் பிரபுக்கள் சபையில் இனியகுரலுடன் அதிக தெளிவாக இயற்றினர். காரன்வால் கோமகனாகிய தமது புதல்வரின் ஆஸ்டிரேலியா விஜய விஷயம் பிரஸ்தாபிக்கும் பொழுதுமட்டும் அவரது குரல் சிறிது கம்பியது. தமக்குள்ள ஏகபுத்ரனை நெடுந்தூரப் பிரயாணத்துக் கனுப்பிவிட்டுப் பல மாதங்கள் பிரிந்திருப்பதென்றால் அது அவருடைய உள்ளத்துக்கு அதிக வருத்தமாகத்தான் இருந்திருக்கும் என்பதில் என்னதடை? ஆயினும் எதிலும் தம் சுயநலம் பாராட்டாது தம்மிடத்து விசுவாசமுள்ள குடிகளின் திருப்தியைத் தேடுவதே இயற்கையாக உடைய நம் சக்ரவர்த்தி பின்னர்த் தம் புதல்வனைத்

தமதன்னையாரின் அபீஷ்டப்படியே ஆஸ்திரேலியா மகா ஜனங்களின் திருப்தியின் பொருட்டு அங்கே விஜயம் செய்யுமாறு அனுப்பவும் இசைந்தார்.

## பதினாறாம் அத்தியாயம்.

## மகுடாபிஷேகம்.

நம் சக்ரவர்த்தியின் மகுடாபிஷேகத்திற்கு 1902 ஜூன் 26ம் தேதியை முகூர்த்தமாக நிச்சயித்திருந்ததும் அதன் பொருட்டு லண்டன் நகரம் அற்புதமாக அலங்கரிக்கப்பட்டிருந்ததும் நாடுதேசங்களிலுமிருந்து முடிமன்னராதியர்கள் அங்குபோய்ச் சேர்ந்து மகுடாபிஷேகக் காட்சியைக் கண்டுகளிக்க ஆவலுடன் காத்திருந்ததும் பின்பு அதை நிறுத்திவிடுமாறு நம் சக்ரவர்த்திக்கு நேர்ந்த அபாயகரமான வியாதியை அறிந்து உலகுள்ளோர் யாவரும் உள்ளுடைந்துருகியதும் பின்பு அனைவரும் செய்த பிரார்த்தனைகட்கிரங்கிப் பகவான் செய்த அனுக்கிரகத்தால் நம் சக்ரவர்த்தி உஜ்ஜீவித்தெழுந்ததும் ஆகிய வரலாறனைத்தும் யாவர்க்கும் நன்றாகத் தெரிந்தவையே. நின்றுபோன மகுடாபிஷேகம் பின்னர் ஆகஸ்டு 9ல் அற்புதமாக நிறைவேறியது.

அன்று நம் சக்ரவர்த்தி பக்கிங்ஹாம் அரண்மனையை விட்டுப் புறப்படுவது 11 மணிக்கென்றிருந்தாலும் அதிகாலையிலேயே “தேன் கூடுகளில் ஈக்கள் அடர்ந்திருப்

பதுபோல" லண்டன்மா நகரத்தின் தெருக்களில் ஜனங்கள் நிறைந்து விட்டார்கள். முதலில் சேனா வீரர்களும் பிரபுக்களும் கோமான்களாதியரும் கோலமாகப் புறப்பட்டு சென்றபின் நம் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் ஆகிய ராஜதம்பதிகள் இருவரும் மூன்றாவது ஜார்ஜ் மன்னரது காலத்தில் நிர்மாணம் செய்யப் பெற்றதும் ஏழாயிரம்பவுன் விலை மதிப்புள்ளதும் ஆகிய தங்க ரதத்தில் ஆரோகணித்துப் பக்கிங்ஹாம் அரண்மனையினின்றும் பதினொரு மணிக்குப் புறப்பட்டார்கள். அவர்களைக்கண்டதும் தெருக்களில் நிறைந்திருந்த மகாஜனங்கள் அதிக மகிழ்ச்சிகொண்டு இடிமுழக்கம்போலக் கைகொட்டி ஆரவாரித்தார்கள். அவர்களது ராஜவிசுவாசத்தைக்கண்டு மகிழ்ந்து நம் சக்ரவர்த்தியும் சக்ரவர்த்தினியும் நகை முகத்துடன் சிரக்கம்பம்செய்து சென்றனர். அப்பவனி 11-25க்கு வெஸ்ட்மினிஸ்டர்அபே என்னும் மண்டபத்தை அணுகியது.

ராஜதம்பதிகள் தாங்கள் ஆரோகணித்திருந்த ரதத்தினின்றும் இறங்கி அம்மண்டபத்தினுட் பிரவேசிக்கும் காட்சியானது மகா அற்புதமானது. அக்காட்சியைக் காணுதற்காக அன்று அங்குக் கூடியிருந்த மகாஜனங்கள் எடுத்துக்கொண்ட சிரமம் இவ்வளவு அவ்வளவல்ல. எவ்விடங்களில் நின்றால் அக்காட்சியை நன்குக் காணலாமோ அவ்விடங்களைப் பிடித்துக் கொண்



டிருப்பதற்காகச் சிலர் முந்தியநாள் இரவுமுழுதும் அவ்விடத்திலேயே உறங்கி யிருந்திருக்கின்றார்கள். இடம் விட்டுப் பெயர்ந்தால் வேறுயாரேனும் அங்குவந்து நின்று விடுவார்களென்ற அச்சத்தால் நின்ற இடம்விட்டுப் பெயராது ஐந்து மணிநேரம்வரைச் சிலர் அசையாது நின்றிருந்திருக்கின்றார்கள். தமக்குமுன்னுள் நிற்பவர்களால் மறைப்புண்டாகாதபடி உயரத்தில் ஏறி நின்று காணுதற் குதவக்கூடிய ஆசனங்களை நெடுநேரம்வரைத் தாங்கிக்கொண்டு சிலர் அலைந்திருக்கின்றார்கள். பிரதி பிம்பக்காட்சியைக் கண்டு களித்தற்காகப் பெரிய பெரிய கண்ணாடிகளைச் சிலர் தாங்கிச் சென்றிருந்தனர். சிலர் அவ்வற்புதக் காட்சியைக் கண்டு களித்தற்காகத் தங்கள் ஆஸ்தியிலேயே பாதி செலவிட்டு வாய்ப்பான இடத்தில் அமர்ந்திருக்கச் சீட்டுவாங்கி யிருந்தனர்.

ரதத்தினின் றிறங்கியதும் முதலாவது நமது சக்ரவர்த்தினியும் பின்னர் சக்ரவர்த்தியும் பலவகை வாத்தியங்களும் கோஷிக்க வாழ்க! வாழ்க! என்று பிள்ளைகள் ஆர்ப்பரிக்க வேத புத்தகத்தையும் ராஜ சின்னங்களாதியவற்றையும் தாங்கிக்கொண்டு குருமார்களும் கோமான்களும் முன்செல்லச் சர்வாடம்பரங்களுடனும் மண்டபத்தினுட் பிரவேசித்துத் தங்கள் சிம்மாசனத்த

ன்னடை அமைத்திருந்த ஆசனங்களை அடைந்து சிறிது
ஜபஞ்செய்துவிட்டு வீற்றிருந்தனர்.

பின்பு காண்டர்பரி அத்தியக்ஷர் எழுந்து முன்னே
வந்து நின்றுகொண்டு அங்கு கூடியிருந்த மகா ஜனங்
களை நோக்கி "கனவான்களே, இவ்விராஜ்யத்தின்
உண்மையான அரசுரிமையுடைய எட்வர்ட் மன்னனை
உங்களுக்கு (இச்சமயத்தில் நம் சக்ரவர்த்தி எழுந்து
நின்று மகா ஜனங்களுக்குத் தம்மைத் தரிசிப்பித்துக்
கொண்டு நின்றார்.) இதோ பரிச்சயஞ் செய்துகொடுக்
கின்றேன். அரசனுக்குக் கீழ்ப்படிதலாஞ் சத்தியஞ்
செய்துகொடுக்க என்று இங்குக் கூடிவந்திருக்கும்
உங்களெல்லாருக்கும் இவரை அங்கீகரித்து இவர்க்குச்
சத்தியம் செய்துகொடுக்க இஷ்டந்தானா?" என்றார்.
உடனே அங்குவந்து கூடியிருந்த மகா ஜனங்கள்
அனைவரும் ஒரே குரலாய் எட்வர்ட் வேந்தனை ஈசன் காக்க
என்று உரக்கக்கூறினர். எக்காளம் முதலியவை இடி
முழக்கம்போலச் சப்தித்தன. பின்பு நிகழவேண்டிய
லிடனி என்ற சடங்கை தவிர்த்துவிட்டு அடுத்ததாகிய
சுவாமி நிவேதன விநியோகம் என்றதை அத்தியக்ஷகர்
நடத்தினார். பின்பு முடிசூட்டணை என்ற சடங்குநடந்
தது. அதில் நம் சக்ரவர்த்தி, நாட்டில் தொன்றுதொ
ட்டுவரும் முறைகளுக்கிணங்க அரசாள்வதாக வாக்க
ளித்து பைபிள் என்னும் வேத புத்தகத்தை முத்தமி



ட்டுச் சத்தியஞ் செய்துதந்தார். பின்பு அபிஷேகம்
நடந்தது. அப்போது நம் சக்ரவர்த்தி எட்வர்ட் சிம்
மாசனம் என்ற ஓர் ஆசனத்தில் வீற்றிருக்க அத்திய
க்ஷகர் கழுகுவடிவமானதோர் பாத்திரத்திலிருக்கும்
சுகந்த பரிமளதைலத்தைப் பன்னிரண்டாம் நூற்று
ண்டு முதல்வழங்கிவரும் ஒரு தேக்கரண்டியால் எடு
த்து அவருடைய உச்சியிலும் மார்பிலும் இரு உள்ளங்
கைகளிலும் சிலுவை வடிவமாக இட்டனர். இடுகை
யில் அவ்வத்தியக்ஷகர் "அரசர்கள், குருக்கள்கள், தீர்க்
கதரிசிகள் முதலியோர் அபிஷேகம் பெற்றதுபோ
லவே நீரும் அபிஷேகம் பெறுவீராக. பிதா, குமாரன்,
பரிசுத்தாவி என்ற மூவருடைய பெயராலும் அபிஷே
கம் பெறுவீராக" என்று கூறினர். பின்பு நம் சக்ர
வர்த்தி காண்டர்பரி அத்தியக்ஷகர் முன்பாக முழந்தா
ளிட்டு அவரால் ஆசீர்வதிக்கப் பெற்றார். பின்பு குரு
மார்கள் அவர்க்கு ராஜ சின்னங்களாகிய குதிமுள்,
பட்டாக்கத்தி, செங்கோல், கணையாழி முதலானவை
களைச் சமர்ப்பித்தார்கள். அவர் அவற்றையெல்லாம்
தாங்கிக்கொண்டு தமதாசனத்தில் வீற்றிருந்தனர். பின்
னர் காண்டர்பரி அத்தியக்ஷகர் எழுந்து கிரீடத்தை
எடுத்துக் கொண்டுபோய்ப் பலிபீடத்தண்டைவைத்து
உரத்தகுரலுடன் ஜெபம் செய்துவிட்டு மீண்டும் அக்
கிரீடத்தை எடுத்துக்கொண்டு மற்றைக் குருமார்கள்

தம்மைச் சூழ்ந்தவரா நம் சக்ரவர்த்தியிடம் அனுமதி அவருடைய சிரத்தின்மீது அதிக மரியாதையுடனும் வைதிகசிரத்தையுடனும் தாரணம் செய்தனர். அவ்வாறு நம் சக்ரவர்த்திக்குக் கிரீடதாரணம் ஆனவுடனே அம்மண்டபத்திலுள்ளிருந்த கோமான்களா பியர்களும் தத்தம் முடிகளின்மீது சிறு கிரீடங்களைத் தாரணம் செய்துகொண்டார்கள். உடனே அம்மண்டபத்திலுள்ளிருந்த விளக்குகளின் விசை முடுக்கப்படவும் அங்கெங்கும் கோடிசூரிய பிரகாசமாயிற்று. அவ்விடமிருந்த பிள்ளைகள் அரசர் வாழ்க! வாழ்க! என மங்களம்கூறி ஆர்ப்பரித்தார்கள். எக்காளம் முதலியவை முழங்கின. மணி ஓசை மலிந்தது பீரங்கிகள் அதிர்ந்தன. அரசர்க்குக் கிரீடதாரணம் ஆய்விட்டதென்ற செய்தி ஒருக்ஷணத்தில் தேசமெங்கும் பரவியது. பின்பு காண்டர்பரி அத்தியக்ஷகர் ஓர் ஜெபரூபமான பிரசங்கத்தில் நம் சக்ரவர்த்தியின் கடமைகளை எடுத்துக்காட்டி அவற்றை நிறைவேற்றும் திடம் அவர்க்கருளுமாறு பகவானைப் பிரார்த்தித்தார். இது முடிந்ததும் திவ்யமான ஆடை யாபரணாலங்கிருதராக விளங்கும் நம் சக்ரவர்த்தியைச் சிம்மாசனத்தில் ஆரோகணிக்கச் செய்து காண்டர்பரி அத்தியக்ஷகர்முதலிய அவரது பிரஜாகோடிகளனைவரும் அவர்க்குமுன் முழந்தாள் படியிட்டு ராஜவிசுவாச சத்தியஞ் செய்துகொடுத்



தார்கள். முதலாவது குருமார் அனைவர்க்கும் பிரதிநிதியாகக் காண்டர்பரி அத்தியக்ஷகர் எழுந்துசென்று சக்ரவர்த்தியின் சந்நிதியில் முழந்தாள் படியிட்டு "காண்டர்பரி அத்தியக்ஷகனாக இருக்கும் பிரடரிக் என்ற நாமமுள்ள நான் என்றைக்கும் உம்மிடத்தில் விசுவாசத்துடன் இருப்பேன்" என்பது முதலியவற்றை உறுதியிட்டு எழுந்து அவரது இடது கன்னத்தில் முத்தமிடப் போகையில் தமது அசக்தியால் தளர்ந்து விழப்போவது கண்டு அவரை நம் சக்ரவர்த்தி தமது இரு கரங்களாலும் பற்றியெடுத்துத் தம் முகத்தண்டை சேர்க்க அவரும் முன் னினைத்தபடியே முத்தமிட்டுச் சென்றனர். மற்ற குருமார்கள் அனைவரும் தங்கள் தங்கள் இடங்களில் இருந்தபடியே முழந்தாள் படியிட்டு உறுதியிட்டார்கள். பின்பு நம் சக்ரவர்த்தியின் புதல்வராகிய ஜார்ஜ்வேல்ஸ் இளவரசர் எழுந்து கோமக்களாதியர்க்குப் பிரதிநிதியாகச்சென்று சக்ரவர்த்தியின் சமுகத்தில் தமது முடியின்மீதுள்ள கிரீடத்தைக் கழற்றிவிட்டு முழந்தாள் படியிட்டு அவரிடத்தில் என்றும் நன்றியுடன் இருப்பதாக உறுதியிட்டு எழுந்து அவரது இடது கன்னத்தில் முத்தமிட்டுவிட்டுத் திரும்பினர்; முறைப்படி இவர் இவ்வாறு செய்துவிட்டுத் திரும்பவும் உடனே அவரை அன்பின் மிகுதியால் நம் சக்ரவர்த்தி தமது இரு கரங்களாலும் பற்றி இருகத்

தழுவித் தமது மார்போடணைத்து முத்தமிட்டனர். இளவரசரின் கண்களில் நீர் பெருகியது. மற்ற கோமக்களாகிய ஏனையரும் தத்தம் இடங்களில் இருந்தபடியே முழந்தாள் படியிட்டு இறுதியிட்டனர். உடனே அரசர் நீடுவாழ்க என்று அனைவரும் ஆர்ப்பரித்தனர். இவ்வாறு நம் சக்ரவர்த்தி முடிசூட்டப்பெற்றுச் சிம்மாசனத் தமர்ந்ததும் சக்ரவர்த்தினியும் கிரமப்படியே முடிசூட்டப்பெற்று நம் சக்ரவர்த்தியின் ஆசனத்துக்குச் சற்றேதாழ உள்ளதோர் சிம்மாசனத்தில் கொலுவாக வீற்றிருந்தனர். பின்பு ராஜ தம்பதிகள் இருவரும் ராஜ குடும்பத்தைச் சார்ந்த மற்றவர்களுடன் பசித்த நிங்க நினை யருந்திப் பகல் 2 மணிக்கு முன்போலவே குருமாரதியர்கள் புடை சூழ்ந்துவர வெஸ்ட்மினிஸ்டர் மண்டபத்தைவிட்டுப் புறப்பட்டு ராஜாங்க ரதமேறிப் பவனிபோந்து 2-55க்குப் பக்கிங்ஹாம் அரண்மனையடைந்தனர். வழிகளில் அமைத்திருந்த அலங்கார மண்டபாதிகளின் சிறப்பும் ஜனங்கள் ஆனந்தத்தால் புரிந்த ஆர்ப்பரிப்பின் மிகுதியும் அன்றிரவில் லண்டன்மா நகரெங்கும் புரிந்திருந்த தீபாலங்காரக் காட்சியின் பொலிவும் புனைந்துரைக்க ஒருவராலும் இயலாது.

"அரசர்து கோலத்தில் சென்ற இந்திய கலோனியல் குதிரைத் துருப்புகள் தவிர அவருடன் மூன்று இந்திய ஏடிகாங்குகளும் இருந்தனர். அவர்கள் குச்பீஹார்



நாட்டரசர், இடார்மகாராஜா அவர்கள், குவாலியர் நாட்டு இந்திய அரசர் ஆகிய இவர்களாம்.

## பதினேழாம் அத்தியாயம்.

## குணாதிசயங்கள்.

நம் சக்ரவர்த்தியின் கல்யாண குணாதிசயங்கள் அனைத்தையும் தனித்தனி எடுத்து விவகரிக்க எவராலும் இயலாது. ஆதலின் அவற்றுட் சிற்சிலவற்றை மட்டும் எடுத்துக்கூறி நம்சிறுநூலை முடிக்கக் கருதுகின்றோம்.

கிருஷி விஷயத்தில் நம்சக்ரவர்த்திக்கு அதிக அபிமானமுண்டு. ராஜாங்க விவசாய கழகத்தின் 1875- ஜூ-இன் 5-ல் நிகழ்ந்த பதினைந்தாவது வருஷோற்சவத்தின் போது செய்த பிரசங்கத்தில் அவர் "எனக்கு விவசாய விஷயத்தில் அதிக அக்கரையுண்டு என்ற விஷயத்தை நான் என்மனதார உரைக்கின்றேன்" எனக்கூறியுள்ளார். அவர் வேல்ஸ் இளவரசராக இருந்த காலத்தில் தம்சொந்த பூஸ்திதியாகிய எண்ணாயிரம் ஏகரா விஸ்திரணமுள்ள விளைநிலங்களை எல்லாம் வெகுகீர்த்தியாகப் பராமரித்து வந்தார். அவருடைய பாளையத்தில் வசித்துக் கிருஷிபுரிந்துவந்த குடியானவர்களை அவர் நடத்திவந்த விதமும் மிகச்சிறந்தது.



"இவ்விடத்திற்போல ஏழைகளைச் சீராகப் பராமரித்ததை நான் எங்குங்கண்டதில்லை. பூஸ்திதியை வைத்திருக்க வேண்டியவிதம் இன்னதென்பதற்கு மாதிரி காட்டும்படி யாராயினும் என்னைக் கேட்டால் நான் சற்றும்தாமதமின்றி சாண்ட்ரிங்ஹாம் பாளையத்தைத் தான் எடுத்துரைப்பேன்" என்று நம்சக்ரவர்த்தியின் கிராமத்தை அறிந்தோர் ஒருவர் கூறுகின்றார்.

அங்கேயுள்ள குடியானவர்கள் வசிக்கும் வீடுகளைத்தும் முன்பக்கத்தும் பின்பக்கத்தும் பூந்தோட்டம் முதலியவைகளை உடையனவாகக் குப்பை செத்தை முதலியன இன்றிச் சுகாதாரத்துக்குகந்த நிலையில் விளங்குகின்றன. ஒவ்வொரு குடியானவனுக்கும் பகல் மூன்றுமணிவரைக்கும்தான் வேலை. அக்குடியானவர்களின் சம்பளமோ வருஷாவருஷம் எழுநூற்றிருபதுமுதல் தொளாயிரம் ரூபா வரையில் உண்டு. தங்கள் எஜமானுக்கு அவர்கள் செலுத்த வேண்டிய இறையோ வருஷம்முழுதிலும் நாற்பத்தைந்து ரூபாய்க்குமேல் இல்லை. அக்குடியானவர்கள் தங்கள் வேலை முடிந்ததும் சென்று வினோதமாகக்காலங்கழித்தற்காக அந்தக் கிராமத்தில் நம்சக்ரவர்த்தி ஒரு நேர்த்தியான சங்கமண்டபம் அமைத்திருக்கின்றார். அங்கே அநேக புத்தகங்களும் வர்த்தமானப் பத்திரிகைகளும் உண்டு

அங்கே புஸ்தகாதிகளைப் படித்தல் முதலிய சத்கால க்ஷேபம் செய்யலாமே யன்றிச் சூதாடல் முதலிய தீச் செயல்களை ஒருவரும் செய்யமுடியாது. சாராயம் முதலிய லாகிரிவஸ்துக்களை விற்குங்கடை அந்தப் பாளையத்திலேயே கிடையாது. அதற்குப் பிரதியாக அங்கே கைத்தொழிற் கல்விச்சாலைகள் பல இருக்கின்றன. குடியானவர்களின் சிறுவர்கள் அவைகளிற் சென்று பலவேறு கைத்தொழில்களையும் பயில்வார்கள். வியாதிஸ்தர்களுக்குச் சிகிச்சை செய்விக்க வைத்தியசாலை ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. அங்கே நோயாளிகள் சென்று இலவசமாகச் சிகிச்சை பெறுவார்கள். அங்கே தையற்சாலை யொன்றிருக்கின்றது. மெல்லியலார் அங்கு சென்று தையல்கற்றுக் கொள்வார்கள். மாதிரி அடுக்களை ஒன்றிருக்கின்றது. இஷ்டமானவர்கள் அங்குச்சென்று சமையற்றொழில் கற்றுக்கொள்வார்கள். எல்லா மிராசுதார்களும் நம் சக்ரவர்த்தியாகிய மிராசுதாரரைப் பின்பற்றி யொழுகத் தொடங்கினால் உலகுக்கென்ன குறையிருக்கும்?

பசுக்கள்முதலிய கால்நடைகளை வளர்த்தலில் நம் சக்ரவர்த்திக்கு அதிகப்பிரியம். தாம் வேல்ஸ் இளவரசராக இருந்தகாலத்தில் தாம் விவசாய விஷயமாக எவ்வளவுகாலம் செலவிட்டு வந்தாரோ அவ்வளவுகாலம் செலவிட்டுத் தாம் பூபாலராக இருக்கும் இப்போது வர



க்காவிட்டாலும் கால்நடைகளை வளர்க்கும் கைங்கர்யத்தைமட்டும் விட்டுவிடவில்லை.

நாடகம் பார்த்தலில் நம் சக்ரவர்த்திக்கு அதிக இஷ்டம். ஆதலின் அவர் அடிக்கடி நாடகசாலைகட்குச் செல்வார். அவருடைய பிரவேசமே அந்நாடகக் கூட்டத்தாரின் வருவாய் ஆயிரமடங்கதிகரித்தற்குப் போதியதாக இருப்பினும் மற்றவர்களைப் போலவே தாமும் பிரவேசச் சீட்டுக்கு உரியவிலையைச் செலுத்தாது விடார். இவர் விஷயத்தில் நாடகங்களின் அதிபர்கள் ஒரேஒரு காரியத்தில்மட்டும் தங்கள் ஒழுங்கின்முறை கடப்பார்கள். அதாவது இடமுள்ள வரையும்தான் டிக்கட்டுகள் கொடுக்கப்படும் என்பது நாடகக் கூட்டத்தாரின் ஏற்பாடு, நம் சக்ரவர்த்திவருங் காலங்களிலேயோ என்றால் அவர்கள் இவ்வேற்பாட்டைக் கடந்து இடமில்லாதிருந்தாலும் ஓர் ஆசனத்தைக் காலிசெய்து அவர்க்கு இடந்தருவார்கள். ஆனால் அவ்வாறு நேரும்போதெல்லாம் நம்சக்ரவர்த்தி தமக்காக ஆசனத்தைக் காலிசெய்த கனவானுக்குத் தம் காரியதரிசிமூலமாக வந்தனம் செலுத்தாதுவிடார். ஆயினும் இது அடிக்கடி நிகழ்வதில்லை, ஏனென்றால் வேண்டிய டிக்கட்டுகளை முன்னைய நாளிலேயே வாங்கிவிடுவது நம் சக்ரவர்த்தியின் சாதாரணவழக்கம். மற்றெல்லா விஷயங்களிலும் அவர்கள் தங்கள் ஏற்பாட்டின்படியே

சகலமும் நடக்கவேண்டுமே யன்றித் தமக்காக எவ்வித ஏற்பாட்டையும் நடந்து மற்றஜனங்களுக்குச் சங்கடத்தை உண்டுபண்ணக் கூடாது என்பது நம்சக்ரவர்த்தியின் அபிப்பிராயம். ஒரு நாடகக்காரர் நம்சக்ரவர்த்தி நாடகவிளம்பரத்தில் குறித்த நேரத்துக்குப் பின் சிறிது தாமதித்துச் செல்லநேர்ந்த ஒருநாளில் குறித்தகாலத்தில் திரையை உயர்த்தி நாடகத்தைத் தொடங்காது அவர் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்து அவர் வந்தபின் திரையை உயர்த்தினர். அதை அறிந்ததும் அந்நாடகக்காரர்மீது நம்சக்ரவர்த்தி அதிகமாகக் கோபித்துக் கொண்டார்.

சுருட்டுக் குடிப்பதில் நம்சக்ரவர்த்திக்கு அப்பியாசமுண்டு. அவர்க்கு அவரது நண்பர்களும் சுற்றத்தார்களும் வெகுமதியாக அளித்த வெள்ளி தங்கங்களாலியன்ற சுருட்டுப் பெட்டிகள் சாண்ட்ரிங்ஹாம், மாரல்பர்ரோ அரண்மனைகளில் ஆயிரம் ஆயிரமாக நிறைந்து கிடக்கின்றன. அவர் அரசராவதற்குச் சற்றுமுன்னால் ஒருநாள் ஓர் அக்கினிவாதை விஷயமாக ஓர் சாமான்ய வேலைக்காரனிடம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். பின்பு சம்பாஷணை முடிந்ததும் அவர் தம்முடைய சட்டைப் பையிலிருந்த சுருட்டுப் பெட்டியைத்திறந்து ஓர் சுருட்டை எடுத்து அவ்வேலைக்காரனுக்குத் தந்தார். அவன் அதனை அன்போடேற்று



உடனே ஒருகாகிதத்தில் சுருட்டித் தன்பையில் போட்டுக்கொண்டான். உடனே இவர் அவனைப்பார்த்து நீ சுருட்டுப் பிடிப்பதில்லையா?' என்றார். அதற்கவன் 'ஐயா, எனக்குச் சுருட்டுப் பிடிப்பது சகஜந்தான். ஆனால் வேல்ஸ் இளவரசர் கையிலிருந்து எனக்குச் சுருட்டுக்கிடைப்பது சகஜமல்ல, ஆகலின் அதனைச் சேமித்து வைத்துக் கொண்டேன் என்றான். அது கேட்டதும் அப்போது வேல்ஸ் இளவரசராக இருந்த நம்சக்ரவர்த்தி சிரித்துக்கொண்டேபின்னும் ஓர்சுருட்டையெடுத்து 'இப்போது குடித்தற்காக இதை ஏற்றுக்கொள்' என்று அவனுக்குத் தந்தார்.

அரசரிடம் பற்றுவரவுடையவர் என்பது பெரிய கவுரவமாதலின் எந்த வியாபாரியையும் குறைந்தது ஒரு வருஷமாயினும் பரிசோதித்தேயன்றி அவரிடம் நம்சக்ரவர்த்தி வரவுசெலவு செய்வதில்லை. அவருடைய பிறந்த நாள்தோறும் அவரிடம் வரவுசெலவுடைய வியாபாரிக ளனைவரும் ஒருங்குகூடி விருந்தருந்துவது வழக்கம். வரவுசெலவாதிகளில் அற்பமுங் கூடவிடாமல் அனைத்தையும் அவ்வப்போதே மாரல்பர்ரோவிலுள்ள கணக்குப் புஸ்தகங்களில் பதிவுசெய்வித்து விடுவது நம் சக்ரவர்த்தியின் வழக்கம். அவ்வாறு அனைத்தும் பதிவுசெய்யப் பட்டிருப்பதும் அன்றி கிளார்க்குடனே அப்புஸ்தகங்களிலுள்ள எதையும் எடுத்துப

பார்க்கக் கூடியதாக அட்டவணையும் அமைக்கப்பட்டிருக்கும். ஆதலின் எந்த வியாபாரியாவது ஒரே விஷயத்திற்காக இரண்டுமுறை கணக்கனுப்பிவிட்டால் அவனை நம் சக்ரவர்த்தி பின் ஒருபோதும் ஆதரிப்பதில்லை. அவனுடைய பற்றுவரவை அம்மட்டுடன் ஒழித்து விடுவார்.

கடிதப் போக்குவரவு செய்வதில் நம் சக்ரவர்த்தி அதிக நேர்மையுடையவர், அவர்க்குச்செல்லும் கடிதங்களனைத்தையும் அவரது காரியதரிசியாகிய சர் ப்ராங்கிஸ் நொலேஸ் என்பவர் ஏற்றுச் சொந்தக் கடிதங்கள், விவகார சம்பந்தமானவை, மற்ற ஈனுகலம்பகத்தைச் சார்ந்தவை என மூன்று பகுதிகளாகப் பிரிப்பார். அவற்றுட் சொந்தக் கடிதங்களையெல்லாம் உடையாது அப்படியே சக்ரவர்த்தியிடம் அனுப்புவிடுவார். மற்றவைகளைப் பார்த்து அடங்கிய விஷயங்களைக் குறிப்பிட்டு ஏற்றவாறு விடையுமெழுதிச் சக்ரவர்த்தியின் அனுமதிக் கனுப்புவார். நம் சக்ரவர்த்திக்கு வரும் கடிதங்கள் மலைமலையாகக் குவிந்தாலும் அவற்றுக்கெல்லாம் அவர் உடனுக்குடனே ஏற்ற மரியாதையுடன் உத்தரமெழுதி அனுப்பிவிடுவார். நம் சக்ரவர்த்தி நாட்டுக்கே அரசராக இருத்தலின் கடிதப்போக்குவரவு செய்வதில் அவர்க்குச் செல்விராது என்று சிலர் நினைக்கலாம். அதுவின்றன் எண்ணம். மற்றவர்களைப்போல



லே அவரும் கைப்பொருள் செலவிட்டே தான் கடிதாதிகளை அனுப்புகின்றார். பலவே இடங்களுக்குத் தந்தியனுப்புதலில் மட்டும் அவர்க்கு வருஷாவருஷம் பதினையாயிரம் ரூபா ஆகின்றதென்றால் மற்றகடிதாதிகளை அனுப்புவதில் என்ன ஆகும் என்பதை இதைப் படிப்போரே யூகித்துக் கொள்ளட்டும்.

கருமம் செய்தலில் நம் சக்ரவர்த்தி அதிக சிரத்தையுடையவர். ஆனால் சாமான்யர்களைப் போல நேர்ந்தபடி யெல்லாம் பொருளை வாரியிறையார். பாத்திரமறிந்தே தான் செய்யத் துணிவார். அவரிடத்தில் ஓர் தர்மவிஷயமாக யாரேனும் சென்றால் அவர்கள் கூறும் தர்மவிஷயம் வாஸ்தவத்தில் உபயோகமுள்ளதாகு என்பதையும் தாம் தரும்பொருள் அத்தர்மவிஷயத்துக்கே பயன்படுமா என்பதையும் நீர ஆய்ந்து தெளிந்தபின்பே யன்றி அதற்குபகரிக்கத் துணியார். அதனாலேதான் எந்தத் தர்மத்துக்காயினும் நம் சக்ரவர்த்தியாவது சக்ரவர்த்தினியாவது நூறு அல்லது ஐம்பது உதவினாலுங்கூட மற்ற மகாஜனங்களால் ஆயிரம் ஆயிரமாக வசூலாகி விடுகின்றது. ஏழைகளின் உபகாரார்த்தமாக வைத்தியசாலைகளை அமைக்கும் விஷயத்தில் அதிபாலயம் முதற்கொண்டே அவர் செய்து வந்திருக்கும் தருமம் இவ்வளவவ்வளவல்ல.

வேட்டை யாடுதல் முதலிய தேகாப்பியா சாதிகளில் அவர்க்குள்ள உற்சாகம் எவ்வளவதிகம் என்பது முன் விவரித்திருக்கும் சரித்திரத்தால் விசதமான விஷயமே.

நமது இந்தியாவின்மீது அவர்க்கு அதிக அபிமான முண்டு. இந்தியாவைக் காணவேண்டு மென்று தாம் அநேகநாளாக ஆசைப்பட்டுக் கொண்டிருந்ததாக அவர் 1875-ல் பம்பாயில் கூறியதை முன்னமே எடுத்துக்காட்டி யிருக்கின்றோம். அவர் தமது இந்திய யாத்திரை முடிந்து இங்கிலாந்து சென்ற சில வருஷங்களுக்குப் பின் இந்தியர்களின் உபயோகத்துக்காக இங்கிலாந்தில் ஏற்பட்ட ஓர் சபா மண்டபத்தைப் பிரதிஷ்டைசெய்ய நேர்ந்தபோது "நான் இந்தியாவுக்குச் சென்றபோது அத்தேசத்தின் சமஸ்தானாதிபதிகள் மட்டுமல்ல; அங்கேயுள்ள பலவேறுவகைக் குடிகளுங்கூட ஒருங்குகூடி என் நல்வரவேற்று அங்கங்கே எனக்குச்செய்த உபசாரத்தின் மகத்துவத்தை நான் மறந்துபோகவில்லை. இனிமறக்கப் போவதுமில்லை என்று உறுதியாகச் சொல்லுகின்றேன். மஹாராணியாரின் இந்தியராஜ்ய சம்பந்தமாக நான் எடுத்துக்கொள்ளும் அக்கறையை ஒருபோதும் கைவிடேன். இந்தியர்களும் இங்கிலீஷ்காரர்களும் நேசித்து ஒருவர் கருத்தை மற்றவர்க்கு அறிவித்துட



பயனடையத் தக்கதாக இதுபோன்ற சபா மண்டபங்கள் ஏற்படவேண்டுவது அதிக அவசியமே" என்று கூறினார். அவருடைய கிரந்த கோசத்தில் இந்தியாவைப் பற்றி இதுவரை வெளிவந்திருக்கும் சகல கிரந்தங்களிலும் ஒவ்வோர் பிரதியாக்கிவைத் திருக்கின்றார். 1857ல் நடந்த சிப்பாய்கலகம் முடிந்து இந்துதேச ஆட்சியை விக்டோரியா மகாராணியார் மேற்கொண்டவுடனே அவர் நம் தேசத்தவர்களுக் கனுப்பிய உறுதிமொழி விளம்பரத்தின் வாக்கியங்களைத்தையும் ஆதியில் அமைத்தவர் நம் சக்ரவர்த்தியே என்று ஓர் பெரியோர் கூறுகின்றார்.

கோமகன்களுடன் கைகுலுக்குவது போலவே கூலிக்காரர்களுடனும் நம் சக்ரவர்த்தி கைகுலுக்குவார். கூலிக்காரரின் வந்தனோபசாரப் பத்திரிகையைத்தான் அவர் அதிக மகிழ்ச்சியுடன் ஏற்பது. 1885-ல் அவர் அயர்லண்ட் சென்றிருந்தபோது டப்ளின்மா நகரத்துள்ள ஏழைகளின் குடிசைகளுக்கு முன்னறிவியாமலே அடிக்கடி விஜயம்செய்து வியப்பூட்டினார். 1867-ல் கிளார்க்கன்வெல் அபாயத்தில் அகப்பட்ட நோயாளிகள் நாற்பது பெயரையும் வைத்தியசாலையில் தனித்தனி சந்தித்து ஆறுதலான மொழிகள்கூறி ஒவ்வொ[illegible]ருக்கும் தம்முடைய ஞாபகார்த்தமாக ஒவ்வோர் [illegible]னைச் சன்மானம்செய்து திரும்பினார். அதற்[illegible]

ண்டு வருஷங்களுக்குமுன் தெற்குலண்டனில் கூலிக்காரர்கள் ஏற்படுத்திய கண்காட்சி யொன்று ஆதரவில்லாமல் தவித்துக் கொண்டிருந்ததை அறிந்ததும் அக்காலில் மழையும் சேறுமாக இருந்ததையும் கவனியாது உடனே இவரொன்று புறப்பட்டு அங்குபோய் அபிமானித்து வந்தனர். உடனே ஜனங்கள் ஆயிரம் ஆயிரமாகத் திரண்டுசெல்லத் தொடங்கவே அக்கண்காட்சி அதிக லாபகரமாக முடிந்தது. இவ்வாறே கூலிக்காரர்களுடைய க்ஷேமார்த்தமாக எவ்வளவோ உபகாரங்களைத் தருணமறிந்து சக்ரவர்த்தி செய்திருக்கின்றார். ஞாயிற்றுக் கிழமைகளில் ரொட்டி சுடுவது சரியல்ல என்று ஓர் பிரஸ்தாபம் ரொட்டிக் காரர்களுக்குள்ளாகச் சமீபகாலத்துக்குமுன் நடந்து கொண்டிருந்தது. இது சக்ரவர்த்தியின் காதுக்கெட்டியதும் அவர் தமது மாரல்பரோ அரண்மனைக்கு ரொட்டிபோடும் ரொட்டிக்காரருக்கு மனச்சங்கடம் உண்டாகாதபடி அவர்களை நோக்கி "இனி ஞாயிற்றுக்கிழமைகளில் இங்கே ரொட்டி போடவேண்டுவதில்லை." என்று உத்தரவு செய்துவிட்டார்.

சக்ரவர்த்தி அதிக பரோபகார சிந்தை உடைய [illegible] உபகாரத்தை அதிக சிரத்தையுடன் செ[illegible] பதும் முன் எடுத்துக்காட்டி யிருக்கும் பல [illegible] விளங்கக் கூடியன. இன்னும்



ஒரே ஒரு விஷயம் எடுத்துக் காட்டி இந்நூலை முடித்து விடுகின்றோம். அவர் இளவரசராக இருந்த காலத்தில் ஒரு நாள் லண்டன்மாநகரத்துத் தெருவழியாகச் சவாரி சென்று கொண்டிருந்தார். அப்போது இவர் சவாரி சென்ற தெருக்களுள் ஒன்றில் ஓர்பக்கத்தே நின்று கொண்டிருந்த ஓர் குருடன் அத்தெருவின் மறுபக்கத்துக்குப்போக வேண்டுமென்று அதிக முயற்சி செய்து கொண்டிருந்தான். நம்முடைய ஊர்த்தெருக்களிலேயே குருடர்கள் ஒருபக்கமிருந்து மற்றபக்கம் போவது அதிக பிரயாசமான காரியம். கண்ணுள்ளவர்களுங்கூட லேசில் கடந்துபோக முடியாத லண்டன்மாநகரத் தெருவில் கடந்து போவது குருடனுக்குச் சாத்யமல்ல என்பதில் என்ன தடை? அவன் அவ்வாறு தவித்துக்கொண்டிருந்ததைக்கண்டதும் சக்ரவர்த்தி தாம் ஏறியிருந்த வண்டியினின்றும் இறங்கி அக்குருடனைக் கையைப்பற்றி அழைத்துக் கொண்டுபோய் அத்தெருவின் எதிர்ப்பக்கத்தே விட்டுவிட்டுத் திரும்பிவந்து மீண்டும் வண்டியேறித் தம்முடைய மார்க்கத்தே சென்று விட்டார். இது நிகழ்ந்த இரண்டு மூன்று நாட்களுக்குப்பின் வெள்ளியால் இயன்றதோர் பெரிய நேர்த்தியான மைக்கூடு மாரல்பரோ அரண்மனைக்கு வந்து சேர்ந்தது. அதை அனுப்பியவர் இன்னாரென்பது ஒருவருக்கும் தெரியாது. அதன்மேல் "ஒரு

குருட்டுப் பிச்சைக்காரனை வேல்ஸ் இளவரசர் வீதி கடத்தியதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒருவனால் அவரது அன்பும் கிறிஸ்தவ ஜீவியத்துக் கேற்றதுமான செய்கையின் ஞாபகார்த்தமாய்ச் சமர்ப்பிக்கப்பட்டது" என்று எழுதப்பட்டிருந்தது.

இறைவனை ஈசன் காக்க.

முற்றிற்று.